பக்கங்கள் : பதினாறு

# உதயன்

Registered as a Newspaper

விலை
ரூபா
8.00

www.uthayan.com

சுடர் 19 வள்ளுவர் ஆண்டு 2035 ஆவணி 19 சனிக்கிழமை (04-09-2004) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்:284

நாடு திரும்பியதும் ஜனாதிபதி தரும் தெம்பூட்டும் செய்தி

# மீண்டும் யுத்தம் வரவேவராது

# அடித்துக் கூறுகிறார் சந்திரிகா!

## இறுதித் தீர்வுகிட்டும் நம்பிக்கை அதிகரித்திருப்பதாகவும் உறுதி



கொழும்பு,செப்ரெம்பர்4

**"மீண்டும் யுத்தம் வ்ரவே வராது. யுத்தத்திற்கு வாய்ப்பு இல்லவே இல்லை" - இப்படி அடித்துக் கூறுகிறார் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க.**

**அமைதி முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டு இறுதித் தீர்வு கிட்டுவதற்கான வாய்ப்புகள் மேலும் பிரகாசமாகத் தென்படும் நம்பிக்கை தமக்கு ஏற்பட்டுள்ளது என்றும் அவர் சொன்னார்.**

நேற்று மாலை ஜனாதிபதி மாளிகையில் வெளிநாட்டுச் செய்தியாளர்களைச் சந்தித்த சமயமே அவர் இவ்வாறு கூறினார்.

தனிப்பட்ட விஜயம் ஒன்றை மேற்கொண்டு கடந்த வாரம் லண்டனுக்கும் பின் பரிஸுக்கும் சென்றிருந்த அவர், நேற்றுக்காலை நாடு திரும்பினார்.

திரும்பிய கையோடு இந்த நம்பிக்கை தரும் கருத்தை அவர் வெளியிட்டார். அவர் மேலும் கூறியதாவது:-

இந்த அமைதி முயற்சியை முன்னெடுக்கும் விடயத்தில் ஜே.வி.பியைக் கையாள்வது எனக்கு அப்படியொன்றும் சிக்கலான விடயமல்ல; நெருக்கடியான விவகாரமுமல்ல.

நாங்கள் முன்னைய அரசு போல புலிகளு

(16ஆம் பக்கம் பார்க்க)

## பிரபாவுக்கு நீதிமன்ற நோட்டீஸ் மே/பா ரணில் விலாசத்துக்கு

### ஜே.வி.பி., ஹெல உறுமய வழக்கில் உத்தரவு

விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை ஒக்ரோபர் முதலாம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று அழைப்பாணை விடுத்திருக்கிறது.

வேலுப்பிள்ளை பிரபாகரனுக்குரிய அழைப்பாணையை மேற்பார்த்து ரணில் விக்கிரமசிங்கவின் வீட்டு முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு இலங்கை மேன்முறையீட்டு நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுக்கும் இலங்கை அரசுக்கும் இடையில் 2002 பெப்ரவரியில் மோதல் தவிர்ப்புக்கு வழிசெய்யும் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்து கொள்ளப்பட்டது.

புலிகளின் சார்பில் அதன் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனும், இலங்கை அரசின் சார்பில் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டிருந்தனர்.

இந்த ஒப்பந்தம், இலங்கை அரசமைப்புக்கு முரணானது என்பதால் அதை ரத்துச் செய்ய உத்தரவிடவேண்டும் என மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

ஜே.வி.பி., ஜாதிக ஹெலஉறுமய ஆகிய அரசியல் கட்சிகள் மற்றும் ஜாதிக சங்கம் எனும் பௌத்த அமைப்புக்களின் சார்பிலும் மற்றும் சில பிரமுகர்களின் சார்பிலும் இந்த மனுத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

(16ஆம் பக்கம் பார்க்க)

## ஓட்டமாவடியில் ஹோட்டல் மீது மீண்டும் நேற்றுக் குண்டு வீச்சு

ஏறாவூர்,செப்.4

மட்டக்களப்பு ஓட்டமாவடியில் ஹோட்டல் ஒன்றின் மீது நேற்று வெள்ளிக்கிழமை அதிகாலை கைக்குண்டுத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

அதிகாலை 2 மணியளவில் முகமூடியணிந்த நிலையில் வந்த இனந்தெரியாத நபர்கள் ஹோட்டல் மீது கைக்குண்டை வீசிவிட்டு துப்பாக்கிப் பிரயோகமும் மேற்கொண்டுள்ளனர். இச்சம்பவத்தில் ஹோட்டலுக்குச் சேதமேற்பட்ட போதிலும், எவரும் காயமடையவில்லை என்று வாழைச்சேனைப் பொலீஸ் நிலையப்பொறுப்பதிகாரி கே.ஜி.தர்மவர்தன தெரிவித்தார்.

இச்சம்பவம் தொடர்பான விசாரணைகளை பொலீஸார் மேற்கொண்டு வருகின்றனர் எனவும் அவர் கூறினார்.

# அரசுக்கு முண்டு கொடுக்க முடிவு எடுத்தது இ.தொ.கா.!

### நிபந்தனையற்ற ஆதரவு என்று ஆறுமுகன் நேற்று அறிவிப்பு

கொழும்பு,செப்.4

நாடாளுமன்றத்தில் பெரும்பான்மை இல்லாமல் தள்ளாடிக்கொண்டிருந்த ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தலைமையிலான ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் சிறுபான்மை அரசுக்கு முண்டுகொடுக்க முடிவு செய்துவிட்டது இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்.

தனது அணியைச் சேர்ந்த எட்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும் நாடாளுமன்றததில அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவு வழங்குவா என இ.தொ.காவின் தலைவர் ஆறுமுகன் தொண்டமான் நேற்று உத்தியோகபூர்வமாக அறிவித்தார்.

இ.தொ.காவினர் அமைச்சுப் பதவி எதனையும் ஏற்பார்களா என்பது குறித்து முடிவேதும் எடுக்கப்படவில்லை என்றும் அவர் கூறினார்.

"தடைப்பட்டுள்ள சமாதானப் பேச்சையும் நாட்டின் அபிவிருத்தித் திட்டங்களையும் உடனடியாக ஆரம்பிக்கவேண்டுமானால் உறுதியான ஓர் அரசு தேவை. இதன் அடிப்படையிலேயே ஜனாதிபதியின் அரசுக்கு நிபந்தனையற்ற ஆதரவை வழங்கத் தீர்மானித்துள்ளோம்" என்றும் ஆறுமுகன் தொண்டமான் கூறினார்.

நேற்று கொழும்பு டிரான்ஸ் ஏஸியா ஹோட்டலில் இடம்பெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே அவர் இதனைக் கூறினார்.

"ஐக்கிய தேசியக்கட்சியின் சார்பில் போட்டியிட்ட நீங்கள் அக்கட்சிக்கு மாறாக இப்பொழுது திடீரென அரசுக்கு ஆதரவாகச் செயற்படப் போகின்றீர்கள் எனக் கூறுகின்றீர்கள். அதற்கு நீங்கள் அரசிடம் முன்வைத்துள்ள நிபந்தனைகள் என்ன? எதிர்பார்க்கும் அமைச்சுகள் எத்தனை?" - என்று அவரிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

"நாம் எந்தவிதமான நிபந்தனைகளையும் முன்வைக்கவில்லை. அமைச்சுக்களையும் கேட்கவில்லை" - என ஆறுமுகன் தொண்டமான் பதிலளித்தார். (16ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளின் மட்டு.,அம்பாறைத் தளபதிகள் நேற்று தலைவரைச் சந்திக்க வன்னிக்கு ஹெலியில்!

கிளிநொச்சி,செப்.4

விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தின் தலைவர்கள் நேற்று தலைவர் பிரபாகரனோடு ஆலோசனை கலப்பதற்காக ஹெலிகொப்டர் மூலம் வன்னி வந்து சேர்ந்தனர்.

மட்டக்களப்பு, அம்பாறை விசேட தளபதி ரமேஷ், துணைத் தளபதி ராம், அரசியல் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறைத் தளபதி ஜனந்தன், ஜெயந்தன் படையணித் தளபதி ஜெயாந்தன், முன்மாரிப் பிரிவு இராணுவப் பொறுப்பாளர் ரமணன் ஆகியோர் நேற்றுக்காலை 8.30 மணிக்கு கொக்கட்டிச்சோலையிலிருந்து விசேட ஹெலிகொப்டரில் புறப்பட்டு நேற்றுக் காலை 9.20 மணியளவில் கிளிநொச்சி வந்தடைந்தனர். மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டத்தின் இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளின் மாவட்டத் தளபதிகளுக்கும் இடையில் நடைபெறவிருக்கும் சந்திப்புக்கான தயார்ப்படுத்தல் தொடர்பான, உரிய அறிவுறுத்தல்களைத் தலைவர் பிரபாகரனிடம் பெற்றுக்கொள்ளும் நோக்கில் அவர்கள் வன்னிக்கு வந்தனர் என விடயமறிந்த வட்டாரங்கள் தெரிவித்தன.

மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் ஏற்பட்ட குழப்ப நிலைகளை அடுத்து இராணுவத்தினருக்கும் புலிகளின் உள்ளூர் தலைவர்களுக்கும் இடையிலான சந்திப்புகள் கடந்த மூன்று மாதங்களாக இடம்பெறாமல் தடைப்பட்டிருந்தன.

இந்தச் சந்திப்பை நேற்று நடத்துவதற்கு பின்னர் இணக்கம் காணப்பட்டது. ஆனால், சந்திப்புக்கு முன்னர் புலிகளின் உள்ளூர் தலைவர்கள் தலைவர் பிரபாகரனோடு ஆலோசனை கலக்க வேண்டிய தேவை இருந்ததால் புலிகள் - இராணுவம் சந்திப்பு அடுத்த செவ்வாய்க்கிழமைக்கு ஒத்திவைக்கப்பட்டது.

அதற்கு முதல் புலிகளின் உள்ளூர் தலைவர்கள் நேற்று ஹெலி மூலம் கிளிநொச்சிக்கு வந்து

(16ஆம் பக்கம் பார்க்க)

# தமிழ்ச்செல்வன் – மல்வத்த மகாநாயக்கர் சந்திப்புக்கு திகதி நிர்ணயிக்கப்படவில்லை

### கிளிநொச்சியில் வைத்து பெ.சந்திரசேகரன் தகவல்

கிளிநொச்சி,செப்.4

"மல்வத்த மகாநாயக்கரின் குழுவினர் வன்னிக்கு வந்தால் அவர்களை வரவேற்றுப் பேசுவதற்கு தாங்கள் தயார் என்று விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் உறுதிப்படுத்தியுள்ளார். ஆனால், அவர்கள் இருவருக்கும் இடையிலான சந்திப்புக்கு இன்னமும் திகதி நிர்ணயிக்கப்படவில்லை."

- இப்படித் தெரிவித்திருக்கிறார் மலையக மக்கள் முன்னணியின் தலைவரும் எம்.பியுமான பெ.சந்திரசேகரன்.

நேற்றுக் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியல் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனைச் சந்தித்த பின்னர் பத்திரிகையாளர்களுக்கு தகவல் வெளியிடுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தச் சந்திப்பில் தமிழ்ச்செல்வனோடு விடுதலைப் புலிகளின் சமாதானச் செயலகத்தைச் சேர்ந்த செல்வியும், கலந்துகொண்டார்.

எம்.பி.சந்திர[illegible] எம்பி, மலையக மக்கள் முன்னணியின் கொழும்பு அமைப்பாளர் எம்.சிவா ஆகியோரும் சந்திப்பில் பங்கு பற்றினர்.

நேற்று நண்பகல் 12.15 மணி முதல் பிற்பகல் 2 மணிவரை சந்திப்பு நீடித்தது.

அதன் பின்னர் சந்திரசேகரன் வழங்கிய செவ்வியின் முக்கிய அம்சங்கள் வருமாறு:-

*கேள்வி:* ஜே.வி.பியினர் மற்றும் மல்வத்தை பீடாதிபதி ஆகியோர் விடுதலைப் புலிகளைச்

(16ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

# ரஷ்யப் படைகள் அதிரடி கடத்தல் நாடகம் முடிவு!

ரஷ்யாவில் மூன்று நாள்களாகத் தொடர்ந்த கடத்தல் நாடகம் ரஷ்ய விஷேட படையினரின் அதிரடித் தாக்குதலுடன் நேற்று முடிவுக்கு வந்தது. நேற்றுக்காலை திடீரென பாடசாலையினுள் நுழைந்த படையினர் அங்கிருந்த ஆயுததாரிகள் மீது தாக்குதல் நடத்தி பணயக் கைதிகளாக இருந்தவர்களை வெளியேற்றினர்.

இந்த மீட்பு நடவடிக்கையில் மூன்று பேர் இறந்திருக்கலாம் என்றும் 200 இற்கும் மேற்பட்டவர்கள் காயமடைந்திருக்கலாம் என்றும் முதலில் வந்த செய்திகள் தெரிவித்தன.

ஜி.எம்.ரி. நேரப்படி காலை 9.05 மணியளவில் பாடசாலையினுள் வெடிப்புச்சத்தமும், துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்களும் கேட்டன என்று சாட்சிகள் தெரிவிக்கின்றன. தொடர்ந்து ரஷ்யப்படையினர் பாடசாலை நோக்கி ஓடினர்.

இந்த இடைநேரத்தில் 30 பணயக் கைதிகள் அங்கிருந்து தப்பி வெளியேறினர். பாடசாலையின் கூரைமுழுமையாக உடைந்து நொறுங்கி விழுந்ததாகத் தெரிவிக்கப்பட்டது. -

உள்ளே புகுந்த விசேட அதிரடிப்படையினர் தொடர் தாக்குதல்களை மேற்கொண்டனர். ஒரு மணித்தியாலத்தினுள் பாடசாலை தமது முழுமையான கட்டுப்பாட்டினுள் வந்துவிட்டதாக ரஷ்யப் படையினர் தெரிவிக்கின்றனர். இந்தத் தாக்குதலில் 158 பேர் காயமடைந்து வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டிருக்கின்றனர் என்பது உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

பாடசாலைக் கட்டட வளாகத்திலிருந்து குறைந்தது மூன்று சடலங்கள் அப்புறப்படுத்தப்பட்டதை அங்கிருந்தவர்கள் நேரில் கண்டுள்ளனர். அனைத்துப் பணயக் கைதிகளும் பாடசாலையை விட்டு வெளியேற்றப்பட்டுவிட்டார்கள் என அதிகாரிகள் கூறினர்.

படையினர் தாக்குதல் நடத்த ஆரம்பித்ததும் 13 ஆயுததாரிகள் மறைந்துவிட்டனர் என்று கூறப்படுகிறது. எனினும், மேலதிகத் தகவல்கள் எதிர்பார்க்கப்படுகின்றன.

இதற்கு முன்னர் மொஸ்கோ அரங்கம் ஒன்றினுள் இருந்த நூற்றுக்கணக்கானவர்களை தீவிரவாதிகள் பணயக்கைதிகளாகப் பிடித்து வைத்திருந்தபோது அவர்களை மீட்பதற்கும் ரஷ்யா தனது விசேட அதிரடிப்படையினரையே பயன்படுத்தியது. இந்த மீட்பு நடவடிக்கையில் 100 பேருக்கும் மேற்பட்டவர்கள் உயிரிழந்தனர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பணயக்கைதிகளை மீட்க படைபலம் பயன்படுத்தப்படமாட்டாது என ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடின் தெரிவித்திருந்தும், படைபலத்தின் மூலமே பணயக் கைதிகள் மீட்கப்பட்டிருக்கின்றனர். அந்த இடம் இரத்தக்களரியாகக் காட்சியளிக்கிறது. (க)

# இந்தியக் கடற்படைத் தளபதி அடுத்த வாரம் இலங்கைக்கு விஜயம்

இந்தியக் கடற்படைத் தளபதி அட்மிரல் அருண் பிரகாஷ் அடுத்தவார இறுதியில் இலங்கைக்கு உத்தியோகபூர்வ விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

எதிர்வரும் 12 ஆம் திகதியளவில் அவர் இலங்கையில் இருப்பார் என எதிர்பார்க்கப்படுகின்றது எனக் கூறிய வட்டாரங்கள் மேலதிகத் தகவலை வெளியிட மறுத்துவிட்டன. கடந்த ஜூலை மாத இறுதியில்தான் அட்மிரல் மாதவேந்திரா சிங்கிடமிருந்து தளபதிப் பதவியைப் பொறுப்பேற்றிருந்தார். (க)

# தனது மகளைப்பார்க்க உதவிகேட்கிறார் நளினி

சென்னை,செப்.4

ராஜீவ்காந்தி கொலைவழக்கில் தண்டனை அனுபவித்துவரும் நளினி இலங்கையில் உள்ள தனது 12 வயது மகளைப் பார்ப்பதற்கு வசதி செய்து தருமாறு உருக்கமான கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பாக காங்கிரஸ் கட்சித் தலைவியும் ராஜீவ்காந்தியின் மனைவியுமான சோனியாவுக்கு கடிதம் எழுதவும் அவர் திட்டமிட்டுள்ளார் என்று பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன.

ராஜீவ்காந்தி கொலை தொடர்பாக மரண தண்டனை விதிக்கப்பட்ட கைதிகளில் ஒருவர் நளினி. எனினும், சோனியா காந்தியின் கோரிக்கையின் பேரில் அவரது தண்டனை ஆயுள் தண்டனையாகக் குறைக்கப்பட்டது. அவரது கணவர் முருகனுக்கு மரண தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிறையில் இருந்தபோது 1992 ஆம் ஆண்டு நளினிக்குப் பெண்குழந்தை பிறந்தது. இரண்டு வயது வரை அக்குழந்தை தாயுடன் சிறையில் வளர்ந்தது. அதன் எதிர்காலம் கருதி மகள் மெகராவை அவரது பாட்டியிடம் - முருகனின் பெற்றோரிடம் - ஒப்படைத்து விட்டார் நளினி. அவர்கள் மெகராவை இலங்கைக்கு அழைத்துச் சென்று விட்டனர்.

4 ஆண்டுகளுக்கு முன்னர் ஒரு தடவை அவர்கள் மெகராவை வேலூர் சிறைக்கு அழைத்து வந்தனர். சிறையில் தாயைச்சந்தித்து விட்டு மெகரா மீண்டும் இலங்கைக்குத் திரும்பிவிட்டார்.

முருகனின் பெற்றோருக்கும் வயதாகிக் கொண்டு செல்வதனால் மெகராவின் எதிர்காலம் கேள்விக்குறியாகியுள்ளது. எனவே, அவரை ஜேர்மனியில் உள்ள நளினியின் சகோதரிக்கு தத்துக்கொடுத்துவிட நளினி - முருகன் தம்பதியினர் தீர்மானித்துள்ளனர்.

அதற்கு முன்னர் மகள் மெகராவைப் பார்த்துப் பேச நளினி விரும்புகின்றார். தத்துக் கொடுப்பதற்கான சூழல் ஏன் ஏற்பட்டது என்பது குறித்து அவரிடம் விளக்கவேண்டும் என்று அவர் விரும்புகின்றார் என்று கூறப்படுகின்றது.

இதற்காக மகளைத் தமிழ் நாட்டுக்கு அழைத்துவர உதவும்படி அவர் 'கில்ட் ஒவ் சேர்விஸ்' அமைப்பின் தலைவர் மோகினிகிரிக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.

சோனியா காந்திக்கு மிக நெருக்கமான நபர் என்று மோகினிகிரி கருதப்படுகின்றார். நளினியின் தண்டனைக்குறைப்புக்கு சோனியா சிபாரிசு செய்ததில் இவரது பங்கு கணிசமானது என்றும் கூறப்படுகின்றது.

மோகினிகிரிக்கு எழுதிய கடிதத்தில் நளினி தெரிவித்துள்ளதாவது:-

எனது மகள் மெகரா இலங்கையில் பாட்டியுடன் வசித்து வருகின்றாள். அவளை நான் பார்த்து 4 வருடங்களுக்கு மேல் ஆகிவிட்டது. அவளை நாங்கள் தத்துக்கொடுக்க விரும்புவதனால் அதற்கு முன் அவளைச்சந்தித்துப் பேச விரும்புகின்றோம்.

எத்தகைய சூழ்நிலையில் தத்துக்கொடுக்க வேண்டிய முடிவை எடுத்தோம் என்பதை எங்கள் குழந்தையிடம் விளக்கிச்சொல்ல ஆசைப்படுகின்றேன். ஆனால், அவர் இந்தியாவருவதற்கு விஸாகிடைக்கவில்லை.

மெகராவின் பாட்டிக்கு கடந்த ஏப்ரல் மாதமே விஸா கொடுத்துவிட்டார்கள். ஆனால், மெகராவுககு மட்டும் விஸா கிடைக்கவில்லை. அவரை எப்படியாவது இந்தியாவுக்கு அழைத்துவருவதற்கு நீங்கள் உதவவேண்டும். அந்தக் குழந்தையின் எதிர்காலம் கருதி இந்த உதவியை நீங்கள் செய்யவேண்டும்.

நான் 13 ஆண்டுகள் சிறைக்குள் வாழ்க்கையைக்கழித்துவிட்டேன். தயவுசெய்து இதை உரியவர்கள் கவனத்திற்குக் கொண்டு வந்து எனக்கு உதவி செய்யக்கூடாதா?

- இவ்வாறு அந்தக்கடிதத்தில் நளினி எழுதியுள்ளார்.

இந்தக் கோரிக்கை அடங்கிய கடிதங்களை அவர் பலருக்கும் அனுப்பி வைத்துள்ளார். ஆனால், எந்தப்பயனும் கிடைக்கவில்லை. இதனால், சோனியாவுக்கு நேரடியாகவே உதவி கேட்டுக்கடிதம் எழுதவும் அவர் திட்டமிட்டுள்ளார் என்று பத்திரிகைச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ஐ-க-7)

## கேந்திர நிலையங்களை

# கொழும்பில் வீடியோப்படம் பிடித்த 4 தமிழர்கள் கைது!

கொழும்பு,செப்.4

கொழும்பு, கோட்டைப் பகுதியில் உள்ள உயர்ந்த கட்டடமொன்றிலிருந்து வீடியோ கமரா மூலம் கொழும்புத்துறைமுகம் மற்றும் பிரதேசங்களைப் படம்பிடித்துக்கொண்டிருந்தவர்கள் எனக்கருதப்படும் நான்கு தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

நேற்றுமுன்தினம் நண்பகல் 12.30 மணியளவில் கோட்டை, பாரென் ஜயதிலக்க மாவத்தையில் உள்ள கயூர் கட்டடத்தில் உள்ள மாடியிலிருந்து இவர்கள் படம்பிடித்துக்கொண்டிருந்தனர் என்று கூறப்பட்டது. அச்சமயம் இராணுவத்தினருக்குக் கிடைத்த தகவலொன்றை அடுத்து இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

வடபகுதியைச் சேர்ந்த இந்த நான்கு இளைஞர்களும் விடுதலைப் புலிகள் இயக்கத்தைச் சேர்ந்தவர்களாக இருக்கலாம் எனச் சந்தேகிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. அந்தோனிப் பிள்ளை அலெக்ஸ் (வயது 18), அந்தோனிப் பிள்ளை அத்தனி (வயது 16), ஜே.எஸ்.டபிள்யூ. நிமல்ராஜன் (வயது 20), கே.கமலஸ்ரீதரன் (வயது 23) ஆகியோரே கைதுசெய்யப்பட்டவர்களாவர்.

இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்ட இந்த நால்வரும் விசேடகுற்றப்புலனாய்வுத் துறையினரிடம் மேலதிக விசாரணைக்காக ஒப்படைக்கபட்டுள்ளனர் என்றும் கூறப்பட்டது.(4-க)

# அழகெழல் போட்டியின் பரிசளிப்பு விழா இன்று

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றம் நடத்திய 'அழகெழல் போட்டி 2004' பரிசளிப்பு விழாவும் கலைநிகழ்வுகளும் கண்காட்சியும் இன்று சனிக்கிழமை கல்லூரியின் புதிய மண்டபத்தில் நடைபெறவுள்ளன. காலை 9 மணிக்கு நிகழ்வுகள் ஆரம்பமாகும்.

பிரதம விருந்தினராக வடக்கு - கிழக்கு மாகாண கல்வி பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் கலந்துகொள்வார்.

இலங்கை வங்கி வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியம், கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம், தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலைத்துறை இணைப்பாளர் க.ரட்ணேஸ்வரன் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்வர்.

போட்டியில் தெரிவு செய்யப்பட்ட ஓவியங்கள் அங்கு காட்சிப்படுத்தப்படும். (ஐ)

# தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி முடித்த 25 பேர் முதற்கட்டமாக வெளிநாட்டுக்கு

## உரிய வேலைவாய்ப்பைப் பெறுவர் எனத் தகவல்

யாழ்ப்பாணம்,செப்.4

யாழ். தொழில்நுட்பக் கல்லூரியில் பயிற்சி முடித்து வெளியேறிய மாணவர்களை வேலை வாய்ப்புக்கென வெளிநாட்டுக்கு அனுப்பி வைக்கும் திட்டத்தின்கீழ் முதற்றடவையாக 25 பேர் தெரிவுசெய்யப்பட்டுள்ளனர்.

மேற்படி முதல் தொகுதியினரைத் தெரிவு செய்வதற்கான நேர்முகப் பரீட்சை கடந்த மாதம் 20 ஆம் திகதி இலங்கை வேலைவாய்ப்பு அதிகார சபையினால் யாழ். தொழில்நுட்பக்கல்லூரியில் நடத்தப்பட்டது.

இதன் மூலம் தெரிவுசெய்யப்பட்ட 178 பேர் செய்முறைப் பரீட்சைக்காக கொழும்பிற்கு அழைகக்கப்பட்டு கடந்த 23 ஆம் திகதி முதல் 27 ஆம் திகதிவரை நேர்முகப்பரீட்சை நடத்தப்பட்டது.

நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்ட 25 பேர் வேலை வாய்ப்புக்கென வெளிநாட்டிற்கு அனுப்பிவைக்கப்படவுள்ளனர்.

-இவ்வாறு தெரிவு செய்யப்பட்டவர்களின் பெயர் விவரங்கள் இன்னும் ஒரு வாரத்தில் தேசிய தொழிற் பயிற்சி அதிகார சபையின் வேலை வாய்ப்புப் பிரிவினரால் வெளியிடப்படும் என யாழ். தொழில்நுட்பக் கல்லூரியின் அதிபர் ந.யோகராஜன் தெரிவித்தார். (எ-6)

# பாதாள உலகக் கோஷ்டியுடன் சண்டை; சூரியவெவவில் இரு பொலீஸார் காயம்

கொழும்பு,செப்.4

சூரியவெவ பகுதியில் பொலீஸாருக்கும் பாதாள உலகக் கோஷ்டியினருக்கும் இடையில் ஏற்பட்ட துப்பாக்கிச் சண்டையில் இரணடு பொலீஸார் படுகாயமுற்றனர்.

நேற்றுமுன்தினம் இரவு 8.30 மணியளவில் ஆயுதக் குழுவொன்று வானொன்றைக் கடத்திச் செல்கிறது எனப் பொலீஸாருக்குத் தகவல் கிடைத்தது. அதையடுத்து நடவடிக்கையில் இறங்கிய பொலீஸார் சுரிஹிரிகம பகுதியில் கடத்திச்செல்லப்பட்ட வான் சென்றுகொண்டிருப்பதைக் கண்டுபிடித்தனர். அதனை மடக்கிப்பிடிக்க முற்பட்டபோது பாதாள உலகக் கோஷ்டியினருடன் சண்டை மூண்டது. இரு பகுதியினருக்கும் இடையில் நடந்த துப்பாக்கிச்சூட்டில் இரு பொலீஸார் படுகாயமுற்றனர். ஆயுததாரிகளில் இருவர் தமது துப்பாக்கிகளுடன் தப்பிச் சென்றுவிட்டனர். மேலும் இருவர் பொலீஸாரிடம் சரணடைந்தனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

தப்பிச்சென்ற இருவரையும் தேடிப் பொலீஸார் வலை விரித்துள்ளனர். (ஐ-க)

# தனது அமைச்சர்களுக்கு எதிராகவே வழக்குத் தாக்கல் செய்கிறது ஜே.வி.பி.

கொழும்பு,செப்.4

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசில் அமைச்சர்களாக இருக்கும் தனது உறுப்பினர்களுக்கு எதிராகவே நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்துள்ளது ஜே.வி.பி.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை ரத்துச் செய்யுமாறு கோரி நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட வழக்கில் தமது அமைச்சர்களையும் பிரதிவாதிகளாகச் சேர்த்துக் கொள்ளுமாறு மனுச்செய்துள்ளது ஜே.வி.பி.

நடைமுறையில் உள்ள யுத்தநிறுத்த ஒப்பந்தத்தைச் செல்லுபடியற்றதாக்கவேண்டும் எனக்கோரி ஜாதிக ஹெல உறுமயவும் ஜே.வி.பியும் இணைந்து மேல் நீதிமன்றத்தில் வழக்குத்தாக்கல் செய்தன.

ஐக்கிய தேசிய முன்னணி ஆட்சியில் இருநததபோது தாக்கல் செய்யப்பட்ட இந்த வழக்கில் அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அவரது அமைச்சர்களும் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டிருந்தனர்.

பின்னர் ஆட்சி மாறியதும் புதிய அரசின் பிரதமரான மஹிந்த ராஜபக்ஷவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அமைச்சர்களும் இந்த வழக்கின் பிரதிவாதிகளாகக் குறிப்பிடப்பட்டனர்.

இப்போது ஆட்சியில் இருக்கும் அரசில் அமைச்சர்களாக இருக்கும் தமது கட்சி உறுப்பினர்கள் நால்வரையும் பிரதிவாதிகளாகச் சேர்த்துக்கொள்ளுமாறு நீதிமன்றத்தைக் கோரும் இடையீட்டு மனு ஒன்றை ஜே.வி.பி. தாக்கல் செய்துள்ளது.

இதன்மூலம் தனது கட்சி அமைச்சர்களுக்கு எதிராகவே அந்தக் கட்சி வழக்குத் தொடர்ந்து சாதனை படைத்துள்ளது. (8)

## கொழும்பு பங்குப் பரிவர்த்தனை(நேற்றையது)

பங்குச்சந்தை புள்ளிவிவரங்களும் கம்பனி அறிவித்தல்களும் - வெள்ளிக்கிழமை, செப்ரெம்பர்-03-2004

| சந்தைப்புள்ளிவிவரம் | இன்று | முந்திய நாள் | புள்ளி மாற்றம் | %மாற்றம் |
|---|---|---|---|---|
| அனைத்துப்பங்கு விலைச்சுட்டி (ASPI) | 1.412.63 | 1,388.40 | 24.23 | 1.75 |
| மிலங்கா விலைச்சுட்டி (MPI) | 2,111.19 | 2,065.84 | 45.35 | 2.20 |
| மொத்த வருவாய்ச்சுட்டி (TRI) ASTRI - அனைத்துப் பங்குகள் | 1,461.37 | 1.436.30 | 25.07 | 1.75 |
| MTRI - மிலங்கா பங்குகள் | 2,193.10 | 2,145.98 | 47.12 | 2.20 |
| சந்தைப்புரள்வு (மில்லியன் ரூபாயில்) | 280.40 | 81.40 | | |
| கைமாற்றப்பட்ட பங்குகளின் எண்ணிக்கை (மில்லியனில்) | 22.60 | 4.00 | | |
| மொத்தக் கொடுக்கல் வாங்கல் | 4,062.00 | 1,675.00 | | |
| சந்தை மூலதனம் (பில்லியன் ரூபாயில்) | 346.10 | 340.20 | | |

*கம்பனி பங்கிலாபம் தொடர்பான அறிவித்தல்கள்

| கம்பனிப் பெயர் | பங்குலாபம் | XD திகதி | பணம் செலுத்துகை |
|---|---|---|---|
| [illegible] இலெக்ரிகல்ஸ் | 25% முதலும் கடைசியும் | 10-12-2004 | 22-12-2004 |

குறிப்பு : குறித்த திகதியில் உரிமைப்பங்கு வழங்கல்கள் மற்றும் போனஸ் வழங்கல்கள் இடம்பெறவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்

## பிரதேசவாதம் எனும் பெரும் பேய்!

தமிழரின் உரிமைப் போராட்டக் குரலை நசுக்க முற்பட்ட பேரினவாதம் தமிழர் தாயகத்தைக் கூறுபோடுவதன் மூலம் அந்த இலக்கை அடைய முயன்றது.

அதற்காகத் தமிழர் தாயகத்தை ஊடறுத்துத் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தித் தமது கபட - நயவஞ்சக - நாடகத்தை அரங்கேற்ற முயன்றது பேரினவாதம். அது குறித்து இப்பத்தியில் நேற்றுப் பிரஸ்தாபித்திருந்தோம்.

இந்தக் கபடத் திட்டத்தின் - தமிழர் தாயகத்தைக் கூறுபோடும் முயற்சியின் - மற்றொரு கட்ட நடவடிக்கைதான் தமிழர்களிடையே பிரதேச வாதத்தைத் தூண்டி அவர்களைப் பிளவுபடுத்தும் எத்தனம்.

திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் - வெளியிலிருந்து தமிழினத் தாயகத்துக்குள் நுழைந்து அதைத் துண்டு போடும் முயற்சி.

பிரதேசவாதப் பிளவை உருவாக்கும் நடவடிக்கை - தமிழினத் தாயகத்துக்குள்ளேயே வேறுபாடுகளை - முரண்பாடுகளை - ஏற்படுத்தி அதைக் கூறுபோடும் முயற்சி.

முதலாவது - வெளியிலிருந்து நமது இனத்தைப் பிடிக்க முயலும் நோய். மற்றது - உள்ளிருந்தே கொல்லும் பிணி.

முதலாவது - கண்கூடாகத் தெரியும். ஏதேனும் ஒரு காலகட்டத்தில் அந்த நோயிலிருந்து - சிங்களக் குடியேற்றம் என்ற பிடியிலிருந்து - தாயகத்தை மீட்டெடுத்துக் காப்பாற்றலாம் என்ற நம்பிக்கை, அதற்கான வாய்ப்பு உண்டு.

ஆனால், இரண்டாவது - வெளியே தெரியாமல் இனத்துக்குள் ஊடுருவிப் பரவும் புற்றுநோய் போன்றது. அது பிடித்தால் அதிலிருந்து இனத்தை விடுவிப்பதே துர்லபம் தான்.

உள்ளுக்குள் பரவி இனத்தைக் கொல்லும் இந்த வியாதியை நமது விடுதலைப் போராட்ட சமூகத்துக்குள் நுழைத்துவிட - விதைத்துவிட - துடியாய்த் துடிக்கின்றன பேரினவாதமும் அதன் கைக்கூலிச் சக்திகளும்.

கிழக்கு மாகாணத்தில் கருணா என்ற தனி மனிதப் பிறழ்வை இதற்காகத்தான் பேரினவாதம் தாங்கிப்பிடித்து, உதவியளித்து, ஒத்தாசை புரிந்து, தூண்டிவிட்டது. ஆனால், கிழக்கு மக்களும், இன விடுதலைப் போராளிகளும் அந்தப் பிரதேசவாதத் தொற்றுநோய் நமது இனத்தைப் பீடித்துப் பரவவிடாமல் தடுத்துவிட்டனர். இந்த நோயிலிருந்து இனத்தைக் காப்பாற்றுவதற்காக நமது இனம் சில இழப்புக்களையும், தியாகங்களையும் கூடச் சந்திக்கவேண்டியதாயிற்று.

புலிகளின் மதியுரைஞர் பாலசிங்கம் கூறியது போன்று, கருணா என்ற மனிதரால் ஏற்படுத்தப்பட்ட அரசியல், இராணுவச் சிக்கல்கள் முறியடிக்கப்பட்டுவிட்டன.

எனினும், மழை பெய்தும் தூவானம் விடாதது போல அங்கொன்றும் இங்கொன்றுமாக ஓரிரு சம்பவங்கள் தொடரத்தான் செய்கின்றன. ஆனால், அவையும் விரைவில் அடங்கிவிடும் என்று நம்பலாம்.

கருணா கிளப்பிய பிரதேசவாதம் என்ற 'தூசிப் புயல்' ஓய்ந்துவிட்டது.

ஆனால், அதே பிரதேசவாதப் பாங்கை வடக்கில், தமிழர் தாயகத்தின் மையப்பகுதியில் - கூட கிளப்புவதற்குப் பேரினவாத சக்திகளின் ஊடுருவல் நடவடிக்கை முயன்றிருக்கின்றது என்பதுதான் தமிழர் தரப்பு இப்போது சிந்திக்க வேண்டிய விவகாரமாகி இருக்கின்றது.

யாழ்ப்பாணம், குருநகர் மீனவர்கள் எதிர்கொண்ட ஓர் அவலச் சம்பவத்தைப் பிரதேசவாதப் பிரிவினைக்குத் தூபம் போடும் வாய்ப்பாக மாற்றுவதற்குச் சில சக்திகள் துணை போயிருப்பது வேதனைக்குரியது.

விடுதலைப் புலிகளின், கடற்புலிகளின் தளபதி கேணல் சூசை இதைத் தெளிவாகச் சுட்டிக்காட்டியிருக்கின்றார். குருநகர் மக்களின் பிரதிநிதிகளுக்கு இதை விளங்கப் படுத்தியிருக்கின்றார் அவர்.

"தமிழ்த் தேசியத்துக்கு ஊறுவிளைவிக்க உங்களைத் தீயசக்திகள் தூண்டுகின்றன; வன்னி, யாழ்ப்பாணம் என்ற பிரதேச வாதம் ஒன்றை அச்சக்திகள் பரப்ப முயல்கின்றன; ஊர், பிரதேசம் சொல்லிப் பிரச்சினையை வளர்க்க எத்தனிக்கின்றன.

"இராணுவத்தினரும், புலனாய்வுப் பிரிவினரும் அவர்களுக்குப் பின்னால் உள்ள தேசவிரோதச் சக்திகளும் இச் சம்பவத்தைப் பயன்படுத்திப் புலிகளுக்கு எதிராகச் சர்வதேச மட்டத்தில் பிரசாரத்தில் ஈடுபட்டன" - என்று சுட்டிக் காட்டுகின்றார் சூசை.

புலிகளுக்கு எதிரான பிரசாரம் ஒருபுறமிருக்க, தமிழ் மக்களையே - நமது கடல் வளத்தை இனத்துக்குப் பொன்னாக்கித் தருகின்ற மீனவ மக்களையே - வன்னி, யாழ்ப்பாணம் என்று பிரிக்கும் முயற்சிகளில் இச்சக்திகள் ஈடுபட்டிருப்பது கவனிக்கப்படவேண்டியது.

இச்சக்திகளின் தூண்டுதலில் எடுபட்டு 'துள்ளிக் குதித்து', கொக்கரித்தவர்கள் தாம் தமது சமூகத்தைத் துண்டுபோடும் நயவஞ்சகத் திட்டத்தில் சிக்குண்டு கோடரிக்காம்பாகப் பாத்திரம் ஏற்கிறார்கள் - ஏற்க வைக்கப் படுகிறார்கள் - என்பதை உணரவேண்டும்.

நமது இனத்துக்கிடையே பிளவை - குழப்பத்தை - முரண்பாட்டை - ஏற்படுத்த விரும்பும் பேரினவாத சக்திகள, நம்முள் ஒரு தரப்பினரின் ஆபத்பாந்தவர்கள் போலத தங்களைக் காட்டியே நம்முள் ஊடுருவ முயல்கின்றன.

இதனைச் சகல தரப்பினரும், சகல மட்டத்தினரும் ஆழ்ந்து சிந்தித்து உணர்ந்துகொள்வது மிகமிக அவசியம். எமக்குள் ஊடுருவும் சக்திகளிடம் ஏமாறாமல், அவற்றுக்கு இடங்கொடாமல், விழிப்பாக இருப்பது விடுதலை வேண்டும் தமிழினத்தின் இன்றைய முக்கிய பொறுப்பாகும்.

ஏமாறாமல் - இடங்கொடாமல் - விழிப்பாக இருப்பது விடுதலை வேண்டும் இனத்தின் பொறுப்பாகும்.

# மீளக் குடியமரவும், நிவாரணம் வழங்கவும் கோரி வலி. வடக்குக் கடற்றொழிலாளர்கள் மகஜர்

கரவெட்டி,செப்.4

வலி.வடக்குப் பிரதேச செயலாளர் பிரிவில் இருந்து இடம்பெயர்ந்த கடற்றொழிலாளர்கள் தம்மைச் சொந்த இடங்களில் மீளக்குடியமர அனுமதிக்குமாறும் தற்போது தமக்கு வழங்கப்படும் உலர் உணர்வு நிவாரணத்தைத் தொடர்ந்து வழங்குமாறும் கோரி யாழ். அரச அதிபருக்கு மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

வலி. வடக்குக் கடற்றொழிலாளர்கள் சார்பில் வலி. வடக்குப் பிரதேச கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் ம.பயஸ்லோகதாஸ், செயலாளர் ந.றட்ணராஜா ஆகியோர் கையொப்பமிட்டு இந்த மகஜரை அனுப்பி வைத்துள்ளனர்.

அந்த மகஜரில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

வலி. வடக்கு மக்கள் நாட்டின் யுத்த நிலைமை காரணமாகக் கடந்த 1990ஆம் ஆண்டு தமது பல கோடி ரூபா பெறுமதியான சொத்துக்கள், உடைமைகள் அனைத்தையும் இழந்த நிலையில் சொந்த இடங்களைவிட்டு இடம்பெயர்ந்து 14 வருடங்கள் கடந்துவிட்டன.

இந்த 14 வருடங்களிலும் இடம் பெயர்ந்தவர்கள் கஷ்ட, துன்பங்களின் மத்தியில் அகதிமுகாம்களில் வசித்து வருகின்றனர் என்பது தாங்களும் மற்றும் யாவரும் அறிந்த விடயம் ஆகும். ஆனால், இற்றைவரை அம்மக்களிற்கு அரசோ அல்லது அரச சார்பற்ற நிறுவனங்களோ எந்தவித உதவிகளையோ அல்லது நஷ்டஈட்டையோ வழங்கவில்லை. அரச சார்பற்ற நிறுவனங்கள் வழங்கிய சிறுசிறு கடனுதவிகளை அடிப்படையாகக் கொண்டும் மற்றும் வட்டி வீதத்திற்கு கடனாகப் பெற்றும் வலி. வடக்குக் கடற்றொழிலாளர் கடற்றொழில் உபகரணங்களைக் கொள்வனவு செய்து தொழில் புரிந்துவருகின்றார்கள்.

இந்தநிலையில் இந்திய இழுவைப் படகுகளினாலும், பாய்மர வள்ளங்களினாலும் எமது கடற்பரப்பில் வாழும் மீனினங்கள் அழிக்கப்படுகின்றன. இதனால் எமது மீனவர்கள் கடலில் தொழில் புரிய முடியாத நிலைமையும் தாம் பெற்ற கடனை மீளச் செலுத்தமுடியாத நிலைமையும் காணப்படுகின்றது.

இந்த நிலையில், குடும்ப வருமானத்தை மீளாய்வு செய்து நிவாரணத்தினை நிறுத்துவதற்கு அரசும் அதிகாரிகளும் எடுத்துவரும் முயற்சிகளை நிறுத்தி, உயர் பாதுகாப்பு வலயத்திற்குள் மீளக் குடியமர முடியாமல் அல்லற்படும் அனைவருக்கும் தற்பொழுது வழங்கப்படும் நிவாரணத்தினைத் தொடர்ந்து வழங்குங்கள் அல்லது எமது மக்களைத் தத்தமது சொந்த இடங்களில் மீளக் குடியமர்த்துமாறு தங்களைத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கின்றோம் - என்று அதில் உள்ளது. (எ)

## பொது மண்டபத் திறப்பு விழா

குடத்தனை,செப்.4

'நியாப்' திட்டத்தின் மூலம் அமைக்கப்பட்ட பொதுமண்டபத் திறப்புவிழாவும், தையல் பயிற்சி ஆரம்ப நிகழ்வும் குடத்தனை பொதுமண்டபத்தில் இன்று சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரச அதிபர் வி.ப.வேலாயுதம்பிள்ளை தலைமையில் இடம்பெறவுள்ளன.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட 'நியாப்' பிரதித் திட்டப் பணிப்பாளர் கா.பாலகிருஸ்ணன் மற்றும் பலரும் கலந்துகொள்ளவுள்ளனர்.(எ-49-48)

## வெங்காயச் செய்கையாளருக்கு திடீர் மழையால் பாதிப்பு

அரியாலை,செப்.4

இவ்வார முற்பகுதியில் பெய்த மழையினால் வலி. கிழக்குப் பிரதேசத்தில் பயிரிடப்பட்ட வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது.

வெங்காய அறுவடை மேற்கொள்ளப்பட்டு வெங்காயங்கள் தோட்டங்களில் காய விடப்பட்டவேளையில் மழை திடீரெனப் பெய்ததனால் வெங்காயங்கள் மழைவெள்ளத்தில் மூழ்கின எனத் தெரிவிக்கப்பட்டது. (எ-17)

## வீதி விபத்துகளைத் தடுப்பது குறித்து துண்டுப்பிரசுரம் வெளியீடு

யாழ்ப்பாணம்,செப்.4

குடாநாட்டில் அதிகரித்து வரும் வீதி விபத்துகளைத் தடுப்பதற்கென யாழ். போதனா வைத்தியசாலையின் அபிவிருத்திச் சங்கம் 'வீதிகளில் பாதுகாப்பு அவசியம்' என்னும் தலைப்பிலான துண்டுப் பிரசுரங்களை அச்சிட்டு மக்களிடையில் விநியோகித்து வருகின்றனர்.

அண்மைக் காலமாகக் குடாநாட்டில் அதிகரித்துவரும் வீதிவிபத்துக்களினால் மக்களின் உயிருக்கு ஆபத்து ஏற்படுவதுடன், அவர்கள் தொடர்ந்தும் அதன் தாக்கத்திற்கு உள்ளாவதனாலேயே மக்களிடம் விழிப்புணர்வை உண்டாக்கும் செயலாக துண்டுப் பிரசுரங்களைத் தாம் வழங்கி வருவதாக அபிவிருத்திச் சங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

குடாநாட்டின் பல பகுதிகளிலும் இடம்பெறும் வீதி விபத்துகளால் படுகாயமடைந்து மேலதிக சிகிச்சைக்காக யாழ். வைத்தியசாலையில் சேர்க்கப்படும் நோயாளர்களினால் அங்கு ஏற்படும் இடநெருக்கடிகளைக் குறைத்துக்கொள்ளும் வகையில் இந்தத் துண்டுப் பிரசுரத்தில் அறிவுரைகள் இடம்பெற்றுள்ளன.

பாதசாரிகள், சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் செலுத்துவோருக்கெனத் தனித்தனியிலான அறிவுரைகளும் இந்தத் துண்டுப் பிரசுரத்தில் உள்ளன. (எ-6)

## யாழ்.வலய மாணவரிடையே சைவநெறிப் போட்டிகள்

யாழ்ப்பாணம்,செப்.4

யாழ். கல்வி வலயப் பாடசாலை மாணவர்களுக்கிடையில் சைவநெறிப் போட்டிகளை நடத்துவதற்கு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இப்போட்டி முதலில் பாடசாலை மட்டத்தில் நடைபெறும். பின்னர் பாடசாலை மட்டப் போட்டிகளில் முதலிடத்தைப் பெறும மாணவர்கள் கோட்டமட்டப் போட்டிகளுக்கு தெரிவுசெய்யப்படுவார்கள்.

கோட்டமட்டப் போட்டியில் முதலாம், இரண்டாம் இடத்தைப் பெறும் மாணவர்கள் வலய மட்டப்போட்டியில் பங்குபற்றுவர்.

தரம் 3 தொடக்கம் தரம் 5 வரையான மாணவர்களுக்கு சமய அறிவு எழுத்துப் போட்டி, பேச்சுப்போட்டி, பண்ணிசைப் போட்டி, சகலகலாவல்லி மாலை ஓதல் போட்டி என்பனவும் -

தரம் 6 தொடக்கம் தரம் 13 வரையான மாணவர்களுக்கு சமய அறிவு, எழுத்துப் போட்டி, பேச்சுப்போட்டி, பண்ணிசைப் போட்டி, சகலகலாவல்லிமாலை ஓதல் போட்டி, கோலப்போட்டி, மாலைகட்டுதல் போட்டி, தோரணம் பின்னுதல் போட்டி என்பனவும் - நடத்தப்படவுள்ளன.

இப்போட்டிகள் தொடர்பான சுற்றறிக்கை ஒன்று பாடசாலை அதிபருக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளது.

போட்டிகளுக்கான விண்ணப்பங்கள் அனைத்தும் இம்மாதம் 30ஆம் திகதிக்கு முன்னர் அந்தந்தக் கோட்டக் கல்வி அலுவலகங்களுக்கு அனுப்பிவைக்கப்படவேண்டும் என்று வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன் அறிவித்துள்ளார்.(எ-13)

## தமிழகத்தில் இருந்துவந்து நெடுந்தீவில் குடியமர்ந்தோருக்கு நடமாடும் சேவை

நெடுந்தீவு,செப்.4

நெடுந்தீவு உதவி அரச அதிபர் பிரிவில் இந்தியாவிலிருந்து திரும்பி மீளக் குடியமர்ந்தவர்களின் தேவைகளை நிறைவேற்றும்பொருட்டு அகதிகளுக்கான ஐ.நா. தூதரகத்தின் ஏற்பாட்டில் நடமாடும் சேவை ஒன்று இடம்பெறவுள்ளது.

மேற்படி நடமாடும் சேவை எதிர்வரும் 8ஆம் திகதி புதன்கிழமை நெடுந்தீவு உதவி அரச அதிபர் பணிமனையில் இடம்பெறவுள்ளது.

இந்த நடமாடும் சேவையில்:-

★ இந்தியாவில் நிகழ்ந்த பிறப்பு / இறப்புக்களைப் பதிவுசெய்தல்.

★ தேசிய அடையாள அட்டை விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளல் (16 வயதிற்கு மேற்பட்டோர் , விண்ண்ப்பம் செய்தல்).

★ வாக்காளர் இடாப்பில் பதிவுசெய்யப்படாத பெயர்களைப் பதிவுசெய்தல்.

★ மீளக்குடியமர்வு கொடுப்பனவிற்கு விண்ணப்பம் செய்தல்.

★ மீளக் குடியமர்ந்தோருக்கான சட்ட உதவிகள், மனித உரிமைகள், காணி உறுதிப்பத்திரம் ஆகியன பெற்றுக் கொடுப்பது தொடர்பான ஆலோசனைகளை வழங்குதல்.

முதலிய சேவைகள் வழங்கப்படவுள்ளன.

இந்த நடமாடும் சேவைகளில் உரியவர்களைக் கலந்துகொண்டு தமது தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளுமாறு நெடுந்தீவு உதவி அரச அதிபர் மீளக்குடியமர்ந்த மக்களைக் கேட்டுள்ளார்.(எ-112)

### நாளை

ஆவணி 20
ஞாயிற்றுக்கிழமை
(05.09.2004)
திதி : சஷ்டி
முற்பகல் 7.58 வரை.
நட்சத்திரம்: கார்த்திகை
பின்னிரவு 2.27 வரை.
கார்த்திகை விரதம்
சுபநேரம்: 9.04 - 10.34
ராகுகாலம்: 4.34 - 6.04
(பழைய நேரப்படி)

## சுகாதார முகாமைத்துவ உதவியாளராக பதவியில் உள்ளீர்க்கக் கோரி மகஜர்

குருநகர்,செப்.4

யாழ். பிரதி மாகாண சுகாதாரத் திணைக்கத்தில் தற்போது கடமையாற்றும் எழுதுநர்கள், கணக்குப் பதிவாளர், தட்டெழுத்தாளர், களஞ்சியக் காப்பாளர் ஆகியோர் தம்மைச் சுகாதார முகாமைத்துவ உதவியாளர்களாக உள்ளீர்ப்புச் செய்து தமக்குப் புதிய சம்பளத்தை வழங்க நடவடிக்கை எடுக்குமாறு வடக்கு - கிழக்கு மாகாண ஆளுநருக்கு யாழ். பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் ஊடாக மகஜர் ஒன்றை அனுப்பிவைத்துள்ளனர்.

சுகாதாரத் திணைக்கள ஊழியர்களுக்கு 2004ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதலாம் திகதி தொடக்கம் சம்பள உயர்வை வழங்கப் போவதாகச் சுகாதார அமைச்சு அறிவித்திருந்தது.

மேற்படி புதிய சம்பள அளவுத் திட்டததில் மேற்கூறிய பதவியினை உள்ளீர்ப்புச் செய்யுமாறு அறிவித்தல் எதுவும் இதுவரை வடக்கு - கிழக்கு மாகாணப் பொதுநிர்வாக அமைச்சினால் சம்பந்தப்பட்ட சுகாதாரத் திணைக்களத்துக்கு அனுப்பிவைக்கப்படவில்லை. ஆனால், சுகாதாரத் திணைக்களங்களில் சேவை புரியும் சாதாரண மற்றும் சுத்திகரிப்புத் தொழிலாளர்களை இம்மாதம் (செப்ரெம்பர்) தொடக்கம் புதிய மாற்றியமைக்கப்பட்ட சம்பளத்திட்டத்தில் அமர்த்துமாறு கோரி சுற்றறிக்கை ஒன்றைச் சுகாதார அமைச்சு அனுப்பிவைத்திருக்கிறது.

இந்தச் சுற்றறிக்கை அமுல்படுத்தப்பட்டால் சுகாதாரத் திணைக்களங்களில் சேவை புரியும் சாதாரண மற்றும் சுத்திகரிப்பு ஊழியர் ஒருவர் முதல் நியமனத்தின் போது 6ஆயிரத்து 180 ரூபாவை அடிப்படை ஆரம்பச் சம்பளமாகப் பெறுவார். ஆனால், எழுதுநர் பதவியில் முதல் நியமனம் பெறுபவரின் ஆரம்ப அடிப்படைச சம்பளம் 5 ஆயிரத்து 240 ஆகவே அமையும் என இந்த மகஜரில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (எ-51)

### உதயவாக்கு

நன்மை எது, தீமை எது எனப் பகுத்துணரும் அறிவே மேம்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அஞ்சல் அலுவலகம் இடம்மாற்றம்

தென்மராட்சி,செப்.4

2000ஆம் ஆண்டு இடம்பெயர்வின் பின்னர் கரவெட்டியில் இயங்கிவந்த முகமாலை உப தபால் நிலையம் கடந்த வாரம் தொடக்கம் பளை அஞ்சல் அலுவலகத்துடன் இணைந்து செயற்படுகிறது.

முகமாலை உபஅஞ்சல் அலுவலகத்தை வேம்பொடுகேணிப் பகுதியில் இயங்க வைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை - உபஅஞ்சல் அதிபர் காலமானதால் மூடப்பட்ட கிளாலி உபஅஞ்சல் அலுவலகத்தை அல்லிப்பளைப் பகுதியில் இயங்கவைக்கப் பளை அஞ்சல் திணைக்களத்தினர் முயற்சிகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கிளாலிப் பகுதியைச் சேர்ந்த குடும்பங்கள் பல தற்போது புலோப்பளை, அல்லிப்பளை ஆகிய பகுதிகளில் தங்கியுள்ளமை குறிப்பிடத்தக்ககது. (எ-117)





தமிழீழம் மானிப்பாயைச் சேர்ந்த ரஞ்சித்குமார்-வினோதினி தம்பதிகளின் செல்வப்புதல்வன் ஜர்சித் தனது முதலாவது பிறந்தநாளை கனடா Orangevilleஇல் உள்ள தனது இல்லத்தில் 04.09.2004 சனிக்கிழமை அன்று வெகுவிமர்சையாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா, அம்மா, அப்பம்மா, Montrealஇல் வசிக்கும் பெரியப்பம்மா மற்றும் பெரியப்பா, பெரியம்மா, லக்கி அக்கா, அபி அண்ணா, ஆதி அண்ணா மற்றும் இந்தியாவில் இருந்து அம்மம்மா, மாமா, சித்தி, பூட்டி மலேசியாவில் இருந்து குணவத் பாட்டி குடும்பத்தினர் ராஜ்குமார் பாட்டா குடும்பத்தினர், ஆதிக்குமணன் பாட்டா குடும்பத்தினர், மற்றும் இலங்கையில் இருந்து மாமா, அத்தை, மச்சாள், யோகநாதன் பாட்டா குடும்பத்தினர், பரமநாதன் பாட்டா குடும்பத்தினர், பேரின்பநாதன் பாட்டா குடும்பத்தினர், ஆகியோர் இவரை பல்கலையும் கற்று பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

தகவல்: செல்வராஜா, கொழும்பு-15. தொ. பே: 011-2522396


## சட்டவிரோத மின் பாவனை

கொழும்புத்துறை,செப்4

கொழும்புத்துறைப் பகுதியில் சட்டவிரோத மின்பாவனை அதிகரித்துள்ளதாகப் பொது மக்கள் தெரிவிக்கின்றனர்.

சட்டவிரோத மின் பாவனையால் சட்ட பூர்வமாக இணைப்பை பெற்ற குடியிருப்பாளர்கள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சட்டவிரோத மின் பாவனையாளர்களைக் கண்டித்து நடவடிக்கை எடுக்கத் திட்டமிட்டுள்ளதாக மின் சாரசபை அதிகாரியொருவர் தெரிவித்தார். (8-30)


12 வருட சேவை [துறை]யில்

வெஸ்ரன் லொட்ஜ்

WESTERN LODGE

270, செட்டியார் தெரு,
கொழும்பு-11.

சகல வசதிகளுடன் சௌகரியமாகவும் பாதுகாப்பாகவும் தங்குவதற்கு குறைந்த செலவில் தலைநகரில் தங்குமிட வசதிக்கு தொடர்புகொள்ளவும்.

தொலைபேசி: 2433753, 2438570
தொலைநகல்: 2332557 (C/37423)



COMMUNITY AND TECHNICAL EDUCATION CENTRE

COMTEC

மரவேலைத் தொழில்நுட்பப் பயிற்சி நெறி

சமூகத் தொழில்நுட்பக் கல்வி நிலையத்தில் (கொம்ரெக், சுழிபுரம்) மேற்குறிப்பிட்ட பயிற்சிநெறி மிகவிரைவில் ஆரம்பிக்கப்படவுள்ளதால் பயில விரும்புபவர்கள் உடனடியாக நேரில் வந்து பதிவுசெய்யவும். பயிற்சிக் காலத்தில் பயிலுநர்களுக்கு மாதாந்த ஊக்குவிப்பாக ரூபா 1000/= வழங்கப்படுவதுடன், கொம்ரெக் நிறுவனத்தில் பயிற்சியைப் பூர்த்திசெய்த மாணவர்களுக்குக் கீழ்க்குறிப்பிட்ட சலுகைகள் வழங்கப்படும் என்பதனைத் தெரிவித்துக் கொள்கிறோம். அச்சலுகைகளாவன.

1). கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரியில் **B.C.T** கற்கை நெறியை தொடர்வதற்கு ஏற்பாடுசெய்யப்படும்.
2). வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தில் தொழில் வாய்ப்புப் பெறுவதற்காகப் பதிவுசெய்யப்படும்.
3). தொழில்நுட்பக் கல்லூரியின் அங்கீகாரத்துடன் இலங்கை தொழிற்பயிற்சி அதிகார சபையால் பயிற்சியாளர்கள் சுயமான தொழிலை ஆரம்பிக்க 2 1/2 லட்சம் ரூபா வரையில் கடனுதவிபெற ஏற்பாடு செய்து கொடுக்கப்படும்.

நிர்வாகி
கொம்ரெக்,
சுழிபுரம்.

(36059)



அனைவருக்கும் புலமைப்பரிசில்

COMPUTER EXPRESS
Institute of Information Technology

இலங்கையில் தமிழ் மொழிமூலம் வெளிவரும் கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் கணனிச்சஞ்சிகையின் கிளை யாழ்ப்பாணத்தில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் புலமைப்பரிசில் திட்டம் - (4) 2004

80% OFF

எமது அனைத்துக் கணனிக் கற்கை நெறிகளுக்கும் 80% கட்டணக் குறைப்புச் செய்வதில் பெருமையடைகின்றோம்

| பாட நெறிகள் | | பாடநெறிக் கட்டணம் | செலுத்தவேண்டிய கட்டணம்(20%) |
|---|---|---|---|
| Diploma i n computer Science | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Honours Diploma in Computer Science | - 4 மாதம் | 8,000 | 1,600 |
| Diploma In WebPage Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma in Graphic Designing | - 4 மாதம் | 6,000 | 1,200 |
| Diploma In Desk top Publishing | - 4 மாதம் | 5,000 | 1,000 |
| Diploma in Hard Ware Engineering | - 3 மாதம் | 5,000 | 1,000 |
| Accounting Package | - 3 மாதம் | 7,000 | 1,400 |

Advances Courses

50% OFF

| | | |
|---|---|---|
| Diploma in Net Working | ~~4000~~ | 2000 |
| Diploma in Video Editing | ~~6000~~ | 3000 |
| Diploma In Multimedia | ~~5000~~ | 2500 |

கம்பியூட்டர் எக்ஸ்பிரஸ் ஆசிரியர் குழாமினால் வகுப்புக்கள் நடாத்தப்படும்.
சர்வதேச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ், வரையறுக்கப்படாத கணனிப் பயிற்சி.

September 20ஆம் திகதிக்கு முன்னர் பதிவு செய்துகொள்ளவும்.

வகுப்புக்கள் ஆரம்பம்
Batch -01 - 05/09/2004
Batch -02 - 10/09/2004
Batch -03 - 15/09/2004

Maniyam Building
இல. 15, சிராம்பியடி வீதி,யாழ்ப்பாணம்.(off Stanly Rd.)
0777 222422, 0777917781


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இன்றைய நிகழ்வுகள்

யாழ்ப்பாணம்,செப்4

அகில இலங்கைச் சைவப்புலவர் சங்கத்தின் 44ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு இன்று முற்பகல் 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் சைவப்புலவர் பட்டமளிப்பு விழா இடம்பெறவுள்ளது. (எ-201)

★ ★ ★

நவாலி,செப்.4

மானிப்பாய் கியூ மெடிக்கா நிறுவனத்தின் 10ஆவது ஆண்டு நிறைவு விழா இன்று 4ஆம் திகதி சனிக்கிழமை மாலை 3 மணிக்கு கியூமெடிக்கா மைதானத்தில் இடம்பெறும்.

இந்த நிறுவனம் இதுவரை வீடுகளற்ற இடம்பெயர்ந்த மக்களுக்கு ஆயிரம் வீடுகளைக் கட்டிக் கொடுத்துள்ளது.

அத்துடன், மருதங்கேணி, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை, மட்டுவில் ஆகிய பகுதிகளில் நடமாடும் வைத்திய சேவைகளையும் இந்த நிறுவனம் வழங்கியுள்ளது. (எ-100)

# வாசிப்பு பழக்கத்தைத் தூண்ட தேசிய வாசிப்பு மாதம் அறிமுகம்

வலி.தெற்கு,செப்.4

ஒக்ரோபர் மாதத்தைத் தேசிய வாசிப்பு மாதமாகப் பிரகடனம் செய்யத் தேசிய நூலக ஆவணவாக்கல் சேவைகள் சபை தீர்மானித்துள்ளது.

இம்மாதத்தில் தேசிய ரீதியில் பல்வேறு வகையான சிறிய, நடுத்தர மற்றும் பெரிய அளவிலான செயற்பாட்டுத் திட்டங்களை முன்னெடுக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

மக்களிடையே வாசிப்புப் பழக்கத்தைத் தூண்டுவதையும், நூலகப் பிரிவுகள் ஒவ்வொன்றிலும் நூலக மேம்பாட்டை ஏற்படுத்துவதையும் நோக்கமாகக் கொண்டு ஒக்ரோபர் மாதத்தைத் தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப்படுத்த சபை தீர்மானித்துள்ளது.

சிறுவர்கள், பாடசாலை மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், முதியவர்கள் போன்றோரிடம் வாசிப்புப் பழககத்தை அதிகரிக்கும் வகையில் இம்மாதத்தில் பல செயற்றிட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

பொது நூலகங்கள் மற்றும் பாடசாலைகளில் இதற்கென குழுக்கள் அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் வாசிப்புப் பழக்கத்தைத் தூண்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

அத்துடன், வாசகர் வட்டங்களை உருவாக்குதல், வாசகர்களின் தேவைகளை அறிந்து பொருத்தமான செற்றிட்டங்களை முன்னெடுத்தல், கண்காட்சிகளை நடத்துதல், துண்டுப்பிரசுரங்களை வெளியிடுதல், நூல்கள் சேகரிப்பில் ஈடுபடல் போன்ற செயற்பாடுகளையும் இம்மாதத்தில் நடைமுறைப்படுத்தத் திட்டமிடபபட்டுள்ளது. (8-152)

# பட்டதாரிகள் பயிற்சிநெறி வியாழனன்று ஆரம்பமாகியது

யாழ்.மாவட்ட பட்டதாரிகளுக்கான வேலை வாய்ப்புத் திட்டத்தின் பயிற்சிநெறி ஆரம்ப வைபவம் நேற்றுமுன்தினம் காலை 10 மணியளவில் யாழ். வீரங்கம் மண்டபத்தில் இடம்பெற்றது.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ்.மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதன் கலந்துகொண்டு சிறப்பித்தார்.

நிகழ்வில் மங்கள விளக்கினை யாழ். அரச அதிபர் செ.பத்மநாதன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சோ.சேனாதிராஜா மா.க. ஈழவேந்தன், மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் திருமதி எஸ்.மகாலிங்கம், மேலதிக அரச அதிபர் ஆ. சிவசுவாமி, தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தின் பிரதிப் பணிப்பாளர் என்.பேரானந்தம், யாழ்.வலயக் கல்விப் பணிப்பாளர் ப.விக்னேஸ்வரன், யாழ்.பிரதேச செயலர் செந்தில்நந்தனன், பட்டதாரி மாணவப் பிரதிநிதி மற்றும் தேசிய உயர்கல்வி நிறுவன மாணவப் பிரதிநிதி ஆகியோர் ஏற்றி வைத்தனர்.

வரவேற்புரையைத் தொடர்ந்து ஜனாதிபதியின் செய்தி வாசிக்கப்பட்டது. தொடர்ந்து நிகழ்வுகள் இடம்பெற்றன.

நிகழ்வில் இளைஞர் சேவைகள் மன்றத்தின் உதவி இயக்குநர் சிவ தட்சணாமூர்த்தி, யாழ்.பல்கலைக் கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸ், திணைக்கள அதிகாரிகள் மற்றும் பிரதேச செயலர்கள் உட்பட பட்டதாரி மாணவர்களும் கலந்துகொண்டிருந்தனர்.

உள்ளே பட்டதாரி மாணவர்களுக்கான வேலை வாய்ப்புப் பயிற்சி ஆரம்ப நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருந்தபோது பெயர் வெளிவராத பட்டதாரி மாணவர்கள் மண்டபத்துக்கு வெளியே குவிந்து நின்றிருந்தனர். எனினும், எந்தவித எதிர்ப்பு நடவடிக்கைகளும் அங்கு இடம்பெறவில்லை. (8-9)

## அழகெழல் போட்டி பரிசளிப்பு விழா

யாழ்ப்பாணம்,தேசிய கல்வியியற் கல்லூரி நுண்கலை மன்றத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்ற 'அழகெழல்' போட்டிக்கான பரிசளிப்பு விழாவும் கலை நிகழ்வுகளும் மற்றும் கண்காட்சியும் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு கல்லூரியின் புதிய மண்டபத்தில் நடைபெறவுள்ளன.

முகிழ்நிலை ஆசிரியர் சி.சிவானந்தராசா தலைமையில் இடம்பெறவுள்ள இந்நிகழ்வில் வடக்கு - கிழக்கு மாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை அமைச்சின் செயலாளர் ஆர்.தியாகலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இலங்கை வங்கியின் வடபிராந்திய உதவிப் பொதுமுகாமையாளர் க.பாலசுப்பிரமணியம், நாடக அரங்கக் கல்லூரியின் தலைவர் கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கம் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துசிறப்பிப்பர். (எ-201)

# மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் பணிகள் திருப்திகரமானதாக இல்லை

## அரச அதிபருக்கு அரியாலை வாசி கடிதம்

யாழ்.செயலகத்தில் இயங்கும் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தின் பணிகள் திருப்திகரமாக இல்லையெனத் தெரிவித்து அரியாலை வாசியான க.செல்வநாயகம் என்பவர் யாழ்.அரச அதிபருக்கு முறைப்பாட்டுக் கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அந்தக் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

யாழ்.செயலகத்தில் அமைந்துள்ள மிதிவெடி செயற்பாட்டு அலுவலக உத்தியோகத்தர்களின் அசமந்தப் போக்கினால் பல கோரிக்கைகளின் பின்னரே வெடிக்காத பொருள்கள் அகற்றப்படுகின்றன.

செயற்பாட்டு உத்தியோகத்தர்கள் அகற்றிய இடங்களை சீரான, தகுந்த முறையில் பரிசோதனை செய்யாத காரணங்களினால், அகற்றிய இடங்களில் மேலும் பல வெடிக்காத பொருள்கள் மீளக்குடியமரும் மக்களால் கண்டு பிடிக்கப்படுகின்றது. அத்துடன், தினசரி வெளியாகும் பத்திரிகைகளிலும் இது சம்பந்தமாக பல செய்திகள் வெளிவருவதினால், மீளக் குடியமரும் மக்கள் இந்த உத்தியோகத்தர்களின் வேலையில் எவ்வித அர்த்தமில்லையென்றே பிரஸ்தாபிக்கின்றார்கள்.

மேலும், பொதுமக்கள் மிதிவெடி செயற்பாட்டு அலுவலகத்தில் புகார் தெரிவிக்கும்போது ஏதாவது சாட்டுச் சொல்லி அனுப்பி விடுகின்றனர். இவர்களுக்கு சம்பளம் கொடுப்பதானது யானைக்குத் தீன்போட்டு வளர்ப்பது போலவேயாகும்.

எனவே, மீளக்குடியேறுபவர்கள் எவ்வித அச்சமும் இல்லாமலிருக்க இது சம்பந்தமாகத் தாங்கள் கூடிய அக்கறை கொள்வீர்களென மீளக்குடியேறுபவர்கள் சார்பாக வேண்டிக் கொள்கிறேன் - என்றுள்ளது. (8)

## உதைபந்தாட்டம்

பருத்தித்துறை ஐக்கிய விளையாட்டுக் கழகம் நடத்தும் உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியில் இன்று சனிக்கிழமை நடைபெறவுள்ள ஆட்டங்களின் விவரம் வருமாறு:-

பிற்பகல் 3.30 மணிக்கு -
மணல்காடு சென்.அன்ரனிஸ் வி.க. அணி எதிர் கலைமதி வி.க. 'ஏ' அணி

மாலை 4.30 மணிக்கு -
நவசக்தி வி.க.'பி' அணி எதிர் திக்கம் இளைஞர் வி.க. அணி. (8)

## நல்லூர் ஆலயச் சூழலில் இன்று நடப்பவை

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த பெருந் திருவிழாவையொட்டி இளங்கலைஞர் மன்றத்தினர் நல்லூர் துர்க்கா மணி மண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணிக்கு நடத்திவரும் தெய்வீக இசை அரங்கில் இன்று சனிக்கிழமை தவநாதன் றொபேட்டின் பாட்டுக்கச்சேரி இடம்பெறும்.

இதில் பக்கவாத்தியக்காரர்களாக வயலின்- அ.ஜெயராமன், மிருதங்கம் - கே.கஜன், கடம்- என்.மாதவன், கெஞ்சிரா - கே.நந்தகுமார், முகர்சிங் - எஸ்.செந்தூரன் ஆகியோர் பங்கேற்பர். (எ-6)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் ஆலய வருடாந்த பெருந் திருவிழாவையொட்டி இந்துகலாசார திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகம் நல்லூர் நாவலர் மணிமண்டபத்தில் நடத்தும் ஆன்மீக நிகழ்வுகளில் இன்று சனிக்கிழமை மாலை 7 மணிக்கு செல்வி க.சிவயோகராணி, எஸ். செல்வராசா, க.துரைசிங்கம் பங்கேற்கும் இசை அமுதம் இடம்பெறும். (எ-6)

★ ★ ★

நல்லூர்க் கந்தன் ஆலயப் பெருந்திருவிழாவையொட்டி நல்லூர் மேற்கு விதியில் உள்ள ஸ்ரீ முத்துவிநாயகர் ஆலய மண்டப அரங்கில் நடைபெறும் கம்பராமாயணத் தெய்வீகத் தொடர் இசைப் பேருரையில் இன்று சனிக்கிழமை மாலை 6மணிக்கு கானகதாவாரிதி [illegible] உரை நிகழ்த்துவார். (எ-6)


# இன்று நல்லைக் கந்தன் ஆலயத்தில் பதினைந்தாம் திருவிழா

பகல் திருவிழா காலை 10.30 மணிக்கு
இரவுத் திருவிழா மாலை 5.30 மணிக்கு
வேல் – வள்ளி தெய்வானை வீதி வலம்.

வள்ளி – வேல் – தெய்வானை வீதிவலம்



ஷண்முகப் பெருமானே சரவணனே சரணம்
கண்மணி முருகா கார்த்திகேயா சரணம்!

விளம்பர அனுசரணை :-

SMOKERS HEALTH

புகைத்தல், வெற்றிலை, மதுபானம் என்பவற்றின் பாவனையினால் வாயில் ஏற்படும் பக்க விளைவுகளுக்கும் துர்நாற்றம், இரத்தம் கசிதல், பல்கூச்சம், வாய் சுருங்குதல் மற்றும் பல்லில் ஏற்படும் கறைகளை நீக்கிப் பற்களுக்கு வெண்மைதரத் தற்போது யாழ்ப்பாணத்தில் அறிமுகமாகிறது.




முற்றிலும் இயற்கை மூலிகைகள் கொண்டு தயாரிக்கப்பட்ட ஓர் உன்னத பற்பசை

இலங்கையில் சந்தைப்படுத்துவோர் :-
SB PHARMAEXIM COLOMBO-15
(C/07069)


# பரவ வரமருள்




மரகத மயின்மேல் வருமுருகா
அரகர சிவசிவ அறுமுகவா
சரவண பவனே சண்முகனே
வரந்தர வாவா என்முன்னே
அரவணி சிவனா ரருள்பாலா
பரவ வரமருள் பரமதயாளா.

- யோகர்சுவாமிகள்.

# நல்லூர்க்கந்தன்

## பெருந்திருவிழாக் காலச் சிறப்பிதழ்

(15 ஆம் திருவிழா)



## நற்றவா! நல்லை நாதனே!

கற்றுப் பெற்றவை பட்டுப் பெற்றவை
கலந்து பெற்றவை பற்பல
உற்றும் என்னநற் பயனென் றெண்ணிடில்
ஒன்றும் இல்லை உண்மையில்
பற்றைப் பற்றியே பற்பல துன்பம்
பாரிலே அடையாமலே
நற்ற வர்நல்லை நாதனே! உனை
நாடவே எமை வைப்பையே

- சொக்கன்.

## சிந்தித்துக் கவலை தீர்ப்பாம்

ஓங்காரப் பொருளுரைத்த குழந்தைக் கந்தன்
உலகமெலாம் நிறைந்திருக்கும் சோதிக் கந்தன்
ஆங்கார அசுரர்குலம் அழித்த கந்தன்
ஔவையிடம் கவிகேட்ட கருணைக் கந்தன்
பூங்காவில் வள்ளிமணம் புரிந்த கந்தன்
புனிதமன அடியர்தொழும் நல்லைக் கந்தன்
பாங்கான தேரேறி யருளும் கந்தன்
பாதமலர் போற்றிமனம் குளிருவோமே!

தீராத வினைதீர்க்கும் செல்வக்கந்தன்
சிவயோக சுவாமியுளம் இருக்கும் கந்தன்
நாராய ணன்மகிழும் மருகக் கந்தன்
நம்பனுடன் உமையணைத்த முருகக் கந்தன்
வாராத செல்வசுகம் வழங்கும் கந்தன்
வானவர்கள் வந்துதொழும் நல்லைக் கந்தன்
சீரான மயிலேறி யருளும் கந்தன்
சேவடியைச் சிந்தித்துக் கவலை தீர்ப்பாம்

- அருட்கவி சீ.வி.

## நம்பிக்கை பூப்பூக்கும்

மரண பயம் என்னை மருட்டித் துரத்தையிலே
கருகி மனதும் கவலையிலே வீழ்கையிலே
துரத்துகிற மரண தூதர்பாசக் கயிறை
எறிகையிலே எட்டித் தப்பி விலத்தையிலே
பொறிவைக்கும் எமனின் புத்தியினை வென்றொழித்துத்
திரிகையிலே என்ன செய்வதெனத் தவித்தெதையோ
பறிகொடுத்த மாதிரியாய் வாழ்வே வெறுக்கையிலே
அறுமுகனே உன்னை அகந்தஞ்சம் பூருதடா!
உந்தன் முகமும் உந்தன் அபய கரம்
தந்துநிற்கும் அருளும் சாந்திதனை நல்கும்
உந்தன் நினைவும் உருத்திராட்ச மாலையிலே
எந்தனுக்கு அரணாய் இருக்கும் நின் புன்சிரிப்பும்
மந்திரமாய்த் தீமை வருமுன்னர் காக்கின்ற
உந்தன் பெயரும் வந்ததீமை தனைத் தவிர்த்து
எந்தன் இடர்தீர்க்கும் இணையடியும்; நல்லூர் வாழ்
கந்தா எனைக்காக்கும்; நம்பிக்கை பூப்பூக்கும்.

– த.ஜெயசீலன்

## எல்லாம் தருவான்

அயராத உழைப்புக்கு அன்பை
அருளாய்ப் பொழிவான் – அடியவர்
உயர்வுக்கு உறுதுணையாய்
நிற்பான் என்றும் – அவனது
தயவதனை வேண்டி யின்பத்
தமிழால் பக்திக் கவிபாடி
நயமுடன் கேட்டால் கேட்டனவெலாம்
தருவான் எங்கள் நல்லூரான்

- இராம ஜெயபாலன்

## அலங்காரக் கந்தன் திருக்கோயில்

ஆறுபடை வீடுடையான் அமர்ந்தருளுந் திருக்கோயில்
ஏறுமயில் வாகனத்தான் எழுந்தருளுந் திருக்கோயில்
கூறுமடி யார்கள்வினை தீர்த்தருளுந் திருக்கோயில்
ஆறுமுகக் கந்தன் உறை அலங்காரத் திருக்கோயில்

குன்றுதோறும் ஆடுகின்ற குமரனுறை திருக்கோயில்
என்றுங்குறை யாதடியார் ஏத்துகின்ற திருக்கோயில்
தொன்று பல சித்தர்வாழ்ந்து முத்திபெற்ற திருக்கோயில்
நன்று விழா பூசைநேரந் தவறாநல்லூர்த் திருக்கோயில்

உம்பருறை வோர்துயரை நீக்கியநம் வேல்முருகன்
அம்பிகையாள் பயந்த நல்லூர் அலங்காரக் கந்தனவன்
தம்பிமுகன் தம்பியவர்க் கிருவர்துணை சக்தியர்கள்
நம்பியவ ரைத்தொழுது நல்லருளைப் பெறுவோமே.

- நா. நல்லைதம்பி

## அழகனை வேண்டுகிறோம்!

நல்லைப் பதியெழுந்த நம்குமரா! கந்தா!
தொல்லை யழித்தொழிக்கும் திருமுருகா! வேலா!
வெள்ளி மயிலேறி வந்தெங்கள் வேதனையை;
அள்ளி யழித்திடுவாய் வேண்டுகின்றோம்! அழகா!

-பொலிகையூர் சு.க. சிந்துதாசன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கருத்தரங்கு

திகதி : செப்ரெம்பர் 5, 2004
நேரம் : மாலை 3.30
இடம் : கரவெட்டி பிரதேச சபை கேட்போர் கூடம், கரவெட்டி.

பங்குச்சந்தை
முதலீடும் வியாபாரமும்
செல்வி ஷிவானி திருஞானசம்பந்தன்
நிறைவேற்றுநர் - கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

பங்குத்தரகரின் பங்களிப்பு
திரு. செல்லதுரை வசந்தகுமார்
பங்குத்தரகர் HNB Stock Brokers (Pvt) Ltd.

தேநீர் வேளை

டெக்ஸ் - அரசாங்கத் திறைசேரி உண்டியல், முறிசளில் முதலிடுதல்
திரு. விநாயகமூர்த்தி தேவதாஸ்
சிரேஷ்ட முகாமையாளர் - நிதி நிர்வாகம் கொழும்பு பங்குப் பரிவர்த்தனை

வினா விடைக்கூட்டத்தொடர்

குழுவினர்:
திரு.ரஜீவ பண்டாரநாயக்க
சிரேஷ்ட முகாமையாளர்-சந்தைப்படுத்தல்
திரு.துஷார ஜயரட்ண
உதவி முகாமையாளர் - சந்தைப்படுத்தல்
திரு.வி.தேவதாஸ்
சிரேஷ்ட முகாமையாளர்-நிதி நிர்வாகம்.
செல்வி ஷிவானி திருஞானசம்பந்தன்
நிறைவேற்றுநர்
மற்றும்
திரு.வீ.நிரஞ்சன்
முகாமையாளர்- நிதி
யுரோவில்



ஒரு முதலீட்டு வாய்ப்பினை
தவறவிடாதீர்கள்
அனுமதி இலவசம்!


### தமிழ் முறையீட்டாளருக்கு சிங்களத்தில் கடிதம்

# அரச மனித உரிமை ஆணைக்குழுவின் அரசியல் சட்ட மீறல் எனக் குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.4

மனித உரிமைகளைப் பாதுகாக்கின்ற அரசு அமைப்பான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கிளிநொச்சியைச் சேர்ந்த செல்வி தேவிகா சிவகுமாரனுக்கு அனுப்பி வைத்துள்ள இரண்டு கடிதங்களும், விசாரணை அறிக்கையும் தனிச் சிங்கள மொழியில் மட்டுமே எழுதியுள்ளதன் மூலம் இலங்கை அரசியல் அமைப்பின் மொழிச் சட்டத்தை மீறியுள்ள ஒரு செயலாகுமென வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் தலைவர் வண. பிதா சேவியர் கருணாரெட்ணம் குற்றஞ்சாட்டியுள்ளார்.

இது சம்பந்தமாக வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தின் சார்பில் அவர் பத்திரிகைகளுக்கு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

கிளிநொச்சி, முழங்காவில் வைத்தியசாலை வீதியைச் சேர்ந்த செல்வி தேவிகா சிவகுமாரன் தனது மருத்துவபீட பல்கலைக்கழக அனுமதியில் தனக்கு அநீதி ஏற்பட்டுள்ளதென்றும் இது ஒரு மனித உரிமை மீறல் செயலாகுமென றும், எமது வடக்கு - கிழக்கு மனித உரிமைகள் செயலகத்தில் நேரடியாக வந்து முறைப்பாடு செய்துள்ளார்.

இந்த மனித உரிமை மீறல் சம்பந்தமாக தான் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்கு முறைப்பாடு செய்துள்ளதாகவும், இது சம்பந்தமாக தனக்கு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிடம் இருந்து கிடைத்துள்ள சிங்களக் கடிதங்களையும் சிங்களமொழி விசாரணை அறிக்கையையும் எம்மிடம் காண்பித்தார். இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவினால் அவருக்கு அனுப்பப்பட்ட 29.04.2004ஆம் ஆண்டு திகதியிடப்பட்ட கடிதமும், 20-07-2004ஆம் ஆண்டு அனுப்பப்பட்ட கடிதமும் விசாரணை அறிக்கையும் தனிச் சிங்கள மொழியில் மட்டுமே அவருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இலங்கை அரசியல் அமைப்பின் நான்காவது அத்தியாயத்தின் உறுப்புரை 18இல் சிங்களம், தமிழ் ஆகிய மொழிகள் இலங்கையின் அரச கரும மொழிகள் என்றும் உறுப்புரிமை 19இல் தேசிய மொழிகள் எனவும் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. இந்த உரிமையைப் பாதுகாக்க வேண்டிய கடமைப்பாடு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிற்குரியது.

அப்படி இருந்தும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனக்குக் கிளிநொச்சி மாவட்டத்தில் இருந்து முறைப்பாடு செய்திருந்த ஒரு தமிழ் மாணவிக்குத் தனிச் சிங்கள மொழியில் மட்டும் பதிலும், விசாரணை அறிக்கையும் அனுப்பி வைத்துள்ளது. ஒரு முழுமையான மனித உரிமை மீறும் செயலாகும் என்பதையும் இது ஒரு பாரதூரமான கண்டனத்திற்குரிய செயலாகும் என்பதையும் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு உணர்ந்து கொள்ளவேண்டும். அதுவும் இக் குழுவின் தலைவியாகவுள்ள தமிழ்ப் பெண்மணி வெட்கித் தலைகுனிய வேண்டிய ஒரு செயலாகும்.

அரசியல் அமைப்பில் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொழி உரிமையைக் கூட மதிக்க முன்வராத இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் நிலைப்பாட்டில் தமிழ் மக்கள் எப்படி நம்பிக்கை வைக்கமுடியும். அரசியல் அமைப்பில் தமிழ் மக்களுக்கு வழங்கப்பட்டுள்ள மொழி உரிமையைக் கூட வழங்க முன்வராத அரசு எப்படி தமிழ் மக்களின் பிரசசினையைத் தீர்க்க முன்வருவார்கள்.

மேற்கண்டவாறு அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டள்ளது. (ப)


தொழில் சார் பயிற்சி
M.M.I.C யின்
அறிவிப்பாளர் பயிற்சி
புதிய வகுப்பு
4 ம் திகதி ஆரம்பம்
இதுவரை பதிவு செய்யாத மாணவர்கள்
பதிவுகளை
செய்து கொள்ளலாம்
20% சிறப்புக்கழிவு
15. சிறாம்பியடி ஒழுங்கை,
ஸ்ரான்லி வீதி,
மணியம்ஸ் பில்டிங், யாழ்ப்பாணம்.
T.P. 0777- 316258


# நீங்காத நினைவில் ஓராண்டுகள்



திருமதி
கந்தசாமி
யசோதரஞ்சினி

தோற்றம்
09.02.1953

மறைவு
18.08.2003

திதி-சஷ்டி
04.09.2004

தந்தையாக, தாயாகி எமை வளர்த்தீர்
தரணியிலே உங்களைப் போல் ஒரு தெய்வமுண்டோ?
எமை வையத்துள் வாழ்வாங்கு வாழ வைத்தீர் ~ எம்
அன்புத் தெய்வமே! நீர் மறைந்து இன்று
ஆண்டு ஒன்று ஆகிவிட்டதே ~ ஆனாலும்
ஆறவில்லை எம் துயரம்!. என்றும் உங்கள்
நினைவுகளுடன் வாழ்கின்றோம்.

இன்று (04.09.2004) சனிக்கிழமை எமது இல்லத்தில் நடைபெறுகின்ற அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறுகின்ற மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு எமது உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இல. 8/2,
பெருமாள் கோவில் பின் வீதி,
யாழ்ப்பாணம்.

-குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நூல் வரிசை



| | |
|---|---|
| நூலின் பெயர் | : பயணத்திற்கு ஒரு பாதை |
| நூலாசிரியர் | : ஆர்.கே.மேனன் |
| வெளியீடு | : வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி, தமிழ் மன்றம் |

தனக்குத் தோன்றுகின்ற கருத்துக்களை சுவைபடவும் கற்பனா சக்தியுடனும் சமூகத்திற்கு வெளிப்படுத்துபவனே எழுத்தாளன் ஆவான். இந்த வகையில், ஒவ்வொருவருடைய வாழ்க்கையிலும் அர்த்தங்கள் பொதிந்துள்ளன. பல சுவாரஸ்யமான நிகழ்வுகள் இடம்பெற்றுள்ளன. ஆனால், அவற்றைச் சுவையம்சத்துடன் சமூகத்திற்கு வெளிப்படுத்துகின்ற ஆற்றல் வேண்டும்.

இந்தவகையில், பயணத்திற்கு ஒரு பாதை என்ற நூலின் ஆசிரியரான ஆர்.கிருஸ்ண மேனன் தனது வாழ்வில் தான் கண்ட அனுபவங்களை நூலுருவில் சமூகத்திற்கு வெளிப்படுத்துகின்றார். ஆன்மீகவாதிகள், தத்துவஞானிகள், சமூகப்பெரியார்கள், விஞ்ஞானிகள் எனப் பல அறிஞ்ஞப் பெருமக்களின் கருத்துக்களைத் தன்வாழ்வோடு ஒன்றித்து சமூகத்திற்கு முன்வைக்கின்றார்.

இவரது இந்த நூலின் அட்டைப் படத்தில் இதயம் ஒன்றினைப்போட்டு சில அம்புக்குறிகள் இதயத்தை நோக்கியும் சில அம்புக்குறிகள் இதயத்திற்கு வெளியாகவும் செல்கின்றன. இப்படம் வாழ்க்கையோடு அமைந்த தத்துவக் கருத்துக்களை வெளிப்படுத்துகின்றது. எமது வாழ்விலும் எமக்குப் பிடித்தமான - இன்பமான - சில நிகழ்வுகள் இடம்பெறுவதையும் எமக்குப்பிடிக்காத - துன்பமான - சில நிகழ்வுகள் இடம்பெறுவதையும் வாழ்க்கையில் இன்பமும் துன்பமும் மாறிமாறி ஏற்படுகின்றன என்பதைத் தனது அட்டைப்படம் ஊடாக விளக்குகின்றார்.

நூலின் உள்ளே சென்றதும் "என் உள்ளத்திலிருந்து..." என்ற தலைப்பில் எழுதத் தொடங்கிய நூலாசிரியர், எழுத ஆரம்பிக்கும்போதே "சிறியேன் ஆகிய நான்..." என்று ஆரம்பிப்பதிலிருந்து அவரது அவையடக்கப் பண்பு புலனாகிறது. இந்த முகவுரையில் கல்வியியற் கல்லூரி பீடாதிபதி, உபபீடாதிபதி ஆகியோருக்கு நன்றி தெரிவித்ததுடன், தன்னை ஈன்றளித்த பெருந்தெய்வங்களாகிய தந்தை தாய்க்கு இந்நூலைச் சமர்ப்பணம் செய்கின்றார்.

நூலாசிரியரின் முகவுரையைத் தொடர்ந்து "ஆசியுரை பயணத்திற்கு ஒரு பாதை" என்ற தலைப்பில் வவுனியா கல்வியியற் கல்லூரி பீடாதிபதி செ.அழகரத்னத்தின் ஆசியுரை இடம்பெற்றுள்ளது. அவர் தனது முகவுரையில் நூலாசிரியர் நூலில் குறிப்பிட்ட சில கருத்துக்களை எடுத்துக்காட்டி, இளம் சமூகத்திற்கு இந்த நூல் ஒரு படிக்கல்லாக அமையும் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நூலின் ஆக்கங்கள் வரிசையிலே நூலாசிரியர் தனது நூலின் முதலாவது ஆக்கத்தில் "வாழ்க்கையில் வாலிபமும் இலட்சியமும்" என்பதனை மூன்றாகப் பாகுபடுத்தி வாழ்க்கை, வாலிபம், இலட்சியம் என்பன பற்றி ஒவ்வொன்றையும் தனித்தனியாகக் குறிப்பிட்டுள்ளார். தனது வாழ்க்கையிலும் வாலிபப் பருவத்திலும் திகழ்ந்த கருத்துக்களையும் இலட்சியப் பாதையை நோக்கியே வாழ்க்கை அமையவேண்டும் என்றும் குறிப்பிடுகின்றார். இப்படித்தான் வாழலாம் என்று பாதையைக் காட்டலாமேயொழிய இப்படி வாழ் என்று கூற இயலாது என்கிறார்.

இரண்டாவது ஆக்கத்திலே 'இளமைக் காதல்' பற்றிக் குறிப்பிடும் மேனன், தனது இளவயதுக் காதலில் ஏற்பட்ட அனுபவங்கள் யாவற்றையும் சிந்தனைக்கூடாக உணர்த்துகின்றார். காதலின் புனிதத்துவம் பற்றியும் இவர் குறிப்பிடத்தவறவில்லை.

மூன்றாவது ஆக்கம் 'இன்றைய நோக்கு' என்ற தலைப்பில் நாட்டில் சமாதானம், அது எவ்வளவு சாத்தியப்படுகின்றது. தமிழ் மக்கள் அனுபவித்த இடப்பெயர்வுகள், அதனால் பட்ட அவலங்கள் மற்றும் கிருஷாந்தி கொலை, நிமலராஜன் கொலை என்பனபற்றி மிகவும் சுருக்கமாகவும் ஆராய்கிறார்.

இந்நூல் சமுதாயத்திற்கு மிகவும் பயனுள்ள ஒன்றாக திகழும் என நம்புகின்றேன்.

**தெல்லியூர் சீ.ஹரிகரன்.**




| | |
|---|---|
| நூலின் பெயர் | : வடக்கு கிழக்கு மாகாண சமாதான நீதிபதிகள் விபரத் திரட்டு பாகம்I |
| நூலாசிரியர் | : செல்வராஜா ரமேஸ் |
| வெளியீடு | : எச்.எஸ்.சீ.எம்.எவ். மானிப்பாய் |

சமாதான நீதிவான்கள் பதவி என்பது சமூகத்தில் நீதியை நிலைநாட்டக்கூடியதான கௌரவம் மிக்க ஒரு சமூக சேவையாகக் கருதப்படுகிறது.

ஒரு சமூகத்தில் அல்லது பிரதேசத்தில் அங்கு வாழும் மக்களின் நன்மை கருதி செயற்படக்கூடியவர்கள் என்ற நோக்கில் சமாதான நீதிவான் பதவிகளைப் பொருத்தமானவர்களுக்கு நீதி அமைச்சு வழங்கிவருகிறது. சமாதான நீதிவான்களின் பொறுப்புக்கள் மிக முக்கியமானவை. எவ்விதமான பிரதிஉபகாரமும் கருதாமல் மக்களுக்குச் சேவையாற்றுவதற்கென்றே இப்பெரும் பதவி வழங்கப்படுகிறது.

பொதுச் சேவைகளிலும் மக்கள் பணியிலும் தொடர்ந்து அயராது சேவையாற்றி வருபவர்களை கௌரவித்து அவர்களுக்கு சமாதான நீதிவான் பட்டம் வழங்கப்படுகிறது.

இவ்வாறான சேவையாளர்களைக் கௌரவித்து 1970 ஆம் ஆண்டுக்குப் பின் சமாதான நீதிவான் பட்டம் பெற்றவர்களை அறிமுகப்படுத்தவும் ஆவணப்படுத்தவும் என நவாலியைச் சேர்ந்த செல்வராஜா ரமேஸ் என்பவர் மானிப்பாய் HSCMF நிறுவனத்தினரின் உதவியுடன் சமாதான நீதிவான்கள் பற்றிய தொகுப்பு நூல் ஒன்றை வெளியிட்டுள்ளார். இந் நிறுவனத்தினூடாக வெளியிடப்பட்ட முதல் பாகம் இதுவாகும். இரண்டாம் பாகமும் வெளியிட நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.

சமாதான நீதிவான்களைக் கௌரவப்படுத்தும் வடக்கு-கிழக்கு மாகாண சமாதான நீதிபதிகள் விவரத் திரட்டு என்ற இந்த நூல் ஆக்கபூர்வமான ஆவணப்படுத்தும் செயலை மேற்கொள்ளும் ஒரு பணியாகும். இதனை வெளியிட்ட செல்வராஜா ரமேஸ் மற்றும் HSCMF நிறுவனத்தினர் பாராட்டுக்குரியவர்கள்.

**- விஸ்வபரி -**




| | |
|---|---|
| நூலின் பெயர் | : தாயகம் |
| நூலாசிரியர் | : க.தணிகாசலம் |
| வெளியீடு | : தேசிய கலை இலக்கியப் பேரவை |

தேசிய கலை இலக்கியப் பேரவையால் வெளியிடப்பட்ட கலை இலக்கிய சமூக விஞ்ஞான இதழான 'தாயகம்' என்ற இச்சஞ்சிகை மானுட விடுதலைக்கான தத்தீவமாக மாக்சியத்தை அடையாளம் காட்டி நிற்பதுடன் சமுதாயத்துக்கு உகந்த பல்வேறு கருத்துக்களையும் முன்வைத்துள்ளது.

ஒடுக்கப்படும் மக்களுக்குச் சார்பான கருத்துக்களைத் தாங்கி நிற்கும் இச்சஞ்சிகை யுத்தகால நெருக்கீடுகளுக்கு மத்தியிலும் இம்மண்ணிலிருந்து அவற்றுக்கு எதிரான பல கருத்துக்களைத் தாங்கிய வண்ணமும் ஒடுக்குமுறைகளுக்கு எதிராகப் பல ஆக்கங்களை உள்ளடக்கியதாகவும் காலங்காலமாக வெளிவருகின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

இதன்மூலம் கலை, இலக்கியத்துறையில் ஈடுபாடுகொண்டுள்ள சமூக விஞ்ஞான நோக்குடன் பரந்த உலகப் பார்வையைப் பெறவிரும்பிய இளம் எழுத்தாளர், வாசகர்களுக்கு ஊக்கமளிக்கின்ற காலமாக இது அமைந்துள்ளது தெளிவாகின்றது.

இதற்கு தாயகத்திலுள்ள எங்கள் ஊர் விருட்சம், ஒரு நாடோடி இசைப்பாடல், ஐ.சி.செயல்வகை, சமுதாயப் பொறுப்போடு, நாங்கள் பதவித்துக்களல்ல, இருப்பு, சாவிற்கு நன்றி, பட்டறிவு, தேரோட்டம், நனவு அழும் நாள்கள், மனிதத்தை பக்தி செய்வீர், ஊருக்குப் பொதுவாய் என்ற தலைப்புக்களைக் கொண்ட கவிதைகளும் அனுமதி, சிறுகதை, இடைவெளி, அந்த நாளும் வந்திடாதோ என்ற தலைப்புக்களிலான சிறுகதைகளும் எனது வாழ்வும் இலக்கியமும் தனி மனித ஆளுமையும் மேம்பாடும் மலையக கலை இலக்கியத்தில் சித்தாந்த நிலைப்பாடுகள், உடன்படிக்கையின் பெயரால் வகுப்பு, இலட்சிய வீறும் அறச் சீற்றமும் கைகளுக்குள் சிக் காத காற்று, தண்ணீபடும் பாடு, உலகப் பொருளாதார முதலாளித்துவம் என்னும் தலைப்புக்களிலமைந்த கட்டுரைகளும் தக்கசான்று பகிர்கின்றன.

ஒரு சமுதாயத்தில் காணப்படுகின்ற அரசியல், சமூக, சமய, பொருளாதார ஏற்றத்தாழ்வுகள், பக்கச்சார்பான நடவடிக்கைகள் மற்றும் பல பிரச்சினைகள் போன்ற அனைத்தையும் மார்க்சிஸக் கண்கொண்டு அலசி, அவற்றைக் கலை ரசனையுடன் தாயகம் முன்வைத்துள்ளது புலனாகின்றது. இதன்மூலம் சமுதாயத்தில் வாசகர்களுக்கு ரசனையை ஏற்படுத்தும் அதே நேரம் நவீன பல சிந்தனைகளையும் அவர்கள் மத்தியில் தோற்றுவிக்க வழிசமைக்கின்றது எனலாம்.

**- [illegible].**

# மக்கள் முகம்



யாழ்ப்பாணம், ஆனைப்பந்தியைச் சேர்ந்த செல்வன் தியாகராஜா ராகுலன் லண்டன் ஹேர்ட்செயர் பல்கலைக்கழகத்தில் கணனிப் பொறியியல் துறையில் மேற்படிப்பை மேற்கொண்டு லண்டன் பயணமானார்.

யாழ். பரியோவான் கல்லூரி பழைய மாணவரான இவர், பாடசாலையில் சகல துறைவல்லுநர் என்ற தங்கப் பதக்கம் பெற்றவர். குறிப்பாக கிரிக்கெட் துறையில் பங்குபற்றிச் சிறந்து விளங்கியவர். இவரது தந்தையார் வ.பி.போ. சபையில் பிராந்தியக் கணக்காளராகக் கடமையாற்றுகிறார். தாயார் ஓர் ஆசிரியை ஆவார். (10-17)

★ ★ ★ ★



தேசிய இளைஞர் சேவைகள் மன்றம் நாடளாவிய ரீதியில் வருடாந்தம் நடத்தும் விருது வழங்கலில் 2003ஆம் ஆண்டுக்கான ஆங்கில மொழிமூல அறிவிப்பாளர் போட்டியில் பே.அருட்செல்வன் மாவட்ட மட்டத்தில் முதலாம் இடத்தையும் தேசிய ரீதியில் இரண்டாம் இடத்தையும் பெற்றுக்கொண்டுள்ளார். தேசிய மட்டப் போட்டிகள் மகரகம தேசிய இளைஞர் சேவைகள் மன்றத் தலைமையகத்தில் இடம்பெற்றன.

பாஷையூரைப் பிறப்பிடமாகக் கொண்ட இவர், யாழ். புனித றோக்ஸ் றோ.க. வித்தியாலயத்தில் கணித பாட ஆசிரியராகக் கடமையாற்றி வருகின்றார். 1998, 1999ஆகிய ஆண்டுகளிலும் இவர் கவிதை எழுதுதல் மற்றும் ஆங்கிலமொழி மூல அறிவிப்பாளர் போட்டிகளில் மாவட்ட மட்டத்தில் முதலிடம் பெற்றவர் என்பது குறிப்பிடத்தக்கது. (10)

★ ★ ★ ★



மானிப்பாய், சங்குவேலி வடக்கைச் சேர்ந்த இளைப்பாறிய அதிபர் சின்னப்பு அரசரத்தினம் தனது 82ஆவது வயதில் நாடகத்துறைக்கான 'கலாபூஷணம்' விருது பெற்றுள்ளார்.

மனிதவள கல்வி கலாசார அலுவல்கள் அமைச்சினால் வருடந்தோறும் வழங்கப்படும் கலைஞர்களுக்கான இவ்விருதினை அண்மையில் கொழும்பு ஜோன் டீ சில்வா மண்டபத்தில் நடைபெற்ற 'கலாபூஷணம்' விருது வழங்கும் நிகழ்விலேயே 29 தமிழ்க் கலைஞர்களில் ஒருவராக இவ்விருதினைப்பெற்றுக்கொண்டார்.

மாணவப் பருவத்தில் நாடகத்துறையில் ஈடுபாடு கொண்டு பல நாடகங்களில் நடித்தும், பல நாடகங்களை நெறியாள்கை செய்தும் பற்பல பரிசுகள், பாராட்டுப்பத்திரங்களைப் பெற்ற இவர், பல ஆங்கில நாடகங்களையும் மொழிபெயர்த்துத் தமிழில் மேடையேற்றியவராவார்.

உடுவில் முருகமூர்த்தி வித்தியாசாலை, யாழ். கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயம் ஆகியவற்றின் பழைய மாணவரான இவா, ஆசிரியராகவும் அதிபராகவும் இருந்து ஓய்வுபெற்றவராவார். (10-15)

★ ★ ★ ★



மயிலிட்டி வடக்கைப் பிறப்பிடமாகவும் நீர்வேலி மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதம் ஜெயராணி 04.08.2004 அன்று யாழ். நீதிமன்றத்தில் மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரன் முன்னிலையில் அகில இலங்கை சமாதான நீதிவானாகச் சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார். சிறந்த சமூக சேவையாளரான இவர், அச்சுவேலி மகாவித்தியாலயத்தின் பழைய மாணவர் ஆவார். (10)

★ ★ ★ ★



அல்வாய் தெற்கை வசிப்பிடமாகக் கொண்டவரும் சிறந்த சமூகத் தொண்டனுமாகிய J.S.கிறிஸ்ததாஸ் மார்ச் மாதம் முதலாம் திகதி யாழ்ப்பாணம் மாவட்ட மேலதிக நீதிவான் திருமதி ஸ்ரீநிதி நந்தசேகரனுக்கு முன்னிலையில் யாழ்ப்பாணம் நீதி நிர்வாக மாவட்டத்திற்கான சமாதான நீதிவானாக சத்தியப்பிரமாணம் செய்துகொண்டார்.

இவர் தனது ஆரம்பக் கல்வியை வதிரி வடக்கு மெதடிஸ்த தமிழ் வித்தியாலயத்திலும் இடைநிலைக் கல்வியை பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியிலும் ஆசிரியர் கல்வியை நல்லூர் ஐக்கிய கிறிஸ்தவ ஆசிரிய கலாசாலையிலும் பெற்றுள்ளார்.

மாத்தளை கிறிஸ்து தேவாலயக்கல்லூரி, உக்குவளை முஸ்லிம் மகாவித்தியாலயம், பருத்தித்துறை ஹாட்லிக்கல்லூரி உடுப்பிட்டி அமெரிக்க மிஷன் கல்லூரி, தேவரையாளி இந்துக் கல்லூரி ஆகியவற்றின் முன்னாள் ஆசிரியரும் பருத்தித்துறை வை.எம்.சி.ஏயின் செயலாளரும் பருத்தித்துறை கட்டைவேலி மெதடிஸ்த திருச்சபையின் நீண்ட காலச் செயலாளரும் நெல்லியடி மெதடிஸ்த திருச்சபையின் வழிகாட்டியும் சபைப்பிரதிநியுமாகிய இவர் வதிரி கலா நிலைய கிராமிய அபிவிருத்தச் சங்கத்தின் ஆரம்பகாலச் செயலாளரும் ஆவார். (10)

★ ★ ★ ★



மாவிட்டபுரத்தைச் சேர்ந்த நாகநாதர் ஆனந்தராஜா தனது 35 வருட ஆசிரிய சேவையில் இருந்து அண்மையில் ஓய்வுபெற்றார். இவர் மாவிட்டபுரம் திருமகள் சனசமூக நிலையத்தின் நிர்வாகசபை உறுப்பினராகவும், பொருளாளராகவும், செயலாளராகவும் ஏறக்குறைய நாற்பது வருடங்கள் இருந்துள்ளார்.

கஞத்துறை ஸ்ரீவேலாயுத சுவாமி கோயில், கதிர்காமம் முருகன் ஆலயத் தொண்டர் சபை ஆகியவற்றின் நிர்வாக சபை உறுப்பினராகவும் இவர் இருந்துள்ளர்.

தெல்லிப்பழை கல்விக்கோட்ட அதிபர் சங்கத்தின் நிர்வாக சபை உறுப்பினராகவும், செயலாளராகவும் பொருளாளராகவும் தலைவராகவும் பல வருடங்கள் சேவையாற்றியுள்ளார். (10-45)

# தள்ளாத வயதிலும் ஆலயப்பணி செய்தார்



ஒரு மனிதன் சமூகத்தில் தானுண்டு, தன் வேலையுண்டு என ஒதுங்கியிருந்துவிட்டால், அவன் வாழ்ந்த வாழ்வும் தெரியாது. வாழ்ந்த சுவடும் தெரியாது. எனவே வாழும் காலத்தில் சமூகத்திற்கு தன்னாலான சேவைகளை முடிந்தளவு செய்யவேண்டும். அந்த வகையில் தான் சார்ந்த கிராமத்தில் முக்கிய திருத்தலமான கொக்குவில், நந்தாவில் கற்புலத்து மனோன்மணி அம்பாள் ஆலயத்தின் வளர்ச்சியில் அதிக ஈடுபாடு கொண்டு ஆலயத்தின் முன்னேற்றத்திற்காகத் தொண்டாற்றியவர்களில் ஒருவராக, பெருமைக்குரிய பெரியோராக செல்லத்துரை இராசையா விளங்கினார். தன்வாழ்நாளில் ஆலயத்தின் சகல திருப்பணிகளிலும் அவர் முன்னின்று உழைத்தவராயினும் குறிப்பாக ஆலய முன்றிலில் 1982முதல் வானளாவ ஓங்கியுயர்ந்து அழகாகக் காட்சிதரும் இராஜகோபுர நிர்மாணத்தில் இவரது பங்கு அளப்பரியது.

கொக்குவில் கிராமத்தில் 1916ஆம் ஆண்டு செல்லத்துரை-சிவபாக்கியம் தம்பதிகளின் புத்திரராகப் பிறந்து அவ்வூரிலேயே அன்னலட்சுமி எனும் பெண்ணை மணந்து சகல செல்வங்களுடனும் இனிய மழலைச் செல்வங்களையும் பெற்ற 'முசுப்பாத்தி' நடராஜா என அப்பகுதி மக்களால் அன்பாக அழைக்கப்பெற்ற செல்லத்துரை இராசையா அண்மையில் எம்மைவிட்டு பிரிந்துவிட்டார். இருந்தபோதிலும் அப்பெரியாரை நாம் எளிதில் மறந்துவிடமுடியாது.

இவர் யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரியில் தனது கல்வியைக் கற்றுத் தேறி வியாபாரத் துறையில் தன்னை முழுமையாக ஈடுபடுத்தி வாழ்வில் முன்னேற்றம் கண்டார்.

**நீத்தார் நயப்புரை**

1995ஆம் ஆண்டு நாட்டில் ஏற்பட்ட பாரிய இடப்பெயர்வின்போதும் மனோன்மணி அம்பாளின் மேல் நம்பிக்கை கொண்டு இடம்பெயராது இங்கேயே தங்கியிருந்து அம்பாளின் தரிசனம் அனுதினமும் கிடைக்கப் பெற்றவர். இடப்பெயர்வின் பின் மீண்டும் அக்கிராம மக்கள் மீளவும் வந்தபின்னர் நின்று போயிருந்த சமயச் கிரியைகளை ஏனையோருடன் சேர்ந்து இடம்பெறச் செய்வதில் முக்கிய பங்காற்றியவர். மேலும் ஆலய மடத்தில் சமயப் பெரியார்களின் குருபூஜை தினங்களை கிரமமாக நடத்துவதில் முன்னின்று செயலாற்றினார். அத்துடன், வருடாவருடம் இடம்பெறும் தேர்த்திருவிழாவின்போது அடியவர்களுக்கு அன்னதான மடத்தில் மிகச் சிறப்பாக நடத்தப்படும் மாகேஸ்வர பூஜையிலும் அனைவரோடும் சேர்ந்து முன்னின்று செயலாற்றிய பெரியார்களில் இவரும் ஒருவர். ஆலய முன்றிலிலுள்ள மனோன்மணி சனசமூக நிலையத்தின் வளர்ச்சிக்கும் இவர் நல்ல ஆலோசகராகத் திகழ்ந்தார். மேலும் அயல் பாடசாலைகளின் வளர்ச்சிக்கும் தன்னாலான உதவிகளைச் செய்துவந்தார். தனது தள்ளாத வயதிலும் இந்த ஆலயத்தின் தர்மகர்தாக்களில் ஒருவராக இருந்து செயலாற்றிவந்தார்.

இப்பெரியார் தனது 89ஆவது வயதில் அமரராகி மனோன்மணி அம்பாளின் பாதாரவிந்தத்தை சென்றடைந்தார்.

**கு.சண்முகநாதன், நீதிமன்றப் பதிவாளர் சேவை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழீழத் தேசம் பொருளாதாரத்தில் தன்னிறைவடையும் நாள் விரைவில்

## பொருண்மியக் கண்காட்சியில் தமிழ்ச்செல்வன் நம்பிக்கை

வட்டக்கச்சி, செப்.4

எமது தமிழீழ தேசம் பொருளாதாரத்தில் தன்னிறைவு காணும் நாள் மிகவிரைவில் வரும்.

- இவ்வாறு தெரிவித்தார் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன்

கடந்த முதலாம் திகதி வட்டக்கச்சி ஒருங்கிணைந்த மாதிரிப் பண்ணையில் ஆரம்பமான விவசாயக் கண்காட்சியில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே சு.ப. தமிழ்ச செல்வன் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் உரையாற்றுகையில் கூறியதாவது:-

எங்களுடைய தேசத்திலே போராட்டம் தொடங்கிய ஆரம்ப காலத்திலிருந்தே எங்கள் தேசியத் தலைவர் மக்களினுடைய தேவைகளை நிறைவேற்றி துறைசார் வளர்ச்சிகளையும் ஏற்படுத்திக் கொள்வதற்காக பல்வேறுபட்ட கட்டமைப்புகளைபோராட்ட சூழலிலே கட்டியெழுப்பியிருக்கின்றார்.

அந்த வகையிலே தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனமும் போராட்ட சூழலிலும் மக்களுடைய வாழ்வு நிலையினை மேம்படுத்திக் கொள்ள - போர்ச்சூழலில் பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகங்கொடுக்கின்ற மக்களுடைய வாழ்வு நிலையைப் பாதுகாத்துக் கொள்வதற்கும் பல்வேறு திட்டங்களை முன்னெடுத்தது.

உணவுத் தடை, கோரமான யுத்தம் போன்ற பெரும் அவலங்களுக்கு முகங்கொடுத்து எமது மக்கள இந்த மண்ணிலே எப்படி வாழ்ந்தார்களென்பது எல்லோராலும் வியப்பாகப் பார்க்கப்படுகின்ற விடயம்.

எங்களைப் பொறுத்தவரையில் இந்தக் கண்காட்சி புதுமையானதுதான் ஏனெனில், எந்தவித வளங்களுமின்றி எமது சுயமுயற்சி மூலம் நாங்கள் உயிர்வாழ்ந்து கொண்டிருக்கின்றோம்.

இடம்பெயர்ந்த பெருமளவான மக்கள் சமாதான காலத்திலே எங்களுடைய பிரதேசத்தையும் 'யுத்தங்களிற்கு முகங்கொடுத்த மக்களையும் பார்த்து ஆறுதல் கூறுவதற்கும்' உதவிகள புரிவதற்கும் இங்கே வருகை தந்திருக்கின்றார்கள்.

இதனைவிட புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வசிக்கும் எங்களுடைய மக்கள் எல்லாத் துறைகளிலும் வளர்ச்சியடைந்திருக்கின்றனர். அவர்கள் தமது ஆற்றல்களையும் அனுபவங்களையும் எமது நாட்டில் பகிர்ந்து கொள்ளத் தயாராகிவருகின்றனர்.

இன்று நாங்கள் பல பிரதேசங்களை இராணுவத்திடமிருந்து மீட்டு எடுத்துள்ளோம்.

எதிர்காலத்திலே எங்களுடைய மக்கள் எமது தேசத்தை ஆளுகின்ற முழுமையான சூழலை நோக்கி நாங்கள் விரைவாக முன்னோக்கிச் சென்றுகொண்டிருக்கின்றோம்.

அந்தச் சூழலிலே நாங்களும் உலகப் பற்றிலே வளர்ச்சியடைந்த, அபிவிருத்தியடைந்த தன்னிறைவுகொண்ட தேசங்களின் மக்கள் போன்று சொந்த மண்ணிலே நிமிர்ந்து முழுக்



கௌரவத்துடன் - முழு உரிமையுடன் நிமிர்வோடு வாழும் சூழலை நோக்கி முன்னேறி வருகின்றோம் என்றார் அவர். (4-13)

# பனை தமிழரின் தேசியச் சொத்து அதனைப் பேண சபதம் எடுப்போம்!

## பனை அபிவிருத்திச் சபையின் கிளிநொச்சி இணைப்பாளர் ஏ.பி.கே.மாணிக்கம்

பனைவளம் தமிழரின் தேசிய சொத்து. அதனைப் பேணுவதற்கு நாம் முன்வர வேண்டும். இவ்வாறு தெரிவித்தார். பனை அபிவிருத்திச் சபையின் கிளிநொச்சி மாவட்ட இணைப்



பாளர் ஏ.பி.கே.மாணிக்கம்.

அவர் எமக்களித்த செவ்வியில் தெரிவித்த விடயங்கள் வருமாறு:-

● *கேள்வி:* இந்தக் கண்காட்சி எந்த வகையில் பயனுள்ளதாக அமைந்தது.

❑ *பதில்:* விவசாயத்துடன் இணைந்த ஒரு பிரதானமான வளம் பனைவளம் பண்டைய காலத்திலே இந்தப் பனையை நம்பி வாழ்ந்த மக்கள் ஏராளமாக இருந்தார்கள். பனையிலிருந்து உற்பத்தி செய்யப்பட்ட பொருள்களையே பாவித்தும் வந்தார்கள். இப்போது அந்தப் பாவனை அருகி வருகிறது.

இதனால், அத்தகைய பனம் பொருள்களின் உற்பத்திகளும் குறைந்துவிட்டன. மீண்டும் அதனை வளர்ப்பதற்காக நாங்கள் யுவதிகளைத் திரட்டி அவர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்கி பனையிலிருந்து 81 வகையான பொருள்களைத் தயாரித்திருக்கின்றோம்.

இவ்வாறு விதம்விதமாக உற்பத்தி செய்யப்பட்ட இந்தப் பொருள்களை மக்களுக்கு தெரியப்படுத்துவதற்கு பொருண்மியத்தினுடைய இந்தக் கண்காட்சி மிகுந்த வாய்ப்பாக அமைந்தது.

● *கேள்வி:* தமிழர் பகுதிகளில் பனவளம் எப்படியிருக்கிறது.?

❑ *பதில்:* பனைவளம் தமிழ்மக்களினுடைய தேசியச்சொத்து. அதனை வடக்கு-கிழக்கு மகாணத்திலே இற்றைக்கு 25 ஆண்டுகளுக்கு முன்னர் ஒருகோடிக்கு மேற்பட்ட பனைமரங்கள் இருந்திருக்கின்றன. ஆனால், பின்னர் ஏற்பட்ட அனர்த்தங்களினால் அவற்றில் பெரும்பாலானவை அழிக்கப்பட்டு விட்டன. இதனை மீள்நடுகை மூலம்தான் ஈடுசெய்யமுடியும். இந்த செயற்பாட்டை செய்வதற்கு பனை அபிவிருத்திச் சபை பல ஆய்வுரைகளைச் செய்து நடைமுறைப்படுத்திவருகிறது.

எமது மூதாதையர்கள் எவ்வாறு பனைவளத்தின் பயனைப் பெற்று வளததோடு வாழ்ந்தார்களோ பனை உற்பத்திப் பண்டங்களை உண்டு ஆரோக்கியமானவர்களாக நீண்ட காலத்துக்கு வாழ்ந்தார்களோ அந்த நிலையை மீண்டும் உருவாக்கவேண்டும் என்ற நோக்கில் எமது செயற்பாடுகளை முடுக்கி விட்டிருக்கின்றோம்

● *கேள்வி:* இதற்கு அரசின் உதவி எப்படியிருக்கிறது?

❑ *பதில்:* இலங்கையிலுள்ள கூட்டுத்தாபனங்களிலே பனை அபிவிருத்திச் சபையும் ஒன்று. அபிவிருத்தி என்ற பெயரிலே குறிக்கப்பட்ட அளவு பணத்தை மட்டுமே இச்சபைக்கு அரசு வழங்குகிறது. அந்த நிதியை கொண்டு இச் சபையை சிறந்த முறையில் நடத்த முடியாது.

எனவே, அரசு மாற்றாந்தாய் மனப்பான்மை இல்லாமல் இது ஒரு தேசிய வளம் என்ற ரீதியிலே இதற்கு போதிய நிதியையும் ஆக்கபூர்வ்மான தொழில்நுட்ப உபகரணங்களையும் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும்.

அதன்மூலம்தான் இந்தச் செயற்பாட்டை சிறந்த முறையில் செயற்படுத்தமுடியும்.

ஒருகாலத்திலே பனங்கள்ளு சாராயமாக வடிக்கப்பட்டு நல்ல விலைக்கு விற்கப்பட்டது. தென்பகுதியிலே இந்தச் சாராயத்துக்கு நல்ல கிராக்கி இருந்தது. ஆனால் இப்போது சில அனர்த்தங்கள் காரணமாக அந்தச் செயற்பாடு தடைப்பட்டுப்போயிருக்கிறது.

இதனை அரசும் ஏனைய துறையினரும் உணர்ந்துகொண்டு இதன் பயன்பாட்டை மக்கள் பெற்றுக்கொள்வதற்கு உதவவேண்டும்.

● *கேள்வி:* கிளிநொச்சி மாவட்டத்தில் பனைவள உற்பத்திகள்....?

❑ *பதில்:* கிளிநொச்சி மாவட்டத்தில் பூநகரி, கண்டாவளை, பளை போன்ற பிரதேசங்களில் பனை மரங்கள் கூடுதலாக இருந்தன. ஆனால், இன்று 75 சதவீதத்துக்கும் மேற்பட்ட பனைகள் அழிக்கப்பட்டுவிட்டன. இருந்தாலும் பனையின் உற்பத்தியைப் பெருக்க வேண்டும் என்பதல் கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் க.இராசநாயகம் அவர்கள் பல செயற்பாடுகளை மேற்கொண்டிருக்கிறார்.

புனர்வாழ்வு அமைச்சின் நிதியுதவியுடன் இங்குள்ள படித்த யுவதிகளுக்கு மாதாந்த ஊக்குவிப்புக் கொடுப்பனவுகளையும் வழங்கி பனம் கைப்பணிப் பொருள் உற்பத்திக்கான பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன.

ஆரம்பத்தில் இந்தப் பயிற்சியைப் பெறுவதற்கு சிலர் தயக்கம் காட்டினார்கள். இருந்த போதிலும் பின்னர் பலர் இதற்கு முன்வந்தார்கள். இப்போது பொருண்மிய நிறுவனத்தின் இந்தக் கண்காட்சியின் மூலம் இந்தக் கைப்பணிப் பொருள்களைப் பார்வையிட்டவர்கள் தாங்களும் இந்தப் பயிற்சியைப் பெறவேண்டும் என்று முன்வந்திருக்கிறார்கள்.

எனவே, எதிர்காலத்தில் கிளிநொச்சி மாவட்டத்தில் இந்தத் துறை மிகுந்த வளர்ச்சியடையும் என எதிர்பார்க்கின்றோம்.

● *கேள்வி:* பனம் பொருள் உற்பத்தித் துறையை வளர்ப்பதற்கு வேறு ஏதாவது தடைகள் இருக்கின்றனவா?

❑ *பதில்:* பனம் கைப்பணிப் பொருள் உற்பத்தியாளர்களுக்கு உரிய சந்தை வாய்ப்புகள் இல்லை. உற்பத்தியாளர்களுக்குப் போதிய வருமானம் கிடைத்தால்தான் அவர்கள் அதிலே தொடர்ந்தும் ஈடுபடுவார்கள். எனவே, இவற்றுக்கு உரிய சந்தைவாய்ப்புக்கள் ஏற்படுத்திக் கொடுக்கப்படவேண்டும். தென்பகுதியிலே இருந்து வருகின்றவர்கள் பனம் கைப்பணிப் பொருள்களை விரும்பி வாங்கிச் செல்வதைக் காணமுடிகிறது. இது எமக்குப் பெரும் உற்சாகத்தைத் தந்திருக்கிறது. எனவே, எதிர்காலத்தில் இந்த உற்பத்திகளைத் தென்னிலங்கைக்குக் கொண்டுசென்று விற்பதற்கு ஏற்ற சந்தை வாய்ப்புக்கள் ஏற்படுத்தப்பட்டால் இந்தத்துறையை மேலும் வளர்க்கமுடியும்.

**பார்த்து உவந்தவர்: அற்புதன்**

● *கேள்வி:* பனம் உணவுப் பண்டங்களின் உற்பத்தி எப்படி இருக்கிறது...?

❑ *பதில்:* முற்காலத்தில் பனம் உணவுப் பண்டங்களைப் பெருமளவில் தயாரித்து உண்டு எமது மக்கள் ஆரோக்கியமாக வாழ்ந்தார்கள். ஆனால், அந்த நிலை இப்போது இல்லை.

பனம் வெல்லம் மருத்துவ தேவைக்குப் பயன்படுத்தக்கூடியது. ஆனால், அது இப்போது சந்தையில் இல்லை. கலப்படம் செய்யப்பட்ட வெல்லமே விற்பனை செய்யப்படுகிறது. தரமான பனை வெல்ல உற்பத்தி தற்போது இங்கு நடைபெறுவதில்லை.

எனவே, அத்தகைய உற்பத்திகளை ஊக்குவிப்பதன் ஊடாக எமது பொருளாதாரத்தை வளப்படுத்துவதுடன் ஆரோக்கியமான சமுதாயத்தையும் கட்டியெழுப்ப முடியும்.

## பார்வையாளர்களின் உள்ளத்திலிருந்து...

### திருமதி து.ராஜேஸ்வரி
(பனம் பொருள் போதனாசிரியர், முல்லைத்தீவு மாவட்டம்)



பனை அபிவிருத்திச் சபை இப்படியான கண்காட்சிகளில் பல தடவைகள் பங்கு பற்றியிருக்கிறது. அந்த வகையில் நாங்கள் கட்டாயம் வன்னியிலும் இப்படியான ஒரு கண்காடசியில் பங்கேற்க வேண்டும் என்பதற்காக இங்கு வந்திருக்கின்றோம்.

பனை வளத்தைப் பொறுத்த வரையில் அதிலிருந்து நாங்கள் ஏராளமான வளங்களைப் பெற்றுக்கொள்ளமுடியும். அதிலும் அதற்கு மூலப்பொருள் செலவுகூட பெரிதாக தேவையில்லை.

இன்று எமது மக்கள் போரினால் தாக்கமடைந்து வறியவர்களாகியிருக்கின்றார்கள். இவ்வாறான மக்களுக்கெல்லாம் பெருமளவு வருமானத்தைக் கொடுக்கக்கூடிய முக்கியமான ஒரு வளமாக பனை வளம் காணப்படுகின்றது.

இந்தத் துறையில் மக்களுக்கு ஈடுபாட்டை அதிகரிப்பதற்கு இந்தக் கண்காட்சி உதவுகின்றது.

### கணேசலிங்கம் சர்வேஸ்வரன்
(விவசாயி)



வன்னியில் எரிபொருள் தட்டுப்பாடு இருந்த காலத்தில் விவசாயம் செய்வதற்கு நாங்கள் எவ்வளவோ கஷ்டப்பட்டோம். ஒரு லீற்றர் மண்ணெண்ணெய் 250 - 300 ரூபாவாக இருந்த காலத்தில் ஒன்றுமே செய்ய முடியாத ஒரு இக்கட்டான நிலைமை.

அந்த நேரத்தில் பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினால் மாடுகளைக் கொண்டு நீர் இறைக்கும் முறை அறிமுகப்படுத்தப்பட்டது. அதுவே எமக்கு மிகவும் கைகொடுத்தது.

இப்போது இயந்திரங்களைக் கொண்டு நீர் இறைக்கின்றோம். இருந்தாலும் மீண்டும் பொருளாதாரத் தடை அமுலுக்கு வந்தால் இந்த முறையைப் [illegible] செய்தே தீருவோம். தண்ணீர் இறைப்பதற்கு இப்படியும் ஒரு முறை இருப்பதைப் பார்த்து இங்கு பலரும் ஆச்சரியப்படுகின்றார்கள்.

## காட்சிச்சாலைப் பிரமுகர்களிடமிருந்து...

### ஷியாட்
(சிற்றிகார்டின் நிறுவனம், தெகிவளை)



இந்தக் கண்காட்சி ஒரு முற்போக்கான செறபாடு. வன்னிப் பகுதி விவசாயிகளுடைய ஆறறலை மேலும் வளம்படுத்த இதுவும் வெள்ளாமை விளைச்சலை அதிகரிக்கும்.

எமது நிறுவனம் விவசாயிகளுக்கு நீர்ப்பாய்ச்சல் முறையில் புதிய புதிய பொறிமுறைகளை அறிமுகம் செய்கிறது. தற்போது நீர்த் தட்டுப்பாடு ஏற்பட்டிருப்பது அனைவருக்குமே தெரியும். இந்த நிலையில் இருக்கின்ற தண்ணீரையும் வீணாகிப் போய் விடாமல் பார்த்துக் கொள்ளவேண்டிய தேவையும் பொறுப்பும் எங்களுக்கு இருக்கிறது.

எனவே, பயிர்களுக்கு நீர்பாய்ச்சும் போது வீண்விரயங்கள் ஏற்படுவதைத் தவிர்த்து உரிய முறையில் - போதியளவு நீர் பயிர்களுக்கு கிடைப்பதற்கு நவீன நீர்ப்பாய்ச்சல் குழாய்களை இங்குள்ள விவசாயிகளுக்கும் அறிமுகப்படுத்துவதற்கு இந்தக் கண்காட்சி மிகவும் உதவியிருக்கினறது.

### ஹசீல் அப்பாஸ்
(அல்ஜீபோல் நிறுவனம்)



நன்றாக ஒழுங்குபடுத்தி இதனை அமைத்திருக்கின்றார்கள். இந்தக் காட்சியின் நோக்கத்தையும் இது நடைபெறுகின்ற முறைகளையும் பார்க்கின்ற போது வியப்பாக இருக்கிறது.


ஒரு ஒழுங்குமுறை பேணப்பட்டு வருவதைப பார்க்க முடிகிறது. நாங்கள் முதற்தடவையாக இங்கு வந்திருக்கின்றோம். ஓர் இடத்துக்குப் போய்ப் பார்த்தால் தான் எங்களுக்கு அங்குள்ள நிலைமைகள் தெரியும். அந்த வகையில் இங்கு வந்த பிற்பாடு இது மிகவும் சிறப்பாக இருப்பது தெரிகிறது.

புதிய வகை கிருமிநாசனிகளையும் உரவகைகளையும் இங்கு கொண்டு வந்து அறிமுகப்படுத்துகின்றோம். இதனை வாங்குவதற்கு விவசாயிகள் ஆர்வமாக இருக்கின்றார்கள். நாங்களும் இவற்றை இங்கு விநியோகிக்கின்ற பொறுப்பை பொருண்மியத்தினரிடம் கொடுக்க உள்ளோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எவர் தயவும் தேவையில்லை; எமது வளம் எமக்குப் போதும்!










## வட்டக்கச்சி விவசாயக் கண்காட்சியின் சில பதிவுகள்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கத்தோலிக்க எழுத்தாளர் சங்கம் நடத்தும் கவிதை, கட்டுரை ஓவியப் போட்டிகள்

ஆக்கச் செயற்பாடுகளை ஊக்குவிக்கும் முகமாக தேசியகத்தோலிக்க எழுத்தாளர் சங்கம் சிறுகதை, கவிதை, கட்டுரை, ஓவியம் போன்ற போட்டிகளை நடத்தி சான்றிதழ்கள் வழங்கவுள்ளது.

ஆயிரம் தொடக்கம் ஆயிரத்து 200 வரையான சொற்களுக்குள் சிறுகதைகள் அமைய வேண்டும். வயது எல்லையின்றி எவரும் பங்குபற்றலாம் எனவும் தெரிவிக்கப்பட்டது.

கவிதை, கட்டுரை, ஓவியம் போன்றன பாடசாலை மாணவர்கள் மத்தியில் மட்டுமே நடைபெறும். கவிதைகள் 30 வரிகளுக்கு மேற்படாதிருக்கவேண்டும். கட்டுரைகள் 500 சொற்களுககுள் அடங்க வேண்டும். ஓவியங்கள் 'ஏ-4' தாளில் வரையப்பட்டிருக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது. பாடசாலை மாணவர்களுடைய ஆக்கங்கள் யாவும் அதிபர்களுடைய அத்தாட்சிப்படுத்தலுடன் அனுப்பப்படவேண்டும்.

ஆக்கங்கள் யாவும் இம்மாதம் 30 ஆம் திகதிக்கு முன்பாக கொழும்பில் உள்ள தேசிய கத்தோலிக்க எழுத்தாளர் சங்கப் பொதுச் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-152)

## நடமாடும் சேவை

அத்தியடி (ஜே/78), சிறாம்பியடி (ஜே/79), பெரியகடை (ஜே/80) ஆகிய கிராம அலுவலர் பிரிவுகளைச் சேர்ந்த மக்களுக்கு வாக்காளர் இடாப்பில் பெயர்களைச் சேர்த்தல், தேசிய அடையாளஅட்டை பெற்றுக்கொடுத்தல் ஆகியவற்றுக்கான நடமாடும் சேவை எதிர்வரும 7ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 9 மணிக்கு ஆரியகுளத்தில் உள்ள புதிய உயர் கல்லூரி நிறுவன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

மேற்படி பிரிவுகளைச் சேர்ந்த மக்கள் ஆவணங்கள் சகிதம் சமுகமளித்து நடமாடும் சேவையில் பயன்பெறுமாறு யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பா.செந்தில்நந்தனன் கேட்டுள்ளார். (10)


## விற்பனையாளர்கள் தேவை

புடைவை வியாபாரத்தில்
அனுபவமுள்ள விற்பனையாளர்களும்
பழகவிரும்புபவர்களும்
உடனே தேவை.
சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
தொடர்பு:
**விளம்பர இல. 2362**
**மே/பா உதயன், யாழ்ப்பாணம்.**
(35999)

## விற்பனைக்குண்டு

ஒருநாள் குஞ்சுகளும், 15 நாள்வரை வளர்க்கப்பட்ட லேயர் பேடு, சேவல் குஞ்சுகள் விற்பனைக்குண்டு. தேவைப்படுவோர் தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி:
பொது முகாமையாளர்,
**யாழ். மாவட்ட அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம,**
திருநெல்வேலி கிழக்கு, கோப்பாய்,
தொலைபேசி இல: 060 221 2926.
(சி.374405)

## தொலைத் தொடர்பு நிலைய உரிமையாளர்களே!

வெளிநாடுகளுக்கான **Conecting Call**
(மிகக்குறைந்த கட்டணம்)
விவரங்களுக்கு:
**குட்வில் கொமினிகேசன்**
**T.P.: 021 222 3332**
48. சென்பற்றிக்ஸ் வீதி. யாழ்ப்பாணம்.
(சி37363)


## பதினைந்தாவது பிறந்தநாள் வாழ்த்து

HAPPY BIRTHDAY

04.09.2004

செல்வி

**சித்ரா**

(சிந்து)



வைரவர் கோயிலடி, வதிரி,
கரவெட்டியைப் பிறப்பிடமாகவும்
ஜேர்மனியை வதிவிடமாகவும் கொண்ட
**உதயகுமார் - ஆனந்ததேவி**
தம்பதிகளின்
செல்வப்புதல்வி
செல்வி **சித்ரா** (சிந்து)
தனது பதினைந்தாவது பிறந்தநாளை இன்று (04.09.2004)
சனிக்கிழமை தனது இல்லத்தில் (வதிரி, கரவெட்டி)
வெகுசிறப்பாகக் கொண்டாடுகின்றார்.
இவரை ஜேர்மனியில் உள்ள அப்பா, அம்மா, அண்ணா,
மற்றும் உற்றார், உறவினர்கள், நண்பர்கள்
அனைவரும் பல்கலையும் கற்றுச் சகல சௌபாக்கியங்களும்
பெற்றுப் பல்லாண்டு வாழ வாழ்த்துகின்றார்கள்.

வாழ்த்துவோர்:
அப்பா, அம்மா, அண்ணா (ஜேர்மனி).

வைரவர் கோயிலடி,
வதிரி, கரவெட்டி.
T.P.: 0172908598, 00495246202530. (35835) (24-34-19)

விஸ்வ பிரமநம

## பூப்புனித நீராட்டுவிழா அழைப்பு

**அன்புடையீர்!**

நிகழும் மங்களகரமான தாரண வருடம் ஆவணி மாதம் 19 ஆம் நாள் இன்று (04.09.2004) சனிக்கிழமை காலை 11.30 மணிமுதல் 12.30 மணிவரையுள்ள சுபமுகூர்த்த வேளையில்



எமது புதல்வி திருநிறை செல்வி

**தீபிகா**



பூப்புனித மங்கள நீராட்டு விழா நடத்த பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்பசகிதம் வருகைதந்து செல்வியை ஆசீர்வதிக்கும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.


**இவ்வழைப்பையே தனிப்பட்ட அழைப்பாகவும் ஏற்றுக்கொள்ளவும்.**

சொ.தவக்குமார் குடும்பம்
**U.S.A.**

திரு.திருமதி தவக்குமார் குடும்பம்
53/1, கேசாவில் லேன்,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்.

(36028)(34-21-11-18)

## நினைவஞ்சலி



உடுவில் கிழக்கு.
கற்பகப் பிள்ளையாரடி
திருமதி
**கந்தையா யோகம்மா**
அவர்கள் இறைபதமெய்திய
ஓராண்டு நினைவு

திதி: அபரபட்ச ஷஷ்டி

இப்புவிதனில் இல்லறம் தனை இனிதாய்
அனுபவித்து குடும்பத்திற்கோர் ஒளிவிளக்காய்
ஒளிர்ந்த தெய்வமே உமை மறப்போமோ நாம்!

இணுவில். (36030) (34-42-19) - குடும்பத்தினர்.

## முதலாவது 04.09.2004 பிறந்தநாள் வாழ்த்துக்கள்




திரு. திருமதி சிவராஜ் - கிருஷ்ணவதனி
(வதனா)
தம்பதிகளின் செல்வப் புதல்வி
செல்வி வர்ஷிகா
தனது முதலாவது பிறந்தநாளை
இன்று (4.9.2004) சனிக்கிழமை
துன்னாலையில் உள்ள அத்தை இல்லத்தில்
வெகுவிமரிசையாகக் கொண்டாடுகிறார்.

இவரை சுவிஸில் இருக்கும் அன்பான அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, இந்தியாவில் இருக்கும் அம்மப்பா, அம்மம்மா, பெரியசித்தி கஸ்தூரி, குட்டிச் சித்தி கல்யாணி, பெரிய அம்மப்பா, பெரிய அம்மம்மா, மாமா பாலா, அத்தை சைலா, அத்தான் சஜீவன், மச்சாள், மவிஸ்ரா, பெரியப்பா, செல்வராஜ், பெரியம்மா றஞ்சினி, பெரியண்ணா டசிகரன், குட்டியண்ணா, டிலக்ஷன், இந்தியாவில் இருக்கும் பெரியப்பா வில்வராஜ், பெரியம்மா கிருஷ்ணமாலா, பெரியக்கா நிவேதா, சின்னக்கா மதுமிதா மற்றும் உற்றார், உறவினர், நண்பர்கள் வல்வை முத்துமாரி அம்மன் அருள்பெற்றுப் பல்லாண்டு வாழ்கவென வாழ்த்துகின்றார்கள்.

வாழ்த்துவோர்:
**T.சிவராஜ்,**
**S.கிருஷ்ணவதனி.**

துன்னாலை மத்தி,
கரவெட்டி.
(35637)(34-19)

## பதினைந்தாம் ஆண்டு நினைவலைகள்

மலர்வு
28
~
11
~
1963



உதிர்வு
05
~
09
~
1989

**அமரர் பரிபூரணம் முருகானந்தன்**

அன்பின் சிகரமே!
அறிவின் ஊற்றே!
பண்பின் பிறப்பிடமே!
பாசத்தின் உறைவிடமே!
பதினைந்து ஆண்டுகள்
மறைந்தே போனாலும்
மாறாத உன் நினைவில்
மயங்குகின்றோம் நாமெல்லாம்!

உன்பிரிவால் துயருறும்:
அக்கா, அத்தான், பெரியண்ணா,
அண்ணி, மருமக்கள், கண்ணன்,
சிந்து, பெறாமக்கள், கண்ணன்
வண்ணன், பபா.

வைரவர் கோயிலடி,
வதிரி,
கரவெட்டி.
(35834)(39-42-19)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை வெகுஜன ஊடக நிறுவனம் ஆளுமையை வளர்த்திட அரிய களம்

இன்றைய தொழில்நுட்ப யுகத்தில் 'ஆளுமை' என்பது சிறியவர் முதல் பெரியவர் வரை அனைவரிடமும் மிக முக்கியமாகக் காணப்படவேண்டிய அம்சமாகும். 'ஆளுமை' என்பதற்குள் பல்வேறு திறன்கள் அடங்கினாலும் பேசும் திறன் - பேச்சாற்றல் என்பது எம் ஒவ்வொருவருக்கும் அவசியமாகின்றது. சமூகத்தில் இடத்துக்குத் தகுந்தவகையில் ஒழுங்காகத், தெளிவாகப் பேசுதல் என்பது மிகமுக்கியமாகின்றது. ஆனால், இது இன்று நம்மவரிடையே அருகிக் கொண்டு செல்வதைக் காணலாம்.

ஆனால், பேச்சாற்றலற்றவர்கள் எனத் தம்மைக் கருதிக்கொள்பவர்களும் பேசும் திறனை மேலும் வளர்ப்பதற்குரிய களம் ஒன்று யாழ்ப்பாணத்தில் இல்லையே என அங்கலாய்ப்பவர்களும் இனிக் கவலைப்படவேண்டிய தேவையே இல்லை. இதனை வளர்ப்பதற்கான உயரிய நோக்குடன் இல.15, சிறாம்பியடி ஒழுங்கை (ஸ்ரான்லி வீதி), யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலமைந்துள்ள 'மணியம்ஸ்' கட்டடத்தில் உதயமாகியிருக்கிறது இலங்கை வெகுஜன ஊடக நிறுவனம் (எம்.எம்.ஐ.சி).

இந்நிறுவனத்தின் பணிப்பாளர் எஸ்.கே. ரமேஷ், இந்நிறுவனம் மூலம் தாம் இங்கு மேற்கொள்ளவுள்ள செயற்றிட்டங்களையும் அதன் மூலம் சமூகம் பெறப்போகும் நன்மைகள் பற்றியும் இப்பகுதியில் வாசகர்களுடன் பகிர்ந்து கொள்கிறார். இதோ உங்களுக்காக....



ஆலோசகர் ரி.சுந்தரலிங்கத்துடன் நிர்வாகப் பணிப்பாளர் எஸ்.கே.ரமேஷ்

### அனுபவமும் சேவையும்

பத்திரிகை நிறுவனம் ஒன்றில் விளம்பரப் பகுதியில் பல வருடங்களாகச் சேவை செய்ததன் மூலம் நான் ஊடகத்துறையில் பல்வேறு அனுபவங்களைப் பெற்றுள்ளேன். இதன்மூலம் கொழும்பில் இலங்கை வெகுஜன ஊடக நிறுவனம் ஒன்றை ஸ்தாபித்து மாணவர்களுக்குச் சேவையாற்றி வருகின்றோம். ஊடகத்துறையில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 20 வருடங்களும் அகில இலங்கை வானொலி சேவையில் பல வருடங்கள் ஆலோசகராகவும் கடமையாற்றி அனுபவமிக்க ரி.சுந்தரலிங்கம், இலங்கை ஒலி பரப்புக் கூட்டுத்தாபனத்தின் பிரதிப்பணிப்பாளா நாயகம் வி.ஏ.திருஞானசுந்தரம், செல்வி சற்சொரூபவதிநாதன் மற்றும் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகத்துறைப பணிப்பாள ராக 30 வருடங்கள் சேவையாற்றிய எஸ்.இராமச்சந்திரன் ஆகியோருடைய ஆலோசனைகளைப் பெற்று வருகின்றோம்.

**சாம்பவி கங்கா**

எமது நிறுவனம் மூலம் பயிற்சியை முடித்துக்கொண்ட பலர் இன்று சர்வதேச ரீதியில் ஊடகத்துறையில் சேவையாற்றி வருகின்றனர். இலங்கையிலுள்ள இணைய வானொலிகள் மற்றும் தொலைக்காட்சி சேவைகளில் எமது மாணவர்கள் கடமையாற்றுகின்றனர். யாழ். செல்ரன் அன்ரனி சக்தி எப்.எம். இலும், விமலச்சந்திரன் சூரியன் எப்.எம். இலும் வேலை செய்கின்றனர்.

### நோக்கம்

எமது நிறுவனம் கொழும்பில் இவர்களுக்கு வழங்கிய சேவையைப் போன்று போக்குவரத்து, பொருளாதார நலன் கருதி யாழ்ப்பாணத்திலும் இச்சேவையை வழங்கவேண்டும் என்ற ஆர்வத்தாலேயே இங்கும் இதனை நிறுவியுள்ளோம்.

இங்குள்ளவர்களின் ஆளுமையை மேலும் விருத்திசெய்யும் திட்டத்தில் பாடசாலைகளுக்குச் சென்று அங்கு மாணவர்களின் வாசிப்புத் திறனை வளர்த்தெடுக்கும்வகையில் செயற்படவுள்ளோம். அத்துடன், ஊடகவியல் அலகு ஒன்றையும் உருவாக்கவுள்ளோம். மேலும் வயது வேறுபாடின்றி அனைவருக்கும் மற்றவர்களுடன் எவ்வாறு பேசுவது, ஒருவரது கேள்விக்கு எவ்வாறு விடையளிப்பது, தாழ்வுச் சிக்கலை எவ்வாறு போக்குவது என்பன பற்றியும் பயிற்சிகளை வழங்கவுள்ளோம்.

இன்று 'நேர்முகப் பரீட்சை' என்பது சர்வசாதாரணமாகவும், அவசியமானதாகவும் ஆகிவிட்டது. ஒருவர் எவ்வளவுதான் படித்திருந்தாலும் சில சமயங்களில் மற்றவரின் கேள்விக்கு எவ்வாறு விடையளிப்பது என்பது பிரச்சினையாக உள்ளது. சிலர் சிறந்த ஆற்றல்கள் கொண்டிருப்பார்கள். ஆனால், தாழ்வுச் சிக்கல், பயவுணர்வு காரணமாக அவற்றை வெளிப்படுத்தத் தெரியாதிருப்பார்கள். அதன் மூலம் சமூகத்துடன் ஒத்துப்போகவும் வாழ வழி தெரியாதும் நிற்பர்.

மேலும் சில பெற்றோர் தமது பிள்ளைகளுடன் எவ்வாறு கதைப்பது எனத் தெரியாதிருப்பார்கள். அதுமட்டுமன்றி சமூகத்தில் திருடுவார்கள். ஆனால், நிச்சயம் அதற்குப் பின்னணி ஒன்று இருக்கத்தான் செய்கிறது. இன்னும், இங்கு சுகாதாரச் சீர்கேடுகள் பெருமளவிலாக உள்ளன. இங்குள்ள உணவகங்கள் சுகாதாரமற்ற முறையிலேயே இயங்குகின்றன. செல்லும் கடைகளில் சந்தோசமாகச் சாப்பிடமுடியாதுள்ளது. இது சிறுபிரச்சினைதான். ஆனால, சமூகத்திற்குத் தேவையான பிரச்சினை.



யாழ்ப்பாணத்தில் இலங்கை வெகுஜன ஊடக நிறுவனம் மூலம் பயிற்சிநெறியைப் பெறும் மாணவர்களில் ஒரு பகுதியினர்.

இதுமட்டுமன்றி, தனியார் நிறுவனங்கள் வர்த்தக நிறுவன அதிகாரிகள் தமது நிறுவன ஊழியர்கள் மூலமே தமது நிறுவனத்தை அபிவிருத்திசெய்து வருகின்றனர். எனவே, இந்த நிறுவனங்களின் அதிகாரிகள் மற்றும் ஊழியர்களுக்கு வியாபாரத்துறையில் சில சிக்கல்கள் ஏற்படவாய்ப்புண்டு. எனவே, சமூகத்திலுள்ள இத்தகைய அனைத்துப் பிரச்சினைகளையும் களைந்து பல்துறைசார் மக்கள், மாணவர்களுக்குப் பல வழிகளில் பயிற்சியளிப்பதே எமது நோக்கமாகும். மொத்தத்தில் தமது ஆற்றலை விருத்தி செய்ய விரும்பும் அனைவருமே இங்கு பயிற்சி பெறலாம்.




பயிற்சி நெறிகளை வழங்குவதற்கு யாழ். பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், கொழும்பிலுள்ள மூத்த ஊடகவியலாளர்கள் ஒளிபரப்பாளர்களது உளவியல் பயிற்சியையும் தகுந்தவர்கள் மூலம் வழங்க இருக்கின்றோம். மூன்றுமாத காலத்தைக் கொண்ட இப்பயிற்சி நெறியை இவர்கள் திறம்பட வழங்கவுள்ளனர். 'வாழ்க்கையியல்' என்ற தலைப்பை அடிப்படையாகக் கொண்டே அனைத்துத் துறை சார்ந்தவர்களுக்கும் பயிற்சிகள், ஆலோசனைகளை இவர்கள் வழங்கவுள்ளனர்.

### பலாபலன்கள்

பயிற்சியாளர்களது திறமையினடிப்படையில் அவர்கள் பயிற்சிக்காகச் செலவழித்த தொகையை மீளப்பெறுவதற்கு ஊடகங்களின் அனுசரணையுடன் வழியமைக்கப்படும். இவர்களது எழுத்தாற்றலை ஊக்குவித்துப் பத்திரிகைகளில் இவர்களது எழுத்தாக்கங்களைப் பிரசுரிக்க வழிசெய்வோம். அத்துடன், ஒலிபரப்பாளர்களுக்குச் சர்வதேசரீதியில் தொழில் வாய்ப்புக் கிடைக்கும்வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளவுள்ளோம். இதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும்படி நாம் அனைத்து ஊடகத்துறைனரிடமும் வலியுறுத்தி வருகின்றோம். இதன் மூலம் இவர்கள் தக்கபலனடைவார்கள். இன்னும் 20 வருடங்களில் பெருமளவிலான எமது மாணவர்கள் இத்துறையில் சர்வதேசரீதியில் பணியாற்றுபவர்களாக இருப்பார்கள் என நாம் நிச்சயம் நம்புகிறோம். எமது நிறுவனத்தின் மூலம் வழங்கப்படும் தகைமை வாய்ந்த சான்றிதல்கள் இதற்கு மிக உறுதுணையாக இருக்கும்.

### இலவசம்! இலவசம்!!

நாம் கொழும்பில் மிகவும் வறுமைப்பட்ட மாணவியொருவருக்கு இலவசமாகவே பயிற்சி நெறியை வழங்கினோம். யாழ்ப்பாணத்தைப் பொறுத்தவரை, 'மிகமிக' வறுமைப்பட்டவர், இவருக்குக் கட்டாயம் இப்பயிற்சி நெறியை இலவசமாக வழங்கவேண்டும் என அரச அதிபரோ அன்றி தமிழீழ விடுதலைப் புலிகளின மிக முக்கிய உறுப்பினரோ சிபார்சு செய்யும் பட்சத்தில் அவருக்கு நாம் இலவசமாகப் பயிற்சி வழங்குவோம். ஆனால், அனைவருக்கும் அல்ல. இன்றைய எமது நிதி நிலையில் அனைவருக்கும் இலவசமாகப் பயிற்சி வழங்க முடியாதுள்ளது. ✳

# திட்ட முகாமைத்துவம் முறையாக பயன்படுத்தப்படுவதின் அவசியம்

இலங்கைக்கு உதவி வழங்கும் பலதரப்பு - இருதரப்பு நாடுகளில் பல நிதி ஆதாரங்களை முனைப்புடன் அபிவிருத்திக்குச் செயற்படுத்தாத நாடுகளின் பட்டியலில் இலங்கையையும் சேர்த்துக் கணக்கிடத் தொடங்கியுள்ளன. குறிப்பாக உலக வங்கி, தான் வழங்கிய நிதி ஆதாரங்களை அரச நிறுவனங்கள் பல பயன்படுத்த முடியாமல் போயுள்ள பல சந்தர்ப்பங்களை அரசுக்குச் சுட்டிக்காட்டியுள்ளது.

நிதிகளை முறையாகவும் முனைப்பாகவும் பயன்படுத்தமுடியாமல் போனமைக்குப் பல காரணங்கள் தெரிவிக்கப்படுகின்றன. திட்டங்களைத் திறமாகச் செயற்படுத்தத் தகுதியில்லாமை இதற்கு ஒரு காரணம். திட்ட முகாமைத்துவம் அல்லது திட்டங்களை முகாமைத்துவம் செய்வதென்பதற்கு விசேஷத் திறமைகள் தேவைப்படுகின்றன. திட்டங்கள் தோல்வியில் முடிந்தமைக்கு அரச நிறுவனங்களில் நிலவும் திட்டமுகாமைத்துவக் குறைபாடே காரணம் எனலாம். ஏராளமான திட்டங்கள் தோல்வியுற்றமை அல்லது திட்டங்கள் முழுமைபெறாமல் போனமை காரணமாக முழு நாடுமே எதிர்மறையான விளைவுகளுக்கு முகங்கொடுக்க நேர்ந்துள்ளது. உதவி வழங்கும் நாடுகளின் நம்பிக்கையை இழந்தமை, மக்களுக்குக் குறித்த திட்டங்கள் மூலம் கிடைக்கவேண்டிய நன்மைகள் கிடைக்காது போனமை, எதிர்பார்த்த மக்கள் வாழ்க்கைத்தர அபிவிருத்தி எட்டப்படாமல் போனமை போன்றவை இந்த எதிர்மறை விளைவுகளில் சிலவாகும்.



அண்மையில் யாழ். போதனா வைத்தியசாலை சத்திரச் சிகிச்சைக் களத்திற்குக் கொழும்பு கொமேர்ஷல் சிண்டிகேட் நிறுவனத்தால் வழங்கப்பட்ட சீ.ஆம். (C-Amm) நவீன எக்ஸ்றே இயந்திரம் கையளிக்கப்பட்டபோது எடுக்கப்பட்ட படம்.

படத்தில் கொமேர்ஷல் சிண்டிகேட் முகாமையாளர் எஸ்.கருதாபரே எக்ஸ்றே இயந்திரத்துக்கான ஆவணத்தை யாழ். அரச அதிபர் செ.பத்மநாதனிடம் கையளிப்பதையும் அருகில் வைத்தியசாலைப் பணிப்பாளர் எஸ்.சதுர்முகன், திட்டப் பணிப்பாளர் பி.சுந்தரம்பிள்ளை, வைத்தியசாலைக் கணக்காளர் மு.விஜயரகுநாதன், நிர்வாக உத்தியோகத்தர் ப.மகேந்திரதாஸன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். (ஐ.[illegible])

திட்டமுகாமைத்துவம் என்றால் என்ன? இதை விளங்கிக் கொள்வதற்குத் திட்டம் (Project) என்பதன வரைவிலக்கணத்தைச் சற்றுப் புரிந்து கொள்வது நல்லது.

பின்னால் குறிக்கப்படும் அம்சங்களைக் கொண்ட பல்வேறு விதமான செயற்பாடுகள், பணிகளை ஒரு திட்டம் கொண்டிருக்கவேண்டும்.

நிர்ணயிக்கப்பட்ட கால அளவுக்குள் முடிக்கப்படுவதற்கான குறிப்பிட்ட இலக்கு, ஆரம்பிப்பதற்கும் முடிப்பதற்குமான நிர்ணயிக்கப்பட்ட திகதிகள், நிதி ஆதார வரையறைகள் மற்றும் பயன்பாட்டுக்குரிய வளங்கள் (பணம் - தொழிலாளர் - கருவிகள்).

திட்ட முகாமைத்துவமானது திட்டமிடுதல், ஒருங்கமைத்தல், இயக்குதல், மற்றும் குறிக்கப்பட்ட இலக்குகளை அடையும் வகையில் உருவாக்கப்பட்டுள்ள ஸ்தாபன (அல்லது தனிபபட்ட) வளங்களைக் கட்டுப்படுத்தி நிர்வகித்தலைக் குறிக்கும்.

திட்டவரைவு என்பது மிகச் சாதாரணமான ஒன்றுதான். உதாரணமாகப் பல செயற்பாடுகள் தொடர்பான ஒரு பட்டியல், அவைகளை ஆரம்பிக்கும் திகதி, முடிக்கும் திகதி போன்றவை ஒரு பத்திரத்தில் குறிக்கப்பட்டிருக்கும். சிலசமயம் அது பல பிரிவுகளைக் கொண்டதாகவும் இருக்கலாம். ஒன்றில் ஒன்று தங்கியிருப்பதான ஆயிரக்கணக்கான பணிகளையும் பல லட்சம் ரூபா வரவு செலவுகளை உள்ளடக்கிய வளங்களையும் கொண்டதாக அமையலாம்.

திட்டங்களை முகாமைத்துவம் செய்வதானது ஒரு விசேஷ ஒழுங்குமுறைக்குட்பட்ட விடயமாகும். இதற்கு முகாமைத்துவத்துறையில் பிரயோகிப்பதற்குக் கிரமமான பல திறமைகள் தேவைப்படும்.

பொதுத்துறையில் பெரும்பான்மையான பணிகளைத் திட்டவடிவில் செயற்படுத்தமுடியும். அதாவது, ஆரம்பிப்பதற்கும் முடிப்பதற்கும் திகதிகள் நிச்சயப்படுத்தப்பட்டு மேற்கொள்ளப்படும் வகையில் ஒவ்வொரு பணியும் பல பிரிவுகளாகப் பிரிக்கப்படலாம். எல்லாப் பிரிவு வேலைகளுக்கும் முடிவுறும்போது திட்டப்பணி முழுமையாகிவடும். சிறு உதாரணத்தை எடுத்துக்கொள்வோம்.

யாரோ ஒருவரைத் திணைக்களம் ஒன்று வேலைக்கமர்த்த விரும்புகிறது என்று வைத்துக கொள்வோம். முதலில் அந்த நபர் எப்பொழுது வேலைக்குச் சேர்க்கப்படவேண்டும், எப்பொழுது வேலையைத் தொடங்கவேண்டும் என்பதை அத்திணைக்களம் முடிவுசெய்யவேண்டும்.

அவர் வேலையைத் தொடங்கும் நாளே திட்டத்தின் முடிவு திகதி, ஆள்களைத் தெரிவு செய்யும் திணைக்களம் எப்பொழுது அதனை ஆரம்பிப்பது, எப்பொழுது முடிப்பதென்பதைத் தீர்மானித்திருக்க வேண்டும்.

ஆனால், பொதுச்சேவைகளின் இம்மாதிரிப் பணிகளைக் கவனித்தோமானால் இம்மாதிரித் திட்ட முகாமைத்துவத் திறமைகளை அவர்கள் பயன்படுத்துவதாகத் தெரியவில்லை. இதற்குக் காரணம் மிகப்பெரிய பணிகளுக்கு மட்டுமே இந்த முகாமைத்துவத்தைப் பயன்படுத்தினால் போதும் என்ற மனப்பான்மையே ஏனைய திணைக்களச் செயற்பாடுகள் திட்டங்களுக்குள் வரவில்லை என்ற மனப்பான்மையும் இதற்குக் காணரம்.

இது ஒரு தவறான போக்கு. எமது சொந்த விவகாரங்கள் உட்பட எந்தவொரு பணியையும் திட்ட முகாமைத்துவத்துக்குள் உள்ளடக்கிச் செயற்படுத்த முடியும் என்ற வகையில் எமது மனப்போக்குகளைச் சரிப்படுத்திக்கொள்ள வேண்டும்.

**(பொதுச் சேவையாளர்களுக்கான தொலைக்கல்வி நிறுவனத்தின் (DEPS) நியூஸ் லெற்றர் வெளியீட்டிலிருந்து தொகுக்கப்பட்டது)**

- நந்தன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரங்கள்

## விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள திறிபேஸ் மோட்டர்கள் 1½ H.P. - 1410 R.P.M. உம் 40 H.P- 1450 R.P.M.உம் உண்டு. தொடர்பு: திருமதி நா.திருநாவுக்கரசு, "அசோகா", அரசடி லேன், தாவடி வடக்கு. (36025)

லிஸ்ரர் ஜெனரேட்டர் 3 பேஸ் 22K.V. உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு: 230, இராமநாதன் வீதி, திருநெல்வேலி. T.P.: 222-2485, 0777-271334. (36034)

மோட்டறோலா தொலைபேசி உடன் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: இல.0602212316/ 077-6502738 காலை 7.00 - 10.00 இற்குள் தொடர்புகொள்ளவும். (36061)

## காணி விற்பனைக்கு

இல.11, கே.கே.எஸ்.வீதி, பூநாறி மரத்தடியில், 1¾ பரப்புக் காணி விற்பனைக்குண்டு. தொடர்பு: 021-222-3790. (36051)

## வீடு விற்பனைக்கு

யாழ்ப்பாணம், அரசடி வீதி, கந்தர்மடத்தில் 2½ பரப்புக் காணியில் 4 அறைகளுடன் சகல வசதிகளும் கொண்ட புதிய வீடு விற்பனைக்குண்டு. தொடர்பு: 115/1, அரசடி வீதி (யூனிவேர்சல் ரியூட்டரி இருந்த ஒழுங்கை), கந்தர்மடம், யாழ்ப்பாணம். (35816)

முடக்காடு வீதி, கரவெட்டியில் 4 அறைகள் கொண்ட வீடு, 3 பரப்புக் காணியுடன் விற்பனைக்குண்டு. தொடர்பு: ஆ.சிவராசா, "சிவா திருமணசேவை", கொடிகாமம் வீதி, துன்னாலை தெற்கு, கரவெட்டி.T.P.:077 6243114.(36060)

## வாடகைக்குத் தேவை

பாடசாலையில் கல்வி கற்பிக்கும் B.A. பட்டதாரி ஆசிரியை ஒருவருக்குச் சாப்பாட்டுடன் கூடிய வசதியுடன் அல்லது தனியாக ஓர் அறை அல்லது வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: விளம்பர இல. 2365,மே/பா, உதயன், யாழ்ப்பாணம். (36029)

## வீடு வாடகைக்கு

திருநெல்வேலியில் உள்ள வீடு ஒன்று வாடகைக்கு விடப்படும். தொடர்புகொள்ள வேண்டிய முகவரி: 226, இராமநாதன் வீதி, திருநெல்வேலி. (36047)

## தவறவிடப்பட்டது

C.T.Bயில் காப்பாளராகக் கடமையாற்றும் V.கிருஷ்ணகுமாரினது அடையாள அட்டை, சாரதி அனுமதிப் பத்திரம், A.T.I. அடையாள அட்டை, ஒரு தொகைப்பணம் மற்றும் முக்கிய ஆவணங்களோடு 780, 764 பயணப் பாதையில் கடமையாற்றும்போது தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் C.T.B. கோண்டாவில் என்னும் முகவரிக்குத் தகவல்தருமாறு கேட்டுக்கொள்கின்றேன். (36052)

## கோழிக்குஞ்சு விநியோகம்

தரமான Prima, Broiler விலை ரூபா 35/- மற்றும் Prima layer Brown/White குஞ்சுகள் விலை ரூபா 50/- 13.09.2004 பிற்பகல் விநியோகிக்கப்படும். எமது பருத்தித்துறைக் கிளையிலும் Suddi farm வட்டுக்கோட்டை, சாவகச்சேரி முருகனிலும் பெற்றுக்கொள்ளலாம். முன்கூட்டியே பதிவுசெய்யவும். தொடர்பு: க.தனபாலசிங்கம் (நல்லூர் வீடியோ சென்ரர் வளவு), 19, முருகேசர் ஒழுங்கை, முத்திரைச்சந்தையடி, நல்லூர். (36057)

## குறுவினாப் போட்டி

தென்மராட்சி,செப்.4

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலை மாணவர்களிடையேயான வணிக, விவசாய குறுவினாப் போட்டிகள் எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணிக்கு சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடைபெறவுள்ளன.

போட்டிகளுக்கு விண்ணப்பித்த மாணவர்களுடன் வர்த்தகப் பாட ஆசிரியரையும் விவசாயப் பாட ஆசிரியரையும் அனுப்பிவைக்குமாறு அதிபர்களை வலயக் கல்விப் பணிப்பாளர் வ.செல்வராசா கேட்டுள்ளார். (8-117)

## கலாசாரப் பேரவைக் கூட்டம் இன்று

நல்லூர் பிரதேச செயலக கலாசாரப் பேரவைக் கூட்டம் இன்று சனிக்கிழமை பி.ப. 3 மணிக்கு பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இக்கூட்டத்தில் புதிய நிர்வாகசபைத் தெரிவும், கலாசாரப் பேரவை செயற்பாடு பற்றிய தீர்மானமும் மேற்கொள்ளப்படவுள்ளதாகப் பிரதேச செயலர் திருமதி சு.தெய்வேந்திரம் தெரிவித்துள்ளார். (8)

# பாராட்டி வாழ்த்துகிறோம்




வியாபாரிமூலை இன்பர்சிட்டி ஸ்ரீ சித்திவிநாயகர் ஆலய மகோற்சவ பிரதம குரு

**சிவஸ்ரீ மகா கணபதி சிவானந்தராஜாக் குருக்கள்**

(திருமூலர் திருமரபில் வேதாரண்யம் ஆதீனம், அகில இலங்கை சமாதான நீதவான்)

2004 ஆம் ஆண்டு ஆலய மகோற்சவத்தினை வெகு சிறப்பாக நடத்தியமைக்காகவும் கற்பூர விநாயகரின் திருவருள் பூரணமாக அனைவருக்கும் கிடைக்க அருளாசி வேண்டி சகல கிரியைகளையும் செய்து திருவருள் பாலித்தமைக்காகவும் பாராட்டி வாழ்த்தி வணங்குகின்றோம்.

*உரிமையாளர் -*
செ.புவனேஸ்வரன்,
வியாபாரிமூலை,
பருத்தித்துறை. (40-12-19-26)

S.P.M.
கொம்பியூட்டர் அன் ஓவ்செற் பிறின்டேர்ஸ்
V.M. றோட், பருத்தித்துறை.
(37418)

# நன்றி நவில்கின்றோம்

**அமரர் இராஜேஸ்வரி சோதிரட்ணம்**

26.08.2004 வியாழக்கிழமை இறைபதம் அடைந்த எம் குடும்பத் தலைவி **இராஜேஸ்வரி சோதிரட்ணம்** அவர்களின் மரணச் செய்திகேட்டு உடன்வந்து எமக்கு ஆறுதல் சொல்லியும் எமக்கு வேண்டிய சகல உதவிகளையும் புரிந்த எமது உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்களுக்கும், சமுகமளித்த அனைவருக்கும், தொலைபேசி மற்றும் தந்தி மூலம் அனுதாபச்செய்திகள் தெரிவித்தவர்களுக்கும், கண்ணீர் அஞ்சலிகள் வெளியிட்டவர்களுக்கும், மலர்வளையங்கள் வைத்து அஞ்சலி செலுத்தியவர்களுக்கும், இறுதிக்கிரியைகளில் கலந்தும் குடும்ப மயானம் வரை வந்து எம்முடன் துயரில் கலந்துகொண்டவர்களுக்கும், வைத்திய உதவிகள் புரிந்த மருத்துவர்களுக்கும், உதவியாளர் களுக்கும் துயரில் மூழ்கி இருக்கும் நாம் எமது நெஞ்சம் நெகிழ்ந்த நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

அரசடி,
நவாலி வடக்கு, மானிப்பாய்.
- குடும்பத்தினர்.
(36048) (12-26)

# இணையத் தளம் ஊடாக 24 மணி நேரமும் உலகெங்கும் ஒலிக்கிறது

WORLD TAMILAR
உலகத் தமிழர் வானொலி

இணைய முகவரி: **WWW.Wtrfm.com**
அதன் ஒரு வருட பூர்த்தியைச் சிறப்பிக்க
நல்லூர் திருவிழாக்கால நேரடி ஒலிபரப்பு
**26 உற்சவ நாள்களிலும்**
(ஓகஸ்ட் 21 முதல் செப்ரெம்பர் 16 வரை)
உலகின் எந்த மூலையிலிருந்தும் இணையத்தளம் மூலம் செவிமடுத்து மகிழலாம்).

**உலகத் தமிழர் வானொலியுடன்**
**நேரடியாக இணைய**

MSN messenger chat மூலம்: live @ wtrtm.com
தொலைபேசி மூலம்: 2673969
(சி-36863)

**உலகத் தமிழர் உறவுப் பாலமாக உலகத் தமிழர் வானொலி**

**ஊடக அனுசரணை:- 'உதயன்'**

# முதலாம் ஆண்டு நினைவுத் திதி

*தோற்றம்* 06 07 1947



*மறைவு* 17 09 2004

**அமரா ஆழ்வான் சோமசுந்தரம்**

(உரிமையாளர் - சன்சில்க் றைக்கிளீன், கல்வியங்காடு)

**திதி: அபரபட்ச ஷஷ்டி 04.09.2004**

**குடும்பத்தின் ஒளிவிளக்காய் திகழ்ந்து அன்போடும் பண்போடும் பாசத்தோடும் எம்மைப் பேணி பாதுகாத்து சீரோடும் சிறப்போடும் நாம் வாழ வழிகாட்டிய அன்புத் தெய்வமே!**

உங்கள் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

ஞா.பா.ச.வீதி,
கல்வியங்காடு,
யாழ்ப்பாணம். (36056)(40-12-26)
- குடும்பத்தினர்.

## தோட்ட வேலைக்கு ஆள் தேவை

**தோட்டம் ஒன்றைப் பராமரிக்க அனுபவம் உள்ள வேலையாளுடன் சமையலுக்கும் ஒருவர் தேவை. பொறுப்புகள் அற்ற சிறிய குடும்பம் விரும்பத்தக்கது. தங்குமிட வசதி வழங்கப்படும்.**

தொடர்பு: 40, கண்டி வீதி,
சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.
T.P.:021 - 2223790
(36050)(40)

## பாடசாலையை இயக்க நடவடிக்கை

எழுதுமட்டுவாள் அ.த.க. பாடசாலையைச் சொந்த இடத்தில் இயக்குவதற்கான நடவடிக்கைகள் பாடசாலை அதிபரால் எடுக்கப்பட்டு வருகின்றன. இதன் முதற் கட்டமாக மேற்படி பாடசாலையில் கல்வியைத் தொடர விரும்பும தரம் 5இற்கு உட்பட்ட மாணவர்கள் எதிாவரும் 6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 9மணி முதல் மருதங்குளம் சனசமூக நிலையத்தில் அல்லது யா/மிருசுவில் றோ.க.த.க. பாடசாலையில் பதிவு செய்துகொள்ளுமாறு பாடசாலை அதிபர் எஸ.செல்வச்சநதிரன் கேட்டுள்ளார்.(8-204)

## பளை நகருக்கு மின்சாரம்

பளை நகர்ப் பகுதிகான மின்சார விநியோகம் கடந்த வெள்ளிக்கிழமை தொடக்கம் வழங்கப்பட்டுள்ளது. பளை ஆயம் தொடக்கம் நகர்ப் பகுதி, பெரியபளை, புலோப்பளை வீதி ஆகியவற்றின் ஒரு பகுதிக்கு மின்சார விநியோகம் வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.(எ-117)

# மரண அறிவித்தல்

## பொன்னையா செல்வரட்ணம்

(ஓய்வுபெற்ற காரியதரிசி, மந்திகை வைத்தியசாலை)



உடுவிலைப் பிறப்பிடமாகவும், வரியப்புலம், சுன்னாகத்தை வசிப்பிடமாகவும் கொண்ட பொனனையா செல்வரட்ணம் நேற்றுமுன்தினம் (02.09.2004) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னையா - பகவதி தம்பதிகளின் மகனும் காலஞ்சென்ற முருகேசு-சரஸ்வதி தம்பதிகளின் மருமகனும் மகேஸ்வரியின் அன்புக் கணவரும் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, செல்வசிரோமணி ஆகியோரது சகோதரனும், சிறீபாஸ்கரன், கரிகரன் ஆகியோரின் பாசமிகு தந்தையும் சசிகலா, நந்தினி ஆகியோரின் அன்பு மாமனாரும மோசாரணி, சிவராகுல், ஆர்ணிகா, அபிலாஸ் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04-09-2004) சனிக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் சுன்னாகம், கொத்தியாலடி மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்.
'முருகவாசம்', வரியப்புலம், சுன்னாகம்.
(36012)(39-12-26-19)

# யாழ்ப்பாணத்தில் SAAMSTECH இன்

## ஆங்கில நேரடி வகுப்பு

விரிவுரையாளர்கள், ஆசிரியர்கள், வங்கியாளர்கள், அரச, தனியார் அலுவலர்கள், பல்கலைக்கழக, உயர்கல்வி மாணவர்கள், இளைஞர்கள், யுவதிகள், வீட்டுப்பெண்கள், பாடசாலை மாணவர்கள் மற்றும் அனைவருக்கும்

**முற்றிலும் புதிய முறையில்**
**முழுமையாகக் கதைப்பதற்கான வகுப்புகள்**

**50%** **04.09.2004 வரை 50% சலுகைக் கட்டணத்துடன்**

1. தொலைக்கல்வி: 24 புத்தகங்கள், ரூபா 500/=
2. யாழ்ப்பாணத்தில் நேரடி வகுப்பு: ரூபா 3000/=

யாழ்ப்பாணக் கல்லூரி பட்டதாரிகள் பிரிவு,
மானிப்பாய், சாவகச்சேரி, ஆவரங்கால், பருத்தித்துறை உட்பட
யாழ்ப்பாணத்தில் பத்துக்கும் மேற்பட்ட இடங்களில்
வகுப்புகள் இடம்பெறும்.

**நாடு தழுவிய பொதுப் பரீட்சை October 30, 2004**

**மேலதிக விவரங்கள்:**

யாழ்.தலைமையகத்தில் அல்லது 04.09.2004 சனிக்கிழமை காலை 9.00 மணிமுதல் மாலை 2.00 மணி வரை யாழ்.மத்திய கல்லூரி அருகில் உள்ள ரிம்மர் மண்டபத்தில் நடைபெறும் நேரடி வகுப்பில்

**SAAMSTECH**
**Psalm Institute of Engineering and Technology**

Colombo Head Office: 22 -1/4, Galle Road, Dehiwala. 0115540200
Jaffna Head Office: 841, Hospital Road, Jaffna.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்கள் ஒன்றுபட்டு வாழ்ந்தாலும் முனைப்புடன் எழ வேண்டிய காலம்இது

## நூல் வெளியீட்டுவிழாவில் இளம்பரிதி



யாழ்ப்பாணம்,செப்.4

பஞ்சபாண்டவர் போன்று ஒவ்வொரு கோரிக்கையாக முன்வைத்து இறுதியாக இடைக்காலத் தன்னாட்சி அதிகாரசபைத் தீர்வை நாம் முன்வைத்துள்ளபோதிலும் அரசாங்கம் அதனை வழங்குவதில் முரண்பாடுகள் பலவற்றை ஏற்படுத்துகின்றது. எனவே, இந்தக் காலகட்டத்தில் தமிழர்களாகிய நாம் எங்கிருந்தாலும் 'முனைப்புடன் எழ' வேண்டிய நிலையிலேயே இருக்கின்றோம்.

- இவ்வாறு யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் இளம்பரிதி தெரிவித்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்தவரும் தற்போது ஜேர்மனியில் வசிப்பவருமான திருமதி நகுலா சிவநாதனின் 'முனைப்புடன் எழ' இந்தத் தொகுப்பு நூல் வெளியீட்டுவிழா யாழ். பல்கலைக்கழகத் தமிழ்மன்றத்தின் ஆதரவில், யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றிய இளம்பரிதி மேலும் கூறியதாவது:-

பிறநாடுகளில் வாழும் ஈழத்தமிழர்கள் இத்தகைய இன உணர்வுமிக்க நூல்களை வெளியிடுவதன் மூலம் சர்வதேச சமூகத்திற்கு எமது நிலையை உணர்த்தியும், அங்குள்ள அரசு மற்றும் மக்களிடையே எமது செல்வாக்கைப் பரப்பியும் எமது போராட்டத்திற்கு ஒருவகையில் ஆதரவு வழங்கிவருவது போற்றத்தக்க விடயமாகும்.

மக்கள் இயந்திர வாழ்க்கையை நடத்தி வருகின்ற மேல்நாட்டில் இந்நூலின் ஆசிரியர் திருமதி நகுலா சிவநாதன், தமது குடும்பத்துக்கும் சேவையாற்றிக்கொண்டு தொழிலுக்கும் சென்று, ஜேர்மன் நாட்டிலுள்ள 'தமிழ் ஆலயச்' சிறுவர்களுக்கு இலவசமாகத் தமிழ்க்கல்வியையும் வழங்கிவருவதுடன் மட்டும் நின்றுவிடாது இத்தகைய இன உணர்வுமிக்க படைப்புக்களையும் படைத்துள்ளார். இந்த இடத்தில் இவரின் முயற்சி ஒரு போராளி புரிந்த சாதனையைப் போன்று பெரியதாகவே எங்களால் பார்க்கப்படுகிறது என்றார்.

நிகழ்வில் கலந்துகொண்டு ஆசியுரை வழங்கிய ஆறு.திருமுருகன் உரையாற்றுகையில்,

போர் அனர்த்தம் காரணமாக எமது நாட்டிலிருந்து ஆற்றல் படைத்த மக்கள் இடம்பெயர்ந்து பிறநாடுகளில் வாழ்கின்றார்கள். இவர்களில் ஜேர்மனியில் ஏறத்தாழ 30ஆயிரம் தமிழர்களும், ஆஸ்திரேலியாவில் 40ஆயிரம் தமிழர்களும், லண்டனில் ஒரு லட்சம் தமிழர்களும், கனடாவில் ஒன்றரை லட்சம் தமிழர்களும் வாழ்கின்றனர். இத்தொகையினரில் ஒட்டுமொத்தமாக 50 ஆயிரம் பேர் மட்டுமே இங்குவந்து செல்கின்றனர்.

மிகுந்த தொகையினரில், "20 வருடங்களாக நான் இலங்கைக்குப் போகவில்லை; அங்கு பிள்ளைகளுக்குச் சரியான வெக்கை" எனக் கௌரவமாகக் கூறும் மக்கள் தொகையினரே பெரும்பான்மையாக உள்ளனர். இத்தகையவர்கள் மத்தியில் தாயகச் சிந்தையோடும் தாய்நாட்டுப் பற்றோடும் வாழும் மக்களின் ஒட்டுமொத்த உள்ளக்கிடக்கைகளையும் பிரதிபலிக்கும் வகையில் இத்தகைய நூல்கள் வெளிவருவது பாராட்டத்தக்கதாகும் என்றார்.

நிகழ்வில் வாழ்த்துரை வழங்கிய யாழ். பல்கலைக்கழக வணிகபீடத் தலைவர் க.தேவராஜா, திருமதி நகுலா சிவநாதன் போன்ற தமிழ் உணர்வுமிக்கவர்கள் வெளிநாடுகளில் வாழ்ந்தால், இலங்கை, இந்தியாவிலுள்ள தமிழர்களைவிட வெளிநாடுகளில் மேலான சாதனைகள் புரியமுடியும் எனக் குறிப்பிட்டார்.

நிகழ்வில் உதவிக்கல்விப் பணிப்பாளர் கோகிலா மகேந்திரன் வெளியீட்டுரை நிகழ்த்தினார்.

யாழ். பல்கலைக்கழகத் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் தமது உரையில்,

இத்தகைய புலம்பெயர்ந்தவர்கள் மூலம் எமக்கு மறைமுகமாகவும், நேரடியாகவும் பல உதவிகள் கிடைக்கின்றன. எனவே, இத்தகையவர்களுடைய நூலாக்கத்துக்கு நாமும் கைகொடுக்கவேண்டும் என்றார்.

யாழ். பல்கலைக்கழக மெய்யியல்துறை முதுநிலை விரிவுரையாளர் க.சிவானந்தமூர்த்தி வாழ்த்துரை வழங்கினார்.

நிகழ்வில் கவிஞர் இ.முருகையன் மற்றும் பலர் உரையாற்றினார்கள்.

(ப-201)

# திருவருள் என்பது எதிர்பாராமல் கிடைப்பது



வலி.வடக்கு,செப.4

ஆலயத்திற்கு வரும் அடியார்கள் வேண்டாதவற்றை வேண்டிச் செல்லாது வேண்டியவற்றை வேண்டிச் செல்லவேண்டும். விரத நாள்களில் மட்டும் இறைவனை நினைக்கின்றோம். இல்லை என்றால் மறந்துவிடுகின்றோம் இத்தகைய நிலைமை எம்மிடம் காணப்படக்கூடாது.

மேற்கண்டவாறு நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள் குறிப்பிட்டார்.

"எழுந்திரு! விழித்துக்கொள்" என்னும் தலைப்பில் ஸ்ரீராமகிருஷ்ணமிசன் வெளியீட்டு புத்தகக் கண்காட்சியும் விற்பனையும் நல்லூர் ஆலய மகோற்சவத்தையொட்டி யாழ்மாநகராட்சி மன்ற இந்து விடுதியில் அ.தியாகலிங்கம் தலைமையில் இடம்பெற்ற நிகழ்வில் திறந்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய நல்லை ஆதீன முதல்வர்:-

திருவருள் என்பது எதிர்பாராமல் கிடைப்பதாகும் இதைத்தான் இறைவனுடைய செயல் என்று கூறுகின்றோம். பொருத்தமானவற்றிற்கு பொருத்தமான நேரத்தில் பொருத்தமானவர் கலந்து கொள்வது வரவேற்கத்தக்கதாகும். இநதக் கண்காட்சியைத் திறந்துவைப்பதற்கு கொழும்பில் இருந்து இராமகிருஷ்ணமிசன் தலைவர் வந்துள்ளமை வரவேற்கத்தக்கதாகும்.

இராமகிருஷ்ணருடைய பெயரில் இன்று பல நல்ல காரியங்கள் இம்மண்ணில் இடம் பெற்றுக்கொண்டிருக்கின்றன. இத்தகைய செயல்கள் மக்கள் ஆன்மீகத்திற்குப் பக்கபலமாக அமைய முடியும் என்று கூறினார்.

(ப-86)

# மக்களின் இரசனை உயரும்போது 'மசாலா' படங்கள் மறைந்துவிடும்

## பொருளியல் பேராசிரியர் கருத்து

யாழ்ப்பாணம்,செப்.4

சினிமாவை நாம் எமது வல்லமைக்காகப் பயன்படுத்தவேண்டும். அதன்மூலம் நல்ல பல சமூக, அரசியல், பொருளாதார மாற்றங்களைக் காணமுடியும். சக்திவாய்ந்த ஊடகமான சினிமா, சாதாரண மக்களை மிக இலகுவாகச் சென்றடைந்து விடுகின்றது. எனவே, அது அவர்களின் வாழ்வில் கணிசமான தாக்கத்தைச் செலுத்தி வருகின்றது. எனவே, சினிமாவை வெற்றிகரமாகக் கையாள்வதன் மூலமாகச் சமூகப் பொறுப்புணர்வுள்ள மனிதர்களை உருவாக்க முடியும்.

- இவ்வாறு யாழ். பல்கலைக்கழகப் பொருளியல்துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி. சிவநாதன் கூறினார்.

சலன சித்திரம் அமைப்பின் திரைப் படத் தொழில்நுட்பச் சான்றிதழ் கையளிப்பு விழா, யாழ். பல்கலைக்கழக அதிதி விரிவுரையாளர் சட்டத்தரணி பொன்.பூலோகசிங்கம் தலைமையில் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ். பல்கலைக்கழகப் பொருளியல்துறைத் தலைவர் பேராசிரியர் வி.பி.சிவநாதன் கலந்துகொண்டார்.

அவர் மேலும் கூறியதாவது:-

சினிமா என்பது ஒரு மொழி. அதேவேளை அது மொழி சார்ந்த கலையாகவும் இருக்கின்றது. இந்த ஊடகத்தை எமது பிரச்சினைகளை வெளிக்கொணரும் ஒரு கருவியாகப் பயன்படுத்தவேண்டும். தமிழ்த்தேசியத்தைக் கட்டியெழுப்பும் முயற்சிக்கு இலங்கைத் தமிழ்ச் சினிமா களம் அமைத்துக்கொடுக்க வேண்டும். தமிழ் மக்களின் அகதிவாழ்வு, அவலங்கள், உயிரிழப்புகள், தியாகம் என்பவை ஒளியால் எழுதப்படவேண்டும். தமிழ் சினிமாவில் விருது பெறக்கூடிய சினிமா ஈழத்திலிருந்துதான் உருவாகவேண்டும். அது பல வெற்றிகளைப் படைக்க வேண்டும். சினிமா வருமானமீட்டக் கூடிய பாரிய தொழிற்துறையாகவும் விளங்குவதால் பலருக்கு வேலைவாய்ப்பையும் வழங்கும்.

சமூகச் சீரழிவுகளுக்கு எடுத்த எடுப்பிலேயே சினிமாவைக் குறைகூறும் போக்கு தவிர்க்கப் படவேண்டும். கலாபூர்வமாக எடுக்கப்படும் படங்கள் தோல்வியைத் தழுவிக்கொண்டிருக்கின்றன. மக்களின் இரசனை உயரும் போது வர்த்தக ரீதியான மசாலாப் படங்கள் தாமாகவே நின்றுவிடும் - என்றார்.

இந்நிகழ்வில் தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் பணிப்பாளரும் சலனசித்திரத்தின் ஸ்தாபகருமான க.தேவதாசனும் உரையாற்றினார். 'வெண்சங்கு' படத்தில் நடித்த கலைஞர் ச.புவனேஸ்வரன் கௌரவிக்கப்பட்டார். அறிமுகவுரையை எம்.ஷாந்தன் சத்திய கீர்த்தியும், வரவேற்புரையை ச.நிமலனும் நன்றியுரையை வி.எஸ்.சிவனேசனும் நிகழ்த்தினர். (ப)




# நிரந்தர அமைதியேற்பட்டதும் யாழ்ப்பாணம் அனைத்துத் துறைகளிலும் முழுவளர்ச்சி பெறும்

## லயன் ஆளுநர் நம்பிக்கை

தென்மராட்சி,செப்.4

யுத்த நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதன் பின்னர் கடந்த இரண்டு வருடங்களில் யாழ். பிரதேசம் ஓரளவு வளர்ச்சி கண்டுள்ளது. நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டதும் யாழ்ப்பாணம் பொருளாதார வளர்ச்சி, வர்த்தக வளர்ச்சி உட்பட அனைத்துத் துறைகளிலும் பெருவளர்ச்சி காணும் என்பதில் ஐயமில்லை.

- இவ்வாறு சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினரால், ஏற்பாடுசெய்யப்பட்ட வரவேற்பு விழாவில் கலந்துகொண்டு பேசிய சர்வதேச லயன்ஸ் கழக 306பி மாவட்ட ஆளுநர் லயன் எஸ்.சிவானந்தம் கூறினார்.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத் தலைவர் லயன் செ.கா. நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஆளுநர் மேலும் உரையாற்றுகையில். கடந்த மூன்று வருடங்களுக்கு முன்னர் இங்கு விஜயஞ்செய்தபோது எம்மைப் பயமுறுத்திய நிலையில் காணப்பட்ட சாவகச்சேரி நகர்ப் பகுதி இன்று புதுப் பொலிவுடன் காணப்படுவது எமக்கு மகிழ்ச்சியைத் தருகிறது. இந்த வளர்ச்சிக்கு இப்பகுதி மக்களின் தன்னம்பிக்கையும் ஒற்றுமையும் காரணமாக அமைகிறது.

இரண்டு தசாப்த காலமாக பல இன்னல்களை தமிழ் மக்கள் சந்தித்த போதிலும் தங்களது தன்னம்பிக்கையையும் ஒற்றுமையையும் கைவிடாததால் துரிதமான வளர்ச்சியினைக் காணமுடிகிறது.

எமது கழகக் குறிக்கோளான ஒற்றுமை முழுமையாக இங்கு காணப்படுகிறது. இனங்களிடையிலான ஒற்றுமை, சேவைகளிடையிலான ஒற்றுமை, கழகங்களிடையிலான ஒற்றுமை, அங்கத்தவர்களிடையிலான ஒற்றுமை எமது நாட்டில் ஏற்படும்போது பெரும் வளர்ச்சியைக் காணமுடியும்.

யாழ்.குடாநாட்டில் உள்ள லயன்ஸ் கழகங்கள் பல்வேறு கஷ்டங்கள், சிரமங்கள் ஆகியவற்றின் மத்தியிலும் பாதிக்கப்பட்ட மக்களுக்குத் தேவையான சேவைகளை வழங்கியுள்ளதை எவரும் மறக்கமுடியாது.

இடம்பெயர்வுகள் ஏற்பட்ட வேளைகளில் கூட கழகங்கள் அந்தந்த இடங்களில் தமது சேவைகளை மக்களுக்கு வழங்கியுள்ளன.

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினால் மட்டுவில் பகுதி யுவதியின் சத்திரசிகிச்சைக் கென சேகரிக்கப்பட்ட நிதியினை அந்த யுவதியிடமும் வறுமைக் கோட்டின் கீழ் உள்ள மாணவனுக்கு நலன்விரும்பியொருவரால் வழங்கப்பட்டுள்ள மாதாந்த உதவிப்பணத்தினை மாணவனின் தாயாரிடமும் ஆளுநர் கையளித்தார்.(ப-117)

# பண்பாட்டின் பெட்டகங்களாக பெண்கள் திகழ்கிறார்கள்

## நாட்டிய அரங்கேற்றத்தில் மனோன்மணி சண்முகதாஸ்

கோண்டாவில்,செப்.4

பெண்கள் பண்பாட்டின் பெட்டகங்கள். ஒப்பனைக் கலையும் ஆடைஅணிகலன்களும் அதற்கான பாடல் இசைப்பும் தாளலயமும் அவர்களிடத்தே உள்ள ஒரு கலையாகும். அந்த கலையை எந்த நிலையிலும் மறவாமல் இந்த மேடையில் ஆடிய துஸ்யந்தி ஜெயானந்தன் பண்பாட்டின் பெட்டகங்களாக பெண்கள் திகழ்கின்றார்கள் என்பதை உறுதிப்படுத்தியிருக்கின்றார்.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற ஸ்ரீமதி யசோதரா விவேகானந்தனின் மாணவி துஸ்யந்தி ஜெயானந்தனின் அரங்கேற்ற நிகழ்வில் சிறப்பு அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றுகையில் கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில் பல ஆண்டுகளாக நாட்டிய அரங்கேற்ற நிகழ்வுகளை காணமாட்டோமா என்ற ஆதங்கம் எல்லோருக்கும் இருந்தது. அண்மைக்காலமாக பல நாட்டிய நிகழ்ச்சி வீரசிங்கம் மண்டபத்திலே நடைபெறுவது மகிழ்வுக்குரியது.

பெண்களைப்பொறுத்தவரையில் திருமணமான பின்பு நாட்டியக் கலையை முன்னெடுத்துச் செல்வதும் அதனை பயிற்றுவிப்பதும் மரபு ரீதியாக மறுக்கப்பட்ட ஒரு காலம் இருந்தது. ஆனால், எங்களது ஈழத்துத் தமிழ் மண் அந்தப் பணியை இவர்களுடைய கையில் கொடுத்திருக்கிறது. அதன் பயனாக பெண்கள் திருமணமான பின்பு பல்கலைக்கழக பயிற்றலிலும் பாடசாலைகளிலும் பொது நிலையிலும் இந்த நாட்டியக் கலையை அடுத்த சந்ததியினருக்கு கையளிப்புச் செய்துகொண்டிருக்கிறார்கள்.



அந்த வகையில், பாடசாலை தொடக்கம் பல்கலைக்கழம் வரை இன்று நடனம் கற்பிக்கும் ஆசிரியர்கள் அத்தனை பேரும் இந்தக் கலையை முன்னேடுத்துச் செல்கிறார்கள்- என்றார். பிரதம விருந்தினராகக் கலந்துகொண்ட யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் அ.சண்முகதாஸ் உரையாற்றுகையில்-

கலைஞர்கள் ஓர் அபூர்வ பிறவிகள். இத்தகைய பெரிய பணியை இசை, நாட்டிய, நாடக கலைஞர்கள் செய்கின்றார்கள். இது எல்லோராலும் முடியாத காரியம். கலைஞர்களால் மட்டுமே முடியும். அதனால்தான் கலைஞர்களை அபூர்வ பிறவிகள் என்று கூறுகிறார்கள்.

எல்லோரும் கலைஞர்கள் ஆகிவிடமுடியாது. அந்த வகையில் துஸ்யநதி ஜெயானந்தன் தொடர்ந்தும் இத்தகைய முயற்சியில் ஈடுபட்டு பல மாணவர்களை உருவாக்க வேண்டும் என்றார். மதிப்பீட்டுரையை நாட்டிய வேளாவேல் ஆனந் தன் நிகழ்த்தினார். (ப-49)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




யாழ்.சுண்டுக்குளி புனித யுவானியார் ஆலயத்தில் புதிதாக அமைக்கப்பட்ட முகப்பு மண்டபம் அண்மையில் திறந்துவைக்கப்பட்டது. மண்டபத்தை யாழ்.ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை நாடாவை வெட்டித் திறந்து வைப்பதையும் அருகில் மண்டப அமைப்புக்கு உதவிய திரு.திருமதி யேசுதாசன் தம்பதிகள் ஆயரின் செயலாளர் அருட்திரு எம்.றொசான், ஆலய நிர்வாகச் செயலாளர் சூ.சிறில் பங்குத்தந்தை, அருட்திரு தொ.யேசுதாசன் ஆகியோர் நிற்பதையும் படத்தில் காணலாம். *(படம்: கொழும்புத்துறை செய்தியாளர்)*

# நினைவஞ்சலியும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும்

மலர்வு 12 - 11 - 1923

உதிர்வு 04 - 08 - 2004



## அமரர்

# சண்முகம் விஜயரட்ணம்

(ஓய்வுபெற்ற கமநலசேவைத் திணைக்களத்தின் பெரும்பாக உத்தியோகத்தர் - யாழ். சத்தியசேவா நிலைய முன்னாள் தலைவர் - வடபிராந்திய சத்திய சாயி சேவா நிலைய இணைப்புக்குழுவின் முன்னாள் தலைவர், இவற்றிற்கான தற்போதைய ஆலோசகர் - யாழ்ப்பாணம், கச்சேரி - நல்லூர் வீதி, பாணன்குளம் நாச்சியம்மன் கோவில் பரிபாலனசபைத் தலைவர் - பரமேஸ்வராக் கல்லூரி இயக்குநர்சபையின் முன்னாள் நிர்வாகக் காரியதரிசியும்)

எமது குடும்பத்தின் குலவிளக்காகத் திகழ்ந்து எல்லோர் வாழ்விலும் ஒளிவிளக்கை ஏற்றிவைத்து அனைவரது வாழ்வையும் பிரகாசிக்கச் செய்து சமூகத்தில் நன்மதிப்பைப்பெற்ற எங்கள் குடும்பத் தலைவனே - அன்புத் தெய்வமே! உங்கள் ஆன்மா சாந்தியடைய எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

எங்கள் குடும்பத் தலைவனின் மறைவுச் செய்திகேட்டு ஓடோடி வந்து எமது துயரில் பங்குகொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள் சாயிபக்தர்கள் மற்றும் தொலைபேசி, கடிதம், தந்தி மூலம் அனுதாபச் செய்திகள் அனுப்பியோருக்கும் இன்னும் அமரர் திடீரென உடற்சுகவீனம் உறற வேளை அவருக்கு வேண்டிய சகல வைத்திய உதவிகளை வழங்கிய வைத்திய கலாநிதி வி.தியாகராஜா, நடுநசியில் அமரருக்கு அவசர சிகிச்சை வழங்கி அமரரை யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதித்து வேண்டிய வைத்திய சிகிச்சையளித்த சிரேஷ்ட வைத்திய நிபுணர் டாக்டர் க.சிவநேசன், யாழ். போதனா வைத்தியசாலை சக வைத்தியர்கள், தாதிகள், ஊழியர்கள், மலர் வளையம் சாத்தி நினைவஞ்சலி செலுத்தியோர், இன்னும் எமக்குத் தேவையான சகல உதவிகளையும் பல வழிகளிலும் புரிந்த அனைவருக்கும் எமது குடும்பத்தின் அன்புகலந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம்.

இன்று (04.09.2004) சனிக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்ப்பாணம், திருநெல்வேலி, சேர். பொன் இராமநாதன் வீதியில் (யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் முன்பாக) அமைந்துள்ள யாழ். பகவான் ஸ்ரீ சத்திய சாயி சேவா நிலைய மண்டபத்தில் அமரர் நினைவாக நடைபெறவுள்ள ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் பஜனையிலும் அஞ்சலி நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து இடம்பெறும் மதிய போசன நிகழ்விலும் உற்றார், உறவினர், நண்பர்கள், அயலவர்கள், சாய பக்தர்கள் அனைவரையும் கலந்துகொள்ளுமாறு பணிவுடன் அழைக்கிறோம்.

*விஜயபுரம்,*
*இல. 82, நல்லூர் குறுக்கு வீதி,*
*நல்லூர்.*
*தொலைபேசி 222 6529* (சி-37439) (17-32-12-33-29)

குடும்பத்தினர்.

## சாவகச்சேரியில் மருத்துவ முகாம்

சாவகச்சேரி லயன்ஸ் கழகத்தினர் பிரதேச மக்களுக்கான இலவச மருத்துவ பரிசோதனை முகாமினை செப்ரெம்பர் 19ஆம் திகதி சாவகச்சேரி டிறிபேர்க் கல்லூரியில் நடத்தவுள்ளனர்

இந்தப் பரிசோதனை முகாமில் கண், இரத்த அமுக்கம், நீரிழிவு, பெண் நோயியல், வாய்ப்புற்று, தொழுநோய் ஆகிய பரிசோதனைகள் மேற்கொள்ளப் படுமென கழக் செயலாளர் லயன செ.சுப்பிரமணியம் அறிவித்துள்ளார்.

இந்தப் பரிசோதனை முகாம் தென்மராட்சி கோட்ட எழுச்சிப் பேரவையின் அனுசரணையுடன் நடத்துவதாகவும் தெரிவிக்கப்பட்டது. (எ-117)

## இருமண்டபங்கள் இன்று திறக்கப்படுகின்றன

பருத்தித்துறை பிரதேச சபையினால் மணற்காட்டில் அமைக்கப் பட்ட மீனவர் இளைபபாறும் மண்டபம் இன்று சனிக்கிழமை காலை 11மணிக்கு யாழ் அரச அதிபர் செ.பத்மநாதனால் திறந்துவைக் கப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபை செயலாளர் சி.பசுபதி தலைமையில் நடைபெறும் இத் திறபபு விழாவில் பிரதம வருந்தினராக யாழ்.அரச அதிபரும் சிறப்பு விருந்தினர்களாக யாழ செயலக திட்டப் பணிபபாளர் கா.பாலகிருஷணன், உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கா. இராசையா, கடற்புலிகளின் வடமராட்சி கிழக்கு அரசியல்துறைப் பொறுபபாளர் ஆர்.தீபன் ஆகியோர் கலந்துகொள்வார்கள். இதேவேளை குடததனையில் அமைக கப்பட்ட பொது மண்டபம் ஒன்றையும் அரச அதிபர் இன்று திறந்து வைபபதுடன் அங்கு தையல் பயிற்சி நெறியையும் ஆரம்பித்து வைப்பார். (8-36-78)

**தேவை**

பொறியியல் நிறுவனத்தில் பண்டகசாலை பொறுப்பாளராக வேலைசெய்த அனுபவமுள்ளவர் உடனடியாகத் தேவை.

தொடர்பு:
புறோமோட்டேர்ஸ் என்ஜினியரிங் கம்பனி,
844, பருத்தித்துறை வீதி,
நல்லூர். தொ.பே.021 222 5780

(சி-37430)

**LONDON LANGUAGE SCHOOL**
The School with golden touch

**Communication English**
புதிய பிரிவுகள் ஆரம்பம்

04.09.04 11.00 a.m.
07.09.04 5.00 p.m.

பதிவுகளை மேற்கொள்வோருக்கு இலவசம்

Diploma in MS.Office
Diploma in Basic Computer Principles.

(Presentation skills, Interview skills ஒரு நாள் பயிற்சிப் பட்டறை) சான்றிதழ் கற்கைநெறி பதிவுகள் நடைபெறுகின்றன.
முன்கூட்டியே பதிவுகளை மேற்கொள்ளவும்.
*தொடர்புகளுக்கு:* 0777 222300, 077-6176383, 0777-238605.
774,Hospital Road,
Jaffna.
(35820)

# மரண அறிவித்தல்

## திருமதி சுவானி திரேசா

நாரந்தனையைப் பிறப்பிடமாகவும், யாழ்ப்பாணத்தை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி சுவானி திரேசா 01.09.2004 புதன்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சந்தியோகு அந்தோனியாளின் அன்பு மகளும் அந்தோனி சுவானியின் அன்பு மனைவியும், சூசைப்பிள்ளை, காலஞ்சென்ற மனவல், ஆசீர்வாதம், பிலோமினா ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஞானசீலன் (சுவிஸ்), தேவதாஸ் (சவூதி), எமல்டா, சகாயராணி, பிறிற்ரோ (சவூதி) ஆகியோரின் அன்புத் தாயாரும் லீலிமலா, பெனடிக்ரா, அன்ரன் பாலராஜ் (யாழ்.பல்கலைக் கழகம்), கிறிஸ்ரியன், ராஜினி ஆகியோரின் அன்பு மாமியாரும் கிளமென்சியா, சில்வியா, ரெரன்ஸ், நொபின்சியா, நொசாந், நெவீன்ஸ்ராஜ், ஜனார்த்தனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.09.2004) சனிக்கிழமை 41/9, மத்தியூஸ் வீதியிலுள்ள இல்லத்திலிருந்து பிற்பகல் 4.00 மணியளவில் நல்லடக்கத்திற்காக யாழ்ப்பாணம் புனித கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலைக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

*41/9 மத்தியூஸ் வீதி,*
*யாழ்ப்பாணம்.* (36063)(40-17-15-32)

தகவல்:
மக்கள், மருமக்கள்.

Jayoda ஜயோதா ජයෝද

**உத்தியோகபூர்வ முடிவுகள்**

டிக்கட் தொடர் இல. 7356871 முதல் 7368977 வரை
சீட்டிழுப்பு இல. 64 திகதி 02-09-2004

வெற்றி எண்கள் **3 9 9 5 7 0** சுப்பர் எண் **23**

சுப்பர் ஜக்பொட் பரிசு 1,69,14,200/- வெல்லப்படவில்லை

| வெற்றி எண்கள் | வெற்றி பெற்றோர் | பரிசுத் தொகை | முழு பரிசுத் தொகை |
|---|---|---|---|
| 6 எண்களுடன் சுப்பர் எண் | - | 1,69,14,200/- | - |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 6 எண்கள் | 02 | 10,00,000/- | 20,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 10 | 50,000/- | 5,00,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 109 | 5,000/- | 5,45,000/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,069 | 500/- | 5,34,500/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,691 | 50/- | 5,34,550/- |
| இடது பக்கத்தில் இருந்து முதல் 1 எண் | 1,05,944 | 10/- | 10,59,440/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 5 எண்கள் | 12 | 5,000/- | 60,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 4 எண்கள் | 106 | 1,000/- | 1,06,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 3 எண்கள் | 1,070 | 100/- | 1,07,000/- |
| வலது பக்கத்தில் இருந்து முதல் 2 எண்கள் | 10,590 | 20/- | 2,11,800/- |
| மொத்தம் | 1,29,603 | | 56,58,290/- |

வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூபா. 56,58,290/-

இந்த திங்கட்கிழமைக்கான சுப்பர் ஜக்பொட்
ரூ. **1,72,11,450/-**

தொடர் இல. 6396985 க்கு மேற்பட்ட மஞ்சள் நிற டிக்கட்டுக்கள் 2004 செப்டம்பர் 06 ஆம் திகதி திங்கட்கிழமை செல்லுபடியாகும். வெற்றி பெறும் டிக்கட்டுக்கள் 6 மாதங்கள் செல்லுபடியாகும்.

வளமான வாழ்விற்கு அபிவிருத்தி லொத்தர்

அபிவிருத்தி லொத்தர் சபை
இல. 33, செயின்ற் மைக்கேல் வீதி, கொள்ளுப்பிட்டி, கொழும்பு 3.

ஜயோதா சீட்டிழுப்பில் பணப்பரிசு வெற்றி பெறாத டிக்கட்டுக்களில் வீட்டுப் பாவனைப் பொருட்களை வெற்றி பெறும் 5 டிக்கட்டுக்களின் தொடர் இலக்கங்கள்

7358319-5-66
7362717-5-98
7367844-7-01
7360332-3-97
7363543-7-77

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமாதான உதைபந்தாட்டத்தின் இறுதியாட்டம்

யாழ்பாணம்,செப்.4

கொழும்பு சென். பீற்றஸ் கல்லூரியினால் 2ஆவது வருடமாக நடத்தப்படும் 7 கல்லூரிகள் பங்கேற்கும் சமாதான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதியாட்டம் இன்று சனிக்கிழமை மாலை 5.00 மணிக்கு வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி 'பிக்னெல்' மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த இறுதியாட்டத்தில் மன்னார் புனித சேவியர் கல்லூரி அணியை எதிர்த்து யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி அணி மோதவுள்ளது.

இறுதியாட்டப் போட்டிக்கு பிரதம விருந்தினராக வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியின் முன்னாள் அதிபர் ஜி.இராஜநாயகம் கலந்து கொள்வார்.

கடந்த ஆண்டு நடத்தப்பட்ட இந்தப் போட்டியின் இறுதியாட்டத்தில் மன்னார் புனித சேவியர் கல்லூரி அணி வெற்றியீட்டியது. (ஐ-185)

## முல்லை மீனவர் மீது கடற்படை தாக்குதல்

கொழும்பு,செப்.4

முல்லைத்தீவுக் கடற்பகுதியில் கடந்த புதனன்று கடற்படையினரால் 4 மீனவர்கள் தாக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்களின் படகும் கடற்படையால் மூழ்கடிக்கப்பட்டுள்ளது என்றும் கூறப்படுகின்றது.

முல்லைத்தீவுக் கரையிலிருந்து 15 கடல் மைல் தொலைவில் இந்தச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

படகை நெருங்கிய கடற்படையினர் மீனவர்களைத் தாக்கியபின் கடலில் குதிக்குமாறு பணித்துவிட்டு படகை மூழ்கடித்தனர் என்று கூறப்பட்டது. கடலில் பாய்ந்த மீனவர்கள் நீநதிக் கரை சேர்ந்தனர். (ஐ-க)

## முன்பள்ளி விளையாட்டுப் போட்டி

புங்குடுதீவு பிரதேச முன்பள்ளிச் சிறார்களின் விளையாட்டு விழா இன்று சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு உதவிக்கல்விப் பணிப்பாளர் த.தவராசா தலைமையில் புங்குடுதீவு மகாவித்தியாலய விளையாட்டு மைதானத்தில் நடைபெறுகின்றது.

இதில் பிரதம விருந்தினராக வேலணை உதவி அரச அதிபர் மு.நந்தகோபாலன் கலந்து கொள்வார். (8)

## நல்லை ஆதீன முதல்வரின் நற்சரிதம் நூல் வெளியீடு

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீனத்தின் 38 ஆவது பீடாரோஹண விழா நாளை ஞாயிற்றுக் கிழமை நடைபெறவுள்ளது. இந்த விழாவில் ஆதீன ஸ்தாபகர் முதலாவது குருமஹாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகளின் நற்சரிதம் நூல் வெளியீடும் இடம்பெறவுள்ளது.

சைவப்புலவர் இராசையா ஸ்ரீதரனின் உருவாக்கத்தில் வெளிவரும் இந்நூலில் பிரதியை இரண்டாவது குருமஹா சந்நிதானம் வெளியிட்டு வைப்பார். (ஐ)

கிறிஸ்ரல் சென்ரர் நெல்லியடி
A/L Day Class
பொருளியல்
S.வரதராஜன்.
ஆரம்பம்: 06.09.2004 ந.ப. 12 மணி
2006 A/L பி.ப. 3.30–6.00 வரை
(சி-37425)(11-18)

யாழ் மண்ணில் முதன்முறையாக !
Multimedia - 2004 Free Seminar
தமிழ் சீடி வழிப்பயிற்சி




நவீனகாலத்திற்கேற்ப கணனிக் கல்வியை ஆங்கில அறிவு இல்லாதவர்களுக்கும் மிக இலகுவாக கற்றுப்பயன்பெறும் வகையில் 'தமிழ் சீடி வழிப்பயிற்சி' எனும் இறுவட்டு திரைவடிவ கணனிக்கல்வி (Interactive Video Training) வெள்ளவத்தை London Info Tech நிறுவனத்தினால் வெளியிடப்பட்டு நாடு முழுவதும் விற்பனை செய்யப்பட்டுவருகிறது. இவ் சீடி வழிப்பயிற்சி மேலே காட்டப்பட்டுள்ள அனைத்து மென்பொருட்களுக்கும் உண்டு. இவை அனைத்தும் கணனித்துறையில் மிக முக்கியமானவையாகும். இதன் மூலம் சிறியோர் முதல் பெரியோர் வரை இலகுவாகவும், சுயமாகவும் நவீன கணனி அறிவைப்பெறமுடியும். இவ் சீடிகளை யாழ் மண்ணில் முதன் முறையாக London Info Tech நிறுவனத்துடன் இணைந்து College of Computer நிறுவனத்தினராகிய நாங்கள் விற்பனை செய்யவுள்ளோம்.

இவ் தமிழ் சீடி வழிப்பயிற்சி தொடர்பான இலவசக்கருத்தரங்கு எதிர்வரும் 6, 8 ஆம் திகதிகளில் பாடசாலைகளிலும், 11–12 ஆம் திகதிகளில் இணுவில் College of Computer இலும் நடைபெறவுள்ளது. இதில் பெறுமதி மிக்க சான்றிதழ்கள் வழங்கப்படவுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணத்தில் Video துறையில் உள்ள அனைவருக்கும் இக்கருத்தரங்கு மிகவும் பயனுள்ளதாக அமையும். இக்கருத்தரங்கு பல பிரிவுகளாக நடைபெறவுள்ளது. இதில் நீங்களும் இணைய உங்கள் பதிவுகளை உறுதிப்படுத்தவும்.




College of Computer
கணனியியல் கல்லூரி
K.K.S Road, Inuvil.
No:88 Palaly Road, Thirunelvely.
021 222 7643
E.Mail: coc inuvil@yahoo.com

மண்டைதீவு திருவெண்காடு சித்திவிநாயகர் ஆலய
நவோத்தர சகஸ்ர சங்காபிஷேகம்-1008

06.09.2004 திங்கட்கிழமை முற்பகல் 11 மணிக்கு சங்காபிஷேகம் நடைபெறும்.
நண்பகல் மாகேஸ்வர பூசை (அன்னதானம்) நடைபெறும்.
மாலை 6.30 மணிக்கு சாயரட்சைப் பூசையைத் தொடர்ந்து இரவுத் திருவிழா நடைபெறும்.
அடியார்கள் வருக! திருவள் பெறுக!!
மண்டைதீவு, (சி-37436)(11-18) - தேவஸ்தானத்தினர்.

REPAIRS




UPS
Printers
Monitors
Scanners
Power supply
MICRO PC SYSTEMS
யாழ் நகர் 175/3, கஸ்தூரியார் வீதி, தொலை: 021 222 5893
நெல்லியடி பிரதான வீதி (பொலிஸ் நிலையமருகில்) 0773039536

பாதுகாப்பு ஊழியர்கள் தேவை

எமது ஸ்தாபனத்திற்கு பாதுகாப்பு ஊழியர்கள் தேவைப்படுகின்றனர்.

தகைமைகள்:
★ G.C.E. (O/L) வரை படித்தவர்கள்.
★ வயது 25இற்கு மேல்.
★ திடகாத்திரமான உடல் நிலை உடையவர்கள்.
★ முன் அனுபவம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

விரும்புவோர் 06.09.2004 திங்கட்கிழமை காலை 10 மணிக்கு கீழ்க்காணும் முகவரிக்கு ஆவணங்களுடன் நேரில் வரவும்.

மனிதவள முகாமையாளர்,
லக்ஷ்மி குறூப்,
23/1, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
(பிறவுண் வீதியில் இருக்கும் மின்சார சபைக்காரியாலயத்திற்கும் கலட்டிச் சந்திக்குமிடையில் முகவரி அமைந்துள்ளது). (சி-37434)(11-18)

வீடு தேவை

மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு காரியாலய உபயோகத்திற்காக உடனடியாக யாழ்.போதனா வைத்தியசாலை வீதி அல்லது அதன் சுற்றாடலில் ஒரு வீடு வாடகைக்கு அல்லது குத்தகைக்கு தேவையாக உள்ளது. இது சம்பந்தமாகத் தொடர்புகொள்ள வேண்டிய முகவரி : இணைப்பாளர், மாவட்ட சிறுவர் பாதுகாப்புக்குழு, அறை எண். 30 யாழ்.போதனா வைத்தியசாலை.
(சி-37431)(11-18) தொ.பே.இல: 2225657

MASTER NUMEROLOGY
அதிர்ஷ்டம் அழைக்கிறது

சகல தரப்பினரும் நேரில் சந்திக்கவும். பல தரப்பட்ட பிரச்சினைகளையும் ஒளிவுமறைவின்றி மனந்திறந்து தெரிவியுங்கள். இரகசியங்கள் பாதுகாக்கப்படும். அதிர்ஷ்ட சக்தியைப் பயன்படுத்திப் பிரச்சினைகளில் இருந்து விடுவித்து மகிழ்ச்சியுடன் வாழ வழிவகைகள் அமைத்துத்தருவோம். சலுகைக் கட்டணம் சில தினங்களுக்கு மட்டுமே!.
T.P. மூலம் தொடர்புகொண்டு முன்பதிவுசெய்து கொள்ளலாம்.T.P.021 – 222 2810
மிலேனியம் உல்லாசப் பயணிகள் விடுதி அன்புடன் வரவேற்கிறது!

76/60, இராமநாதன் வீதி, கலட்டி, யாழ்ப்பாணம். புதன், வியா., வெள்ளி, சனி 10 a.m. - 4 p.m.
"புவனஜோதி" நடராசா வீதி, கிழக்கு வீதி, வல்வெட்டித்துறை. ஞாயி., திங்க., செவ். 7 a.m. - 2 p.m.

MASTE NUMEROLOGIST,
SREE MASTER,
CSR RAJESHWRAN.
(36049)(11-18)

## துயர் பகிர்கின்றோம்

எமது சக மாணவியான
**செல்வி அருளம்பலம் தேவகி**



அவர்கள் கடந்த 02.09.2004 அன்று அகால மரணமானதையிட்டு அவரின் பிரிவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்வதுடன் அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

2004 ஆம் ஆண்டு நண்பர்கள்.
பட்டப்படிப்புக்கள் கல்லூரி. (36074)(11-18)

## மரண அறிவித்தல்

### செல்வி அருளம்பலம் தேவகி



பாலாவி தெற்கு, கொடிகாமத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வி அருளம்பலம் தேவகி அவர்கள் நேற்றுமுன்தினம் (02.09.2004) வியாழக்கிழமை அகாலமரணமானார்.

அன்னார் காலஞ்சென்ற அருளம்பலம் - அருந்தவநாயகி ஆகியோரின் அன்பு மகளும் பேரின்பநாயகி, சுவேதினி, அருட்சோதி, தேனுசா, சுவேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரியுமாவார்.

அன்னாரின் பூதவுடல் இன்று (04.09.2004) சனிக்கிழமை முற்பகல் 10 மணியளவில் கச்சாய் இந்து மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

பாலாவி தெற்கு, கொடிகாமம். (36073)(43-11-18)
தகவல்: குடும்பத்தினர்.

நிறைஞ்சனாஸ் சங்கானை



சேரன், சிநேகா நடித்த ஆட்டோகிராவ்
தினசரி 11.00, 2.45, 6.00 (பு.நே)
(சீலன்) வெள்ளி,சனி,ஞாயிறு.
STRIKE FORCE (இரவு 8.45பு.நே)
(C/36366)(13)

ராஜா யாழ்ப்பாணம்
இந்தியாவிலும் இலங்கையிலும் ஒரேதின வெளியீடு
விஜய், சோனியா அகர்வால், வடிவேல் நடிக்க மதுர



பு.நே.: 10.30, 2.30, 6.30, 9.30
ரிக்கெற் முற்பதிவு செய்துகொள்ளலாம்.

நாகம்ஸ் சுன்னாகம்



கமலஹாசன், சிநேகா, பிரபு, பிரகாஸ்ராஜ் நடிப்பில்
வசூல்ராஜா MBBS
காட்சிநேரம்: 11.00,3.00, 7.00 (பு.நே.)
(சி-36415)

## மரண அறிவித்தல்கள்

### கணபதிப்பிள்ளை மனோகரன்

(செரண்டிப் உல்லாசப் பயணிகள் ஹோட்டல்ஸ் - கொழும்பு, நிதி ஆலோசகர்)

கட்டுவனைப் பிறப்பிடமாகவும் உரும்பிராயை வசிப்பிடமாகவும் தற்சமயம் கொழும்பில் வசித்தவருமான கணபதிப்பிள்ளை மனோகரன் 01.09.2004 புதன்கிழமை நண்பகல் சிவபதமடைந்தார்.

அன்னார் கட்டுவன் அமரர்கள் சி.கணபதிப்பிள்ளை - அன்னபூரணம் தம்பதிகளின் அன்பு மகனும், உரும்பிராய் தெற்கு அமரர்கள் சொக்கலிங்கம் - தங்கரத்தினம் தம்பதியினரின் அன்பு மருமகனும், நளினியின் அன்புக் கணவரும், ம.கஜேந்திரன் (லண்டன்), ம.சுஜேந்திரன் (லண்டன்) ஆகியோரின் பாசமிகு தந்தையும் திருமதி தருமபூபதி, இராசலிங்கம், செல்வி செல்வமதி, அமரர்கள் க.மகேஸ்வரன், க.மகேந்திரன் ஆகியோரின் அன்புச் சகோதரரும் இராசலிங்கத்தின் மைத்துனரும் அமரர் சொ.பிரபாரகன் மற்றும் சொ. முரளீதரன் (லண்டன்), திருமதி மோ.மஞ்சுவாணி (லண்டன்) ஆகியோரின் பாசமிகு அத்தானும், சாரதா முரளீதரன் (லண்டன்), மோகனதாஸ் (லண்டன்) ஆகியோரின் சகலனும் உமேஸ் முரளீதரன் (லண்டன்), விஷ்னகா முரளீதரன் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமனும் ஜெனனஸ் மோகனதாஸின் (லண்டன்) பெரிய தந்தையும் இ.சங்கரன், திருமதி காந்திமதி சங்கரனின் அன்பு மாமனும், ரம்மியன், திவ்வியன் ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் பொரளை A.F. Raymands மலர்ச்சாலையில் உற்றார், உறவினர், நண்பர்களின் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு 05.09.2004 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணியளவில் கனத்தை மயானத்தில் தகனஞ்செய்யப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளவும்.

*வேம்பன் ஒழுங்கை, உரும்பிராய் தெற்கு, உரும்பிராய்.*
தகவல்: வ.விஜயரத்தினம் (36067)(11-18)

### கனகரத்தினம் ஆறுமுகநாதன்

(கணித ஆசிரியர்)

சரசாலை, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் சுண்டுக்குளியை வசிப்பிடமாகவும் கொண்ட ஆறுமுகநாதன் (கணித ஆசிரியர்) 02.09.2004 வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கனகரத்தினம் - தங்கரத்தினத்தின் அன்பு மகனும் இந்துமதி, தெய்வீகநாதன், ஆனந்தி, தேவகி ஆகியோரின் சகோதரனும் கமலாம்பிகையின் அருமைக் கணவரும் காலஞ்சென்ற பிரதீபா மற்றும் மகறாஜினி, சிவறஞ்சினி, வதனவாணி, தேவலக்ஸ்மி, ஞானமுருகன் ஆகியோரின் அன்புத் தந்தையுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (04.09.2004) சனிக்கிழமை முற்பகல் 11 மணியளவில் சரசாலை இல்லத்தில் நடைபெற்றுப் பூதவுடல் தகனக்கிரியைக்காக வேம்பிராய் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

*சரசாலை, சாவகச்சேரி.* (36070)(11-18)
தகவல்: ஆ.வதனவாணி (மகள்).

### நமசிவாயம் வாமதேவன்

இல.56/1 (புதிய இல186), பலாலி வீதி, கந்தர்மடம், யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த நமசிவாயம் வாமதேவன் 02.09.2004 இல் காலமாகிவிட்டார்.

அன்னார் மங்கையர்க்கரசியின் அன்புக் கணவரும் திருமதி மனோரஞ்சனி, செல்வி செல்வறஞ்சனி, மனோகரன் (இலங்கை வங்கி, சுன்னாகம்) ஆகியோரது அன்புத் தந்தையும் ஜெயராஜசிங்கம், திருமதி விமலாதேவி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெயக்குமார், கிரிசாந்தன், தர்மினி, சாரங்கன் ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் தொல்புரம் மேற்கு, சுழிபுரத்தில் அன்று மாலை நடைபெற்றன.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும ஏற்றுக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

*தொல்புரம் மேற்கு, சுழிபுரம்.* (C/37442)(43-11-18)
தகவல்: வா.மனோகரன் (மகன்).

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்ச்செல்வன்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திக்க விரும்பினால் ஏற்பாடு செய்து தரலாம் என்று நீங்கள் அவர்களுக்கு அழைப்பு விடுத்தீர்கள். அதனால் பயன் ஏதும் ஏற்பட்டதா?

*பதில்:* ஜே.வி.பியிடமிருந்து ஏதும் எமக்கு வரவில்லை. அதேநேரம் மல்வத்த பீடாதிபதி விடுதலைப் புலிகளுடன் பேச விருப்பம் தெரிவித்திருந்தார்.

தமிழ்ச்செல்வனை இன்று சந்தித்த சமயம், அதை அவரிடம் தெரிவித்தேன். அப்படிப்பட்ட தூதுக்குழு வன்னிக்கு வருமாக இருந்தால் அக்குழுவுடன் தாம் பேசத் தயார் என்று அவர் கூறினார். இந்தச் சந்திப்பு தொடர்பாக திகதி ஏதும் நிர்ணயிக்கப்படவில்லை.

தமிழ்ச்செல்வனின் விருப்பம் மற்றும் அவர் தெரிவித்த் விடயங்கள் போன்றவற்றை மல்வத்த பீடாதிபதிகளிடம் தெரிவித்த பின்புதான் சந்திப்புக்கான தகுந்த திகதியை தீர்மானிக்கக் கூடியதாக இருக்கும்.

கே.: தமிழ்ச்செல்வனோடு என்ன விடயங்கள் குறித்துப் பேசினீர்கள்?

ப.: தற்போதைய அரசியல் நிலைமை குறித்துப் பேசினேன்.

தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ் மக்கள் மீது மீண்டும் ஒரு முறை யுத்தத்தைத் தேசியக்கட்சிகள் திணித்தால் அதனைச் சந்திப்பதற்கு தமிழ்மக்களும், விடுதலைப் புலிகளும் தயாராக இருக்கின்றார்கள் எனத் தமிழச்செல்வன் தெரிவித்தார்.

கே.: தமிழ்த் தேசியக் கூட்டமைப்புடன் நீங்கள் இணைந்து செயற்படுவது குறித்துச் செய்திகள் வெளியாகி இருந்தன அது பற்றி?

ப.: இந்தியாவில் உள்ள தேசியக்கட்சிகள் அதாவது ஆளும், எதிர்க்கட்சிகளின் தலைவர்களைச் சந்திப்பது குறித்து இன்று பேசினோம். தமிழ் மக்களின் நிலைமை தொடர்பாக அச்சந்திப்புக்களில் முக்கியத்துவம் கொடுப்பது எனத் தீர்மானித்தோம். இதைத் தமிழ்ச்செல்வன் ஏற்றுக் கொண்டார். இத்தகைய பயணத்துக்கான ஏற்பாட்டைச் செய்யவேண்டும் என்று அவரும் உடன்பட்டார். தமிழ்க்கூட்டமைப்புடன் இணைந்து நான் செல்வேன்.

கே.: இந்தியத் தலைவர்களை ஏன் சந்திக்கவேண்டும் என்று கருதுகிறீர்கள்?

ப.: இந்தியா பக்கத்து நாடு. இந்தியாவில் உள்ள தலைவர்கள் மத்தியில் தப்பான அபிப்பிராயம் இருக்கக்கூடாது. இங்கு நடக்கும் போராட்டம் பயங்கரவாதப் போராட்டம் என்ற எண்ணம் அத்தலைவர்களுக்கு இருக்கக்கூடாது. அப்படி இருந்தால் அதனைக் களையவேண்டும்.

இது ஏறத்தாள ஐம்பது வருட சரித்திரப் பின்னணியில் தோன்றிய போராட்டம் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள வேண்டும். இங்கு வாழும் 30 லட்சத்திற்கும் மேற்பட்ட சிறுபான்மைத்தமிழர்களின் அரசியல் போராட்டம் இது என்பதையும் அவர்கள் புரிந்துகொள்ளவேண்டும். ஆகவே, அவர்கள் மனதில் தெளிவை ஏறபடுத்துவதற்காக இந்தச்சந்திப்புகள் பயன்படும் என்று கருதுகின்றோம்.

கே.: இடைநிறுத்தப்பட்ட சமாதான பேச்சுக்கள் மீள ஆரம்பிப்பது குறித்து....?

ப.: பேச்சுத் தொடர்பாக விடுதலைப் புலிகளைப் பொறுத்தமட்டில் அவர்கள் தெளிவாக இருக்கிறார்கள். பேச்சுக்கு அவர்கள் தாயாராக இருக்கிறார்கள். ஆனால், ஆளும் மற்றும் எதிர்க்கட்சியைச் சேர்ந்தவர்களால்தான் பின்னடைவு ஏற்பட்டிருக்கின்றது. முன்னர் ஆளும் கட்சியில் இருந்தவர்களாலும் கூட இந்நிலை ஏற்பட்டுள்ளது. விடுதலைப் புலிகளால் அல்ல.

பேச்சுக்களை மீள ஆரம்பிக்கும்படி நாங்கள அரசு, எதிரணி ஆகிய இரு தரப்புக் கட்சிகளையும் வலியுறுத்துவோம். இடைக்கால நிர்வாக அமைப்பு விவகாரம் விடுதலைப் புலிகள் மட்டும் முன்வைத்த கோரிக்கை அல்ல. 10 வருடங்களுக்கு முன்பு சாதாரணமாக செளமியமூர்த்தி தொண்டமான் கூட "10 வருடத்திற்கு அந்தப் பிரதேசத்தை அவர்களிடம் கொடுத்துப்பாருங்கள். அவர்கள் அந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யட்டும். இடையில் பேச்சை நடத்தி முடியுங்கள்" என்று கூறியிருந்தார். (ஐ-3)

# அரசுக்கு முண்டு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதுவரை காலமும் சிரேஷ்ட அமைச்சர்கள் பலருடனும் நீங்கள் பேச்சு நடத்தி வந்தீர்கள் என்றும் பேரம் படியாததால் ஏற்பட்ட இழுபறிகள்தான் அரசுப் பக்கம் நீங்கள் போவதற்கு இவ்வளவு தாமதத்தை ஏற்படுத்தின என்றும் கூறப்பட்டதே?" எனக் கேட்கப்பட்டது.

"அமைச்சர்கள் எனது நண்பர்கள். அவர்களுடன் பேசுவதில் என்ன தவறு? நீங்கள் தவறாக அர்த்தம் புரிந்துகொண்டதால் நான் என்ன செய்வது" என்று திருப்பிக் கேள்வி எழுப்பினார் ஆறுமுகன்.

தொடர்ந்தும் பல கேள்விகள் எழுப்பப்பட்டன.

● கேள்வி: உங்களுடைய மக்களுக்கு சேவை செய்யவேண்டும் என்றால் ஏதாவது ஓர் அமைச்சு தேவை என்பதுதானே உங்களது நிலைப்பாடு?

■ பதில்: அமைச்சுப் பதவி இல்லாமலும் எமது மக்களுக்கு சேவை செய்ய முடியும்.

● கே.: அரசுக்கு ஆதரவு தெரிவித்த பின்னர் அமைச்சுப் பதவிகளை வழங்க ஜனாதிபதி முன்வந்தால் அதை ஏற்கமாட்டீர்கள் என்று உறுதியாகச் சொல்லமுடியுமா?

■ ப.: அதைப்பற்றி அப்பொழுது பார்ப்போம்.

● கே.: அப்போது எந்தெந்த அமைச்சுக்களை நீங்கள் கேட்பீர்கள்?

■ ப.: எந்த அமைச்சு நல்லது நீங்களே சொல்லுங்கள்...!

● கே.: எப்படியோ நீங்கள் அமைச்சுப் பதவியைப் பெறத்தான் போகின்றீர்கள். அமைச்சுப் பங்கீடுதான் இழுபறியில் இருந்ததாகக் கூறப்பட்டதே...?

■ ப.: இது காதல் கல்யாணம். இதில் சீதனப் பிரச்சினை இல்லை. நாங்களாகவே நிபந்தனையற்ற ஆதரவை வழங்குகின்றோம்.

● கே. : அரசுக்கு ஆதரவு வழங்கும் நீங்கள் ஏழாம் திகதி நாடாளுமன்றம் கூடும்போது அரச தரப்பின் பக்கம் போய் அமர்வீர்களா?

■ ப.: எத்தரப்பில் அமர்வோம் என்பது பிரச்சினை அல்ல. அரசுக்கு ஆதரவு வழங்குவோம் என்பது உறுதி. (ஐ-க)

## பிரபாவுக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மனுவில் பிரதிவாதிகளாக ரணில் விக்கிரமசிங்கவும், பிரதமர் மகிந்த ராஜபக்ஷவும் அவரின் அரசில் இடம்பெற்றுள்ள அமைச்சர்களும் குறிப்பிடப்பட்டுள்ளனர்.

இந்த எதிர்மனுத்தாரர்கள் அனைவரையும் ஒக்ரோபர் முதலாம் திகதி மேல் நீதிமன்றில் ஆஜராகும்படியும், மன்று உத்தரவு பிறப்பித்துள்ளது. (ஐ-7)




மேசைத் தொலைபேசி அதிரடி விலையில்

IDD லோக்கல் இணைப்புக்கள் உடன் எப்பிரதேசத்திற்கும் தெளிவான முறையில் வீடுகளில் பூட்டித்தரப்படும்.

உத்தரவாதம் உண்டு

விலை 14,000/= மட்டும்

IDD ரூபா 25/=மட்டும்

| அழைப்புக்களுக்கான கட்டண விவரம் | |
|---|---|
| மாதாந்தக் கட்டணம் | 150/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (பகல்) | 11/= |
| வெளிச்செல்லும் அழைப்பு 1 நிமிடம் (இரவு) | 6/= |
| உள்வரும் அழைப்பு 2 நிமிடம் இலவசம் அதன்பின்னர் (பகல்) | 4/= |
| உள்வரும் அழைப்பு (இரவு) | முற்றிலும் இலவசம் |

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை என அறியத்தருகின்றோம். அத்துடன், அன்ரனா மூலம் இயங்குகின்றது. மொபிடெல் இணைப்பு ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் முற்று முழுதான துணைநிறுவனம்.

மேலதி விவரங்களுக்கு:

OFFICE:- இல. 185, முதலாம் மாடி கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

021 222 7070, 0712 399 220, 0777 281 521.

SHOP:- 205, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். (சி-37433)(30-11-18)


# மீண்டும் யுத்தம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

டன் தனித்து பிரத்தியேகமாக - ஒளித்து - பேச்சு நடத்த விரும்பவில்லை.

புலிகளுடனான எமது பேச்சு மக்களுக்கும் நாட்டுக்கும் எதிர்க்கட்சிகளுக்கும் நாடாளுமன்றத்திற்கும் ஒளிவு மறைவு இன்றித் தெரியப்படுத்தப்படும். அந்தவகையில் ஜே.வி.பிக்கும் இந்தப் பேச்சுக்களின் முழு விவரங்களும் தெரிந்தே இருக்கும்.

புலிகளுடன் பேச்சு நடக்கும் அதேசமயம், சமாந்தரமாக ஜே.வி.பிக்கும் அது பற்றித் தெளிவுபடுத்தப்படும்.

ஐ.தே.கட்சியுடன் பேச்சு நடத்துவதைப் பார்க்க ஜே.வி.பியுடன் பேசி இணக்கம் காண்பது சுலபம். கடந்த தடவை ஐ.தே.க. எம்முடன் பேசி இணக்கம் கண்டுவிட்டு, எமது காலை வாரிவிட்டது. ஆனால், ஜே.வி.பி. அப்படிச் செய்யும் என்றும் நான் நம்பவில்லை.

ஜே.வி.பி. பெருமளவு இறங்கி வந்துள்ளது. எனவே, தேசிய அளவில் நல்ல விடிவு கிடைக்கும் என்ற நம்பிக்கை எமக்கு இருக்கிறது.

இந்த இனப்பிரச்சினை விவாகரத்தோடு சுமார் இருபது வருடங்கள் நான் நேரடியாகத் தொடர்புபட்டுள்ளேன். ஆரம்பத்தில் எனது கணவருடன் இணைந்து இம்முயற்சியில் ஈடுபட்டேன்.

முன்னர் எப்போதும் இல்லாத அளவிற்கு இப்போது அமைதிப் பேச்சுக்கள் மீளத் தொடங்கி, முன்நகர்ந்து, வெற்றி கண்டு இறுதித் தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கை எனக்கு ஏற்பட்டுள்ளது.

புலிகளும் 'ஈழம்' என்றும் 'தனிநாடு' என்றும் தாங்கள் முன்வைத்த கோரிக்கைகளை கைவிட்டு பல படிகள் இறங்கி வந்துள்ளனர். ஜனநாயக வழியிலும் வேறு மார்க்கத்திலும் தமிழர் பிரச்சினைக்குத் தீர்வு காணலாம் என்ற நிலைப்பாட்டுக்கு அவர்கள் வந்திருப்பது நல்ல அறிகுறி,

புதிய ஆட்சி மாற்றத்தின் பின்னர் யுத்த நிறுத்த மீறல்களும் பெருமளவு குறைந்துள்ளன.

அரசியல் கொலைகளை, சர்வதேச சமூகம் கடுமையாகக் கண்டித்துவருகிறது. ஐரோப்பிய யூனியன் அண்மையில் கடும் வாசகங்களுடன் அடங்கிய கண்டன அறிக்கையை வெளியிட்டது உங்களுக்கு நினைவிருக்கலாம்.

சர்வதேச சமூகத்தின் கருத்துக் குறித்துப் புலிகள் அதிகம் சிரத்தை கொண்டுள்ளனர். யுத்தத்தை மீளத் தொடங்கினால் சர்வதேச சமூகத்தின் எரிச்சல் தங்களுக்கு எதிராகத் திரும்பும் என்பதும் புலிகளுக்கு நன்கு தெரியும்.

ஆகவே, மீண்டும் யுத்தத்திற்குப் போய் பெரிதாகச் சாதிப்பதற்கு புலிகளுக்கு ஏதும் இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

எனவே, யுத்தம் வரவே வராது என நம்புகிறேன். அரசும் மீண்டும் இராணுவ - யுத்தம் - ஏற்படாமல் இருப்பதை உறுதி செய்யத் தன்னால் இயன்ற அனைத்தையும் செய்யும்.

நோர்வே நற்பணி செய்கிறது. கஷ்டமான காரியத்தை மிகுந்த சிக்கல்களுக்கு மத்தியில் - இடர்பாடுகளுக்கிடையில் - திறமையாக அது நிறைவேற்றிவருகிறது.

அரச கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கும், புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திற்கும் இடையில் வரையறை செய்வதில் தெளிவின்மை உள்ளது.

பல இடங்களை கண்காணிப்புக் குழு வரையறை செய்யாமல்விட்டுவிட்டது. இதுவே பல பிரச்சினைகள் ஏற்படுவதற்குக் காரணம்.

அரசு தன்னுடைய வரம்புக்குள் இயன்ற அனைத்தையும் செய்து தீர்வை எட்டுவதற்கு முயலும் என்பதை நான் உறுதிகூறுகின்றேன்.

அந்த வரம்புகள் பற்றி 2002 இல் தீர்வாக நாம் சமர்பித்த யோசனைகளில் பிரஸ்தாபித்துள்ளோம்.

ஆகக்கூடியது சமஷ்டிக் கட்டமைப்புவரை நாங்கள் போகலாம்.

சமஷ்டியிலும் பல கட்டமைப்புக்கள் உள்ளன. மாதிரிகள் உள்ளன. எது எமக்கு உகந்தது என்பதை சம்பந்தப்பட்ட இரு தரப்பும் பேசி முடிவு செய்துகொள்ள வேண்டும்.

அமைதி முயற்சிகளில் 75 வீதம்வரை அரசு இறங்கிவந்துள்ளது. மிகுதி 25 வீதம் விட்டுக்கொடுக்காமல் புலிகள் பிடிவாதமாக இருப்பதுதான் இப்போதைய பிரச்சினை.

ஆரம்பத்தில் இடைக்கால நிர்வாகம் குறித்துப் பேசும் அதேசமயம், இறுதித் தீர்வு குறித்தும் பேசவேண்டும் என நாம் கோரியது உண்மைதான். ஆனால், புலிகள் அதற்கு இணங்கிவராததால் நாம் விட்டுக்கொடுத்தோம்.

இடைக்கால சபையோ, இடைக்கால கவுன்ஸிலோ, இடைக்கால அதிகாரமோ அதை எப்படி வேண்டுமானால் நீங்கள் குறிப்பிடலாம். அது குறித்துப்பேசி, உடன்பாடுகண்டு, ஒப்பந்தம் செய்வோம். அதை நடைமுறைப்படுத்தத் தொடங்குவோம்.

அந்தச் சமயத்தில் - ஒப்பந்தம் செய்து மூன்று மாதத்தில் - இறுதித் தீர்வு குறித்தும் பேசவேண்டும் என்ற நிலைப்பாட்டுக்கு நாம் இறங்கிவந்தோம். ஆனால், அதற்கும் புலிகள் இணங்கவில்லை.

நாம் கருணா குழுவிற்கு உதவிசெய்கிறோம் என்ற புலிகளின் குற்றச்சாட்டு அபாண்டமானது.

பிரபாகரனைப் போன்றே அவரும் பயங்கரவாதிதான்.

பெண்கள், குழந்தைகள், வயோதிபர்கள் என அப்பாவிப் பொதுமக்களைக் கொன்றொழித்தவர்தான்.

ஒரு பயங்கரவாதியை எதிர்த்து, மற்றொரு பயங்கரவாதிக்கு நான் ஏன் உதவி செய்ய வேண்டும்?

நாங்கள் கருணாவுக்கு உதவிசெய்கிறோம் என்றால் அதற்கு ஆதரங்களைக் காட்டுங்கள் என்று புலிகளைக் கேட்டோம். ஆனால், அவர்களால் காட்டமுடியவில்லை.

புலிகளுக்கு கருணா விவகாரத்தால் சிக்கல் இருப்பது சரியே.

புலிகள் இயக்கத்தின் தலைமைக்கு எதிராகக் கிளம்பிய இரண்டாம் மட்டத் தலைவர்கள் எல்லோரும் கொல்லப்பட்டுவிட்டார்கள். கருணா விவகாரம் மட்டுமே இதற்கு விதிவிலக்கு. தலைமைக்கு எதிராகப் புரட்சி செய்தபின்னரும் இன்றும் உயிரோடு இருப்பவர் அவர்தான். எனவே, அதனால் புலிகளுக்கு சில அரசியல் பிரச்சினைகள் உண்டு. தலைமையை எதிர்த்துப் புட்சி செய்தவர் இன்றும் உயிரோடு ஸ்திரமாக இருப்பதால் அமைப்புக்குள் எழுந்துள்ள அரசியல் பிரச்சினையை சமாளித்துக் கையாள்வதற்காக கருணா விடயத்தில் அரசுமீது குற்றம் சுமத்தி அரசியல் செய்ய வேண்டிய தேவைப்பாடு அவர்களுக்கு இருப்பதாக நினைக்கின்றேன். அதனால்தான் அரசு மீது குற்றம் சுமத்துகின்றார்கள் போலும்.

அரசுக்கு இப்போது கிடைத்திருக்கும் இ.தொ.காவின் ஆதரவு சாமாதான முயற்சிகளை எட்டுவதற்கு மற்றொரு சாளரத்தைத் திறந்திருக்கிறது.

ஒவ்வொரு குழுவினதும் ஆதரவையும் இருகரம் விரித்து நாங்கள் வரவேற்கின்றோம் - இவ்வாறு அவர் தெரிவித்தார். (ஐ-க-7)

## புலிகளின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சேர்ந்தனர். தலைவரோடு ஆலோசனை நடத்தி உரிய வழிகாட்டல்களைப் பெற்றுக்கொண்டு செவ்வாய்க்கிழமை கூட்டத்துக்கு முன்னர் அவர்கள் ஹெலிகொப்டர் மூலம் மட்டக்களப்புக்குத் திரும்புவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்றுக் கிளிநொச்சி வந்துசேர்ந்த கையோடு புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை அவர்கள் சந்தித்தனர்.

அதன்பின்னர் தலைவர் பிரபாகரனை சந்திக்க அவர்கள் புறப்பட்டுச் சென்றனர். (ஐ-க)


வெளிவாரிப் பட்டப்படிப்பு கல்வியாண்டு 2005/2006

யாழ்., பேராதனை பல்கலைக்கழகங்களின் பட்டப்பாட நெறிக்கான

G.A.Q., FIRSTIN COMMERCE

எமது வழமையான விரிவுரையாளர்களும் இவர்களும் இணைந்து

| | |
|---|---|
| பொருளியல் | திரு.K.உதயன் |
| வர்த்தகம் | திரு.முரளி |

விரிவுரைகள் 05.09.2004இல் ஆரம்பமாகின்றன.

பட்டப்படிப்புகள் கல்லூரி,

57/18, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். (C/37407)(43)



விற்பனைக்கு

PENTIUM - IV கணனி விற்பனைக்கு உண்டு.

தொடர்புகளுக்கு: 0777251058. (36062)



NIRU TUITION CENTRE

KONDAVIL.

GENERAL CHEMISTRY

ஆரம்பம்: 04.09.2004 சனி 3.30 p.m.

திரு. N.மகேஸ்வரன் (36072)(38)


## மரண அறிவித்தல்

### திருமதி குணவதி புண்ணியசிங்கம்

அரியாலையைப் பிறப்பிடமாகவும் நல்லூர் தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி புண்ணியசிங்கம் குணவதி 02.09.2004 வியாழக்கிழமை காலமாகிவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற புண்ணியசிங்கத்தின் (ஓய்வுபெற்ற உத்தியோகத்தர் - தபால் திணைக்களம்) அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான அப்பாத்துரை - கண்மணியின் அன்பு மகளும் புஸ்பவினோதினி, ரதிமலர், மாலினி, சித்திராசினி, சுபாசினி ஆகியோரின் அன்புத் தாயாரும் தையல்நாயகி, சின்னத்துரை, காலஞ்சென்றவர்களான சதாசிவம், இராஜேஸ்வரி மற்றும் இரத்தினசிங்கம், குணநாயகி, சண்முகநாதன், வரதலட்சுமி, பத்மேஸ்வரன் ஆகியோரின் அன்புச் சகோதரியும் ஜீவரட்ணம், சந்திரகுமார், குமாரசூரியர், பாஸ்கரன் ஆகியோரின் மாமியாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (05.09.2004) ஞாயிற்றுக்கிழமை அன்று 9/6, கொஸ்தா மாவத்தை, கடவத்த வீதி, களுபோவில எனும் முகவரியில் இடம்பெற்று, காலை 10 மணிக்கு அன்னாரின் பூதவுடல் கொகுவல மயானத்தில் அக்கினியியுடன் சங்கமாகும்.

*இல.65, கச்சேரி நல்லூர் றோட், யாழ்ப்பாணம்.*
*T.P.: 0112-764107* (36077)(11-18)

தகவல்:
சந்திரகுமார் (சாந்தன்),
ரதிமலர்.

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேசன் (பிறைவேட்) நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி, 361ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 04.09.2004இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org